Registered as a Newspaper in Srilanka

# முஸ்லிம் குரல்

Muslim Kural صوت المسلم මුස්ලිම් කුරල් தருகை - 20 ரூபா

☆ 24 ஒக்டோபர் 2003 - வெள்ளிக்கிழமை ☆ 27 ஷ∴பான் - 1424 ☆ சுவடு - 23



இதயங்களில்
இருளகற்றி
ஒளி பெறச் செய்யும்
இறையருள் பொழியும்
புனித ரமழானை
வாஞ்சையுடன்
வரவேற்க
தயாராகுவோம்!

# 13 வருட தீராத துன்பத்திலிருந்து வடக்கு முஸ்லிம்களின் போராட்டம் வெடிக்கிறது!

மிக மோசமான இனச்சுத்திகரிப்பு 'அரசியல் பாசிசத்திற்கு' இலங்கையின் அரசியல் வரலாற்றில் முதன் முதலில் பலியானவர்கள் வடமாகாணத்து முஸ்லிம்களாகும். வேறு எந்தத் தேசிய இனத்தையும் மக்கள் திரளையும் இலங்கையின் ஒரு பெரும் நிலப்பரப்பிலிருந்து முற்றாக ஆதிக்க சக்திகள் இனச்சுத்திகரிப்புச் செய்ததாக இதுவரை வரலாறு இல்லை. அந்தள விற்கான நெஞ்சம் வெடித்துவிடும் பெரும் துயரத்தை சந்தித்தவர்கள்தான் வடக்குமாகாணத்து முஸ்லிம் மக்கள்.

உடுத்த உடையுடன் தமது தாயகத்தைவிட்டு ஒரு சில மணிநேர அவகாசத்துடன் துரத்தியடிக்கப்பட்ட வடமாகாணத்து முஸ்லிம்களுக்கு 13 ஆண்டுகள் கடந்தும் உரிய நீதி வழ்ங்கப்படவில்லை. அடிப்படை வசதிகள் அற்ற நிலையில், அகதிமுகாம்களிலும், அபயம் தரும் நிழல்களிலும் காலத்தைக் கடத்திவரும் முஸ்லிம்களின் மன உணர்வுகளையும், அவர் களது வாழ்வின் துயரத்தையும் இதுவரை நமது அரசியல் தலைமைகள் மட்டுமல்ல, முழு உலகமுமே கண்டு கொள்ளவில்லைதான்.



நமது வட மாகாணத்து முஸ்லிம்களின் துயர்களை எழுத்தில் வடிக்க முடியாது! அவ்வாழ்வை, அவ்வினச்சுத்திகரிப்பை அனுபவித்தவர்களுக்கே அதன் கொடூரமும் துயரமும் புரியும். அடக்கப்பட்ட, வஞ்சிக்கப்பட்ட வடமாகாணத்து முஸ்லிம் மக்களின் உணர்வுகள் திரட்சியுற்று மக்கள் போராட்டமாக இப்போது சமூக அரங்கிற்கு வந்துவிட்டது. தாமும் நிராகரிக்கப்பட முடியாத மக்கள் திரள் என்பதை நிரூபிப்பதற்கான அரசியல் முன்னெடுப்புக்களை 'பலாத்காரமாக வெளியேற்றப்பட்ட வடமாகாண முஸ்லிம்கள்' ஒன்றிணைந்து முன் கொண்டு செல்கின்றனர். இப்போராட்டத்திற்கு ஆதரவு அளிக்க வேண்டிய தார்மீக உரித்து அனைத்து முஸ்லிம்களையும் சார்ந்ததாகும். இப்போராட்டத்தின் ஊடாக நம்மை மோசமாக வஞ்சித்த, அதற்கு துணைபுரிந்து கொண்டிருக்கும் உள், வெளி ஆதிக்க அடக்கு முறைச் சக்திகளுக்கு நமது சமூகப்பலத்தைக் காட்ட வேண்டிய முக்கிய தருணமிது என்பதை நாமனைவரும் உணர்தல் வேண்டும்.

ஒக்டோபர் மாதத்தின் துயரங்களுக்கு மத்தியில், வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட தினங்களை மையமாக வைத்து ஒக்டோபர் 23ம் திகதி தொடக்கம் 30ம் திகதி வரை வடமாகாண முஸ்லிம்களின் குரல்கள் இலங்கை தழுவி சர்வதேச சமூகத்திற்கு முன் ஒலிப்பதற்கான தினங்களாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. நமது உணர்வுகளை இத்தினங்களில் நமது வடமாகாண முஸ்லிம் மக்களுக்காக அர்ப்பணிப்போம்! வடக்கு முஸ்லிம்களின் சுதந்திர வாழ்வு வடக்கு மண்ணிலேதான் மலர வேண்டும்! அந்நாள் வரை மக்களின் போராட்டம் தொடரும்.

# காலம் கடந்த பின்னாயினும் உதித்திருக்கும் அரசியல் ஞானம்

## முஸ்லிம்களின் விட்டுக் கொடுக்காத நிலைப்பாடே சமத்துவத் தரப்பு!

கடந்த 21ம் திகதி இலங்கைப்பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட "பேச்சுவார்த்தை மேசையில் சமத்துவத்தரப்பு" கோரிக்கை நமது அரசியல் அரங்கில் மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக வலுப்படுத்தப்பட்டுவிட்டது. இனிவரும் காலங்களில் தேசிய இனப்பிரச்சினைக்கானதீர்விலும்-அதற்கான பேச்சுவார்த்தையிலும் முஸ்லிம்கள் சமத்துவத் தரப்பாக உள்ளனர் என்கிற யதார்த்தத்தை, இலங்கை பாராளுமன்றம் அங்கீகரித்துள்ளது. இவ் யதார்த்தத்தை ஏற்றுக் கொள்வதற்கு இவ்வளவு காலம் எடுத்திருக்க வேண்டிய அவசியமில்லை என்பதை பலர் ஏற்றுக் கொண்டுவிட்டனர் போல் தெரிகிறது.

இப்பிரேரணையைக் கொண்டு வருவதற்கும், இதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் நமது முஸ்லிம் அரசியல் தலைமைகள் அனைத்தும் நமது மக்களின் நெருக்குதலால் ஒருமித்த அரசியல் நிலைப்பாட்டிற்கு வந்ததன் நேரடி



விளைவே இது. முஸ்லிம்களுக்கான விடயத்தில் வடக்கு கிழக்கு, தென்னிலங்கை, கட்சி, கருத்து வேறுபாடுகளை மறந்து நமது மக்களுக்கு உரித்தான நியாயமான அடிப்படை "அரசியல் பணியை" தொடர்ந்தும் நமக்கான அரசியல் தீர்வு முயற்சியில் அனைவரும் ஒருமித்துக்காட்டவேண்டும் என்பதே நமது மக்களின் விருப்பமும் நிலைப்பாடுமாகும்!

கடந்த காலத்தில் "சமத்துவத்தரப்பு" நிலைப்பாட்டிற்கு காயடித்தவர்கள், அதனைக் கொச்சைப்படுத்தியவர்கள், அதனைத் தவறாக வழிநடத்த முற்பட்டவர்கள்-முஸ்லிம்களுக்கு எதிராக ஏற்படுத்தப்பட்டுள்ள அரசியல் வியூகத்தினாலும், நமது மக்களின் பலமிக்க அழுத்தத்தினாலும்-இன்று "சமத்துவத்தரப்பை" கோரவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு தள்ளப்பட்டுவிட்டனர். இந்த நிலைமையானது நமது மக்களின், சமூக சக்திகளின் இது வரையான அரசியல் போராட்டத்திற்கும் உறுதிக்கும் கிடைத்த வெற்றியேயாகும்.

இந்த முடிவில் இருந்து, இந்த ஏற்றுக் கொள்ளலில் இருந்து நமது முஸ்லிம் அரசியலானது புதிய அரசியல் பரிமாணத்தையும் பண்பையும் பெற்றுவிட்டது. இது வெறும் தீர்மானமும்-வாய்வார்த்தையுமல்ல; இக்கோரிக்கையானது இலங்கை வாழ் அனைத்து முஸ்லிம் மக்களினது ஆன்மாவின் குரலாகும். இனிவரும் காலத்தில் நாம் இலங்கையில் தனித்துவமான அரசியல் ஏற்புக்குரிய தேசிய இனமாகவும்-நமது அரசியல், பொருளாதார, சமூக கலாசாரப்பிரச்சினைகள் தனித்துவமானவையாகக் கையாளப்படல் வேண்டும் என்கிற அரசியல் நிலைப்பாட்டிற்கு உரித்துடையவர்களாகியும் விட்டோம்.

ஆகவே, வரலாற்றில் நமது அரசியல் தலைமைகளின் பணி; முன்பு என்றுமில்லாத வகையில் சமகாலத்தில் அதிக பொறுப்பிற்கும் அரசியல் உறுதிப்பாட்டிற்குள்ளும் நிலைப்படுத்தப்பட்டு விட்டது. இனி எந்த முஸ்லிம் அரசியல் தலைமையும் சிங்கள, தமிழ் அரசியல் தலைமைகளும் "தனித்துவத்தரப்பு", "சமத்துவத்தரப்பு" நிலைப்பாடுகளில் இருந்து நழுவி முஸ்லிம்களின் தேசிய இனப்பிரச்சினையை அணுக முடியாது! அப்படி அணுக முயற்சிப்பது முஸ்லிம் மக்களுக்குச் செய்யும் மிகப்பெரும் துரோகமாகவே கருதப்படும்.

→ 10

# ரணிலின் இந்திய விஜயம் புலிகளுக்கு பலத்த அடியாகும்!

## சந்திரிக்காவுக்கு சாதகமானது என்கின்றனர் அரசியல் விமர்சகர்கள்?

யாரும் எதிர்பார்க்காத தருணத்தில் இந்தியா தனது காயை நகர்த்தி விட்டது. கடந்த நான்கு தினங்களுக்கு முன் பிரதமர் ரணில் விக்கிரம சிங்காவின் திடீரென்ற இந்திய விஜயமும் - இந்திய அரசுடனான இலங்கை அரசாங்கத்தின் இலங்கை இந்திய கூட்டுறவு இராணுவ பேச்சுவார்த்தையும் - விடுதலைப்புலிகளுக்கு பெரும் அச்சுறுத தலை தோற்றுவித்துள்ளது.

இவ் இராணுவ கூட்டுறவு ஒப்பந்தமானது பயிற்சி, ஆயுத வினியோகம் தேவையேற்படின் படைகளின் பிரசன்னம் என்பவற்றை உள்ளடக்கி உள்ளதாகத் தெரியவருகிறது. இது பற்றிய மேலதிக விபரங்களை இரு தரப்பும் வெளியிட மறுத்துள்ளன. இலங்கையுடனான எழுதப்படாத இவ் ஒப்பந்தத்திற்கு இந்திய உயர் தலைமை ஒப்புதல் அளித்தது பெரும் விடயமென இராணுவ ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். ஏனெனில் 50 வருடங்களுக்கு மேலாக இந்தியா எந்த நாடுகளுடனும் இவ்வகையான ஒரு இராணுவ ஒப்பந்தத்திற்கு முன்வந்ததில்லை.

கடந்த காலத்தில் இந்தியா, இலங்கை விவகாரத்தில் இராணுவ ரீதியாகத் தலையிட வேண்டுமென சந்திரிக்கா பல்வேறு தடவைகள் இந்தியாவைக் கேட்டிருந்தார் - அப்போதெல்லாம் இந்தியா இவ்விடயத்தில் மௌனம் சாதித்து வந்தது. ஆனால் இப்போது ரணில் விக்கிரமசிங்காவை இந்தியாவுக்கு அழைத்து இக்காய் நகர்த்தலை செய்திருப்பது சந்திரிக்காவுக்கு சாதகமான அரசியல் சூழலை ஏற்படுத்தி உள்ளது.



நாடுபூராகவும் அரசாங்கத்திற்கெதிரான உணர்வலைகளை ஏற்படுத்த சந்திரிக்கா தொடங்கி இருக்கும் வேலைத்திட்டத்திற்கும் இந்தியாவின் இக்காய் நகர்த்தலுக்கும் நெருங்கிய தொடர்புகள் இருப்பதாக ராஜ தந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# சிந்தித்துச் செயலாற்றுமாறு முஸ்லிம்களை கோருகிறார் மஹாதீர் முஹம்மத்

1.3 பில்லியன் எண்ணிக்கையான முஸ்லிம்கள் ஒன்றுபட்டு இஸ்லாத்தின் எதிரிகளுக்கெதிரான தமது பாதுகாப்பைச் சரிவர அமைத்துக் கொள்ள வேண்டும்.

இஸ்லாமிய உச்சிமாநாட்டின் 10வது தொடரை புத்ராஜயா மண்டபத்தில் 14.10.03இல் தொடக்கி வைத்த மலேசியப் பிரதமர் பின்வருமாறும் கூறினார். "நாம் எமது பலத்தை ஆயுத பலத்தில் மட்டுமன்றி அனைத்துத் துறைகளிலும் கட்டியெழுப்புதல் வேண்டும்.

முஸ்லிம் நாடுகள் வெறுமனே ஆயுத பலத்தில் மட்டுமன்றி ஒவ்வொரு துறையிலும் பலத்தைக் கட்டியெழுப்புதல் வேண்டும். எமது நாடுகள் உறுதியானவையாக, நன்கு நிருவகிக்கப்படுவனவாக, பொருளாதார, நிதித்துறைகளில் நன்கு உறுதி வாய்ந்தனவாக தொழில் நுட்ப ரீதியில் முன்னேறியவையாக இருத்தல் வேண்டும்

இதற்காக காலம் எடுக்கும் எனினும் இது நடக்க முடியாத காரியம் அன்று.



அத்துடன் இதற்காகச் செலவிடப்படும் காலம் என்றும் வீண் போகாது" - என மலேசியா பிரதம மந்திரி மஹாதீர் முஹம்மத் தனது தலைமையுரையில் கூறினார்.

முஸ்லிம்கள் தமக்கு வெற்றியைத் தரக்கூடிய திட்டத்தையும் செயற்திட்டத்தையும் பற்றிச் சிந்தித்துச் செயலாற்றுவதற்கு இது உசிதமான காலமாகும் என்றார் அவர்.

**இலங்கை முஸ்லிம்களின் சொந்தக்குரல்! சுதந்திரக்குரல்!! ஆதரவு தாருங்கள், வாங்கிப் படியுங்கள், எழுதுங்கள்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## முஸ்லிம் குரலை பாதுகாப்பது நமது மக்களின் பொறுப்பு!

இதுவரை வெளியான முஸ்லிம் குரல் பத்திரிகையினை அதாவது (1 தொடக்கம் 21 இதழ்) வரை வாசித்து அதில் தாங்கி வரும் செய்திகளாக இருந்தாலும் சரி. அதில் வரும் அரசியல் தொடர்களாக இருந்தாலும் சரி. அவை அனைத்தும் இன்றைய காலகட்டத்தில் முக்கிய புரட்சிகரமான சிந்தனைகளை வெளிக்காட்டி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

முஸ்லிம் குரல் பத்திரிகை' மூலம் முஸ்லிம்களின் அன்றாட நிகழ்வுகள், மறைந்து போன உண்மைச் சம்பவங்கள் என்பவற்றை எல்லாம் வெளிப்படுத்தி எமது மக்களின் உரிமைகளுக்கு உந்து சக்தியாக முஸ்லிம் குரல் திகழ்வது உண்மையாகும்.

எனவேதான் இதன் வெளிவருகை முஸ்லிம்களின் பிரசார ஊர்தியாக செயல்படுவது கண்முன்னான உண்மையாகும். இப்பத்திரிகையின் வளர்ச்சிக்கு எமது முஸ்லிம் தனவந்தர்கள் தமது சொத்துக்களை வேறு விதமான முறையில் செலவு செய்யும் இவர்கள். இப்படிப்பட்ட பத்திரிகை வளர்ச்சிக்கு உதவி புரியாமை கவலைக்குரியதாகும். முஸ்லிம்களுக்கு என ஒரு ஊடகம் தேவை என மார்தட்டிப் பேசுபவர்கள் பேச்சு அளவில் நிற்காமல் தங்களது பணங்களை இப்படிப்பட்ட முஸ்லிம்களுக்கு என வெளியாகும் ஊடகங்களின் பத்திரிகை வளர்ச்சிக்கு உதவ முன் வரவேண்டும்.

முஸ்லிம் குரல் பத்திரிகை இலங்கையில் வெளியாகும் மாற்றுப் பத்திரிகைகளின் வடிவமைப்பினைக் கொண்டதாகும். இதன் சேவை, தேவை. முஸ்லிம் குரல் நின்றுவிடாமல் எமது மக்களுக்காக ஒலிக்க வேண்டும் என இறைவனிடம் பிரார்த்திக்கின்றேன்.

ஏ.ஆர்.பரீத், சவளக்கடை, கல்முனை.

## முஸ்லிம் குரல் காலத்திற்கு ஏற்ப தனது பணியை செவ்வனே செய்கின்றது

சுதந்திரத்திற்கான போராட்டம் சம
அந்தஸ்த்துக்கான போராட்டம்
உரிமைக்கான போராட்டம் தனி
நாட்டுக்கான போராட்டம்
என்றெல்லாம் இந்த நாட்டு அரசுக்
கெதிராக போராட்டங்கள் வெடித்தபோ
தெல்லாம் போராட்டக்காரர்களின்
துப்பாக்கிகளும் தீச்சுவாலைகளும்,
இனவாதமும் அப்போராட்டங்களுக்கு
ஆதரவு நல்கிய அப்பாவி முஸ்லிம்களின்
உயிர்களையும், உடமைகளையும்
பலவந்தமாக
சூறையாடியதை யாரும் மறுக்கவோ
மறக்கவோ முடியாது.

கடந்த 20 ஆண்டு காலமாக முஸ்லிம்
சமூகம் எதிர் கொண்டு வருகின்ற
அடக்கு முறைகளுக்கும்
அட்டூழியங்களுக்கும் மத்தியிலும்
நிம்மதிக் காற்றை சுவாசித்துக்
கொண்டு வாழ்வது என்பது
கேள்வியான போது, ஒவ்வொரு
முஸ்லிம் ஆத்மாவில் இருந்தும் பொங்கி
வரும் உணர்ச்சிகள்,
பல்வேறு வடிவங்களில் வேரூன்றத்
தொடங்கியுள்ளன.

இவ்வாறான உணர்வுகளை நமது
சமூகத்தின் விடியல் நோக்கிய
பயணத்திற்கு உரமாக இட
வேண்டியதன் அவசியத்தை காலம்
கட்டாயப்படுத்தி இருக்கின்றது.

நமது சமூகத்திற்கெதிரான
அவலங்களையும், அட்டூழியங்களையும்
படம் பிடித்துக் காட்டுவதன் மூலம்
நமது சமூகத்தின் விடுதலை வேர்களை
ஒன்று திரட்டி நமது
சமூகத்தை சற்று தலை நிமிர்த்த
முடியும் என்ற நம்பிக்கையை
இன்றைய முஸ்லிம்
எழுத்தாளர்களும், முஸ்லிம்
ஊடகங்களும்
ஏற்படுத்தியிருக்கின்றன.

அவ்வாறான முஸ்லிம் ஊடகங்களில்
இன்று அதிகம் முஸ்லிம்களின்
கவனத்தை ஈர்த்த பத்திரிகையாக
முஸ்லிம் குரல் திகழ்கின்றது
என்பதை யாரும் மறுக்க முடியாது.
முஸ்லிம்களுக்கெதிரான
அவலங்களையும், அட்டூழியங்களையும்
அப்பட்டமாக, வெளிக் கொண்டு
வருகின்ற முஸ்லிம் குரல்
காலத்துக்கேற்ப தனது பணியை
செவ்வனே செய்கின்றது.

தேசிய ஊடகப் பரப்பில் முஸ்லிம்களின்
குரல் வளை நசிக்கப்படுகின்ற
இன்றைய காலப் பகுதியில் முஸ்லிம்
குரல் ஆற்றி வருகின்ற பங்களிப்பு
மகத்தானதாகும்.

இதனை தனது பிள்ளை போன்று
வளர்த் தெடுக்க வேண்டிய தார்மீகப்
பொறுப்பு இலங்கை வாழ் ஒவ்வோர்
முஸ்லிம் மீதும் கடமையாகும். குறிப்
பாக பாதிக்கப்படும் முஸ்லிம்கள்
இதனை கட்டி அணைத்து ஆதரித்து
வளர்த்தெடுக்க வேண்டும்.

எவ்வாறான அச்சுறுத்தல்கள்
வந்தாலும் முஸ்லிம் குரல் தனது
பணியை செவ்வனே செய்வதில்
எவ்வித தயக்கமும் காட்டக் கூடாது
என்ற முன்மொழிவுடன்

–அப்துல் ஜப்பார் சமீம் ஜே.பி. கல்முனை

## முஸ்லிம்களின் நியாயங்களின் உரிமைக் குரல் முஸ்லிம் குரல்

எமது சமூகத்தின் எழுச்சிக்குரலாக விளங்கும் முஸ்லிம் குரலின் சேவை என்றென்றும் பாராட்டத்தக்கது. சமூக கலாசார, பொருளாதார அரசியல் விடயங்களில் தெளிவான பார்வையைச் செலுத்தி வருவதை வரவேற்கின்றேன்.

அரசியல் தலைமைத்துவங்களின் தான் தோன்றித் தனங்களைச் சுட்டிக் காட்டி ஆலோசனை கூறும் அதேவேளை, அவர்களது பாராட்டத்தக்க விடயங்களைத் தட்டிக் கொடுப்பதையும் கண்டு மகிழ்வடைகின்றேன். மூதூர் திருமலைக் கப்பல் சேவையை மீண்டும் ஆரம்பித்தமைக்காக முஸ்லிம் குரல் சுவடு 15 அமைச்சர் ரவூஃப் ஹக்கீமை ஆசிரியர் தலையங்கத்தில் பாராட்டியிருந்தது.

அதேபோல தாகாநகர் முஸ்லிம் மகளிர் கல்விக் கல்லூரியில் பாடநெறிக்குறைப்புச் செய்திருந்ததை முஸ்லிம் குரல் சுவடு 17 இல் சுட்டிக் காட்டியிருந்தது. அதன் பயனாக இன்று இவ்விடயம் கல்வியமைச்சரிடம் எடுத்துச் சொல்லப்பட்டிருப்பதை யறிந்த எல்லோரும் மகிழ்வடைகின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள்தான் பெரும்பான்மையினர் என்பதை மூடி மறைத்து அந்நியர் ஊடகங்கள் மூலமாக பொய்பிரசாரம் செய்து கொண்டிருக்க நமது முஸ்லிம் குரல் கிழக்கில் முஸ்லிம்கள் தான் பெரும்பான்மையினர் என்ற யதார்த்தத்தை மறுக்கவோ, மறைக்கவோ முடியாதபடி ஆதாரத்துடன் எடுத்தியம்புகிறது. முஸ்லிம் குரலின் இப்பணிக்காக முஸ்லிம்கள் அனைவரும் நெஞ்சு நிமிர்த்துகின்றனர்.

முஸ்லிம்களிடமிருந்து ஆக்கிரமித்த காணிகளைக் கையளிக்கின்றோம் என்ற போர்வையில் காணிகள் அனைத்தும் தமிழருடையவை. அதில் முஸ்லிம்கள் குடியேறினர் என்ற அடிப்படையில் கிழக்குப் பிராந்தியத்தின் புலிகள் தயாரித்துக் கொடுத்த அறிக்கையை எதுவித எதிர்ப்பும் காட்டாமல் பசீர் சேகுதாவுது வாங்கிக் கொண்டதையும், இவ்வாறு முஸ்லிம்களைக் குழிதோண்டிப் புதைக்கும் நாடகத்தை ரமேஸும், பசீரும் ஆடியிருந்ததை முஸ்லிம் குரல் சுவடு 10 இல் அம்பலத்துக்குக் கொண்டு வந்திருந்தது.

இவ்வாறு தொடர்ந்தும் முஸ்லிம் மக்களின் நியாயங்களின் பக்கம் நின்று முஸ்லிம் குரல் சேவையாற்றிட எல்லாம் வல்ல அல்லாஹ் நல்லருள் புரிவானாக.

எம்.எம்.ஹமீஸ், நிந்தவூர்

## முஸ்லிம் உம்மாக்களின் இன்றைய தேவை...

இன்று பத்திரிகைகள் பணம்படைத்தவர்களதும், அதிகாரமுடையவர்களதும் கைகளாக இருந்து எமது முஸ்லிம் சமூகத்தின் குரல் வளையை நெரித்து எமது குரலை எத்திக்கும் ஒலிக்காமல் செய்து விடுகின்ற முனைப்புக்களில் ஈடுபடுகின்றன. எமது உம்மாக்களின் ஏக்கங்களையும் எதிர்பார்ப்புக்களையும் ஆதங்கங்களையும் உலகெங்கும் எடுத்துச் செல்வதற்கு ஒரு பத்திரிகை இல்லையே என ஏங்கிக் கொண்டிருந்த போது முஸ்லிம் குரலின் வருகை எமக்குள்ளும் நம்பிக்கை விதையை நட்டுள்ளது.

முஸ்லிம் குரலினை ஆழமாய் வாசித்தேன். அளவுடன் யோசித்தேன். அன்றிலிருந்தே நேசித்தேன். ஆம் முஸ்லிம் குரலை நெஞ்சுள் வைத்து பூசித்தேன். பூசித்துக் கொண்டே இருக்கிறேன். அற்புதமான விடயங்கள் அடங்கியுள்ளன. எந்த விடயத்தையும் சமூகத்திற்கு துணிச்சலாக சொல்லும் விதம் பாராட்டத்தக்கது.

எமது தேசத்தின் இருப்பினை பலப்படுத்துவதில் துணையாக இருக்கும் பத்திரிகைகளில் முஸ்லிம் குரல் முத்தாய்ப்பாயுள்ளது என்பதில் துளியும் சந்தேகமில்லை. எமது முஸ்லிம் குரல் முகமூடி போர்த்தியவர்களின் தில்லுமுல்லுக்களையும். திருகுதாளங்களையும் எல்லோருக்கும் இன்னும் இன்னும் வெளிச்சம் போட்டுக் காட்டி தொடரும் சமூகப்பணிக்கு எனது வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

முஸ்லிம் குரலின் தேவையை பற்றி, என்னால் முடிந்தளவுக்கு ஏனையோர்க்கும் எடுத்தியம்பி இதன் வளர்ச்சி இன்னுமோங்க அல்லாஹ்வை இறைஞ்சுகின்றேன்.
ஆமின்

செல்வி. ஏ. றிஸான் றோஸ், பொத்துவில்

## தண்ணீரில் தங்கம் தயாரிக்கலாம்!

வானம் தண்ணீரைத்தான் பொழியும், தங்கத்தைப் பொழியாது. வாஸ்தவம்தான்! தண்ணீரைத் தங்கமாக்கும் மந்திரவித்தை எனக்குத் தெரியும் உங்களுக்குத் தெரியுமா?

அதை எந்த மந்திரவாதியும் எனக்குச் சொல்லித்தரவில்லை. ஒரு பாமர மனிதனைப் பார்த்து படித்துக் கொண்டேன் நான்.

அவன் தினந்தோறும் தண்ணீரைத் தங்கமாக்கிக் கொண்டிருந்தான்.

அந்த மந்திரவித்தையை நெற்றி வேர்வை மணிகளை நெல்லு மணிகளாக்கும் பாமர விவசாயியிடம் படித்துக்கொண்டேன் நான்.

என்ன? தண்ணீரிலிருந்து தங்கம் தயாரிக்க உங்களுக்கும் ஆசையா?

தங்கம் செய்யலாம், தாராளம் தங்கம் செய்யலாம்.

தண்ணீரோடு உங்கள் வேர்வையைக் கலந்தால் தங்கம் செய்யலாம், தாராளம் தங்கம் செய்யலாம்..

## நீ ஃபீனிக்ஸாவது எப்போது?

வடக்கின் ஓநாய்கள்
உன்னை விரட்டி விரட்டிக்
கடித்துக் குதறுகின்றன.

தெற்கின் காவல் நாய்களோ
பராக்குப் பார்த்தபடி
வாளாவிருக்கின்றன.

என் ஆட்டுக் குட்டியே!
உடைந்துபோன
உன்கொம்புகளை நீ தீட்டிக்கொள்

வெறிபிடித்த சுறாக்கள்
உன்னை
வேட்டையாடுகின்றன.

திமிர் பிடித்த
திமிங்கிலங்களும் சேர்ந்து
திட்டம் தீட்டுகின்றன.

என்னருமை டொல்ஃபினே!
சேதமடைந்த உன் செட்டைகளைச்
செப்பம் செய்துகொள்

பனங்காட்டு நாகங்கள்
உன்மீது விஷம் கக்குகின்றன

அரச மரத்தடிப் புடையன்களும்
புடைசூழ்கின்றன.

காயப்பட்டது போதும்
என் அணில் பிள்ளையே!
நீ கீரிப்பிள்ளையாவது எப்போது?

வட மயான ரத்தக் காட்டேரிகள்
உன் உதிரம் குடிக்கின்றன
தென்சுடலை வல்லூறுகளும்
அதற்குத் துணை போகின்றன.

பனங்காய் சுமந்தது போதும்
என் சிட்டே!
நீ அபாபீலாவது எப்போது?

வடகீழ் காட்டுத் தீ
உன்னை நித்தமும்
வாட்டி வதைக்கிறது.
தென்மேல் பருவக்காற்றும்
அதற்கு ஒத்தூதுகிறது
எரிந்து சாம்பலானது போதும்
என் பிரியத்துக்குரிய விட்டிலே!
நீ ஃபீனிக்ஸாவது எப்போது?


உஸ்மான் மரிக்கார்




பேராசிரியர் வீ.கே. கணேசலிங்கம் எழுதிய "ஒரு பேராசிரியரின் வாழ்க்கையும் கல்விச் சிந்தனைகளும்" நூலின் அறிமுக விழாவை தென்கிழக்குப் பல்கலைக்கழக ஊடகவியல் மாணவர் பேரவை, சென்ற 2003.10.11 ஆம் திகதி, அட்டாளைச்சேனை ஆசிரியர் கலாசாலை ஆராதனை மண்டபத்தில் நடாத்தியது.

அவ்விழாவுக்கு தலைமை வகித்த விரிவுரையாளர் எம்.ஐ.எம். முஸாதிக் உரையாற்றுவதையும்; மேடையில் விரிவுரையாளர் எம்.ஏ.எம். சமீம், அட்டாளைச்சேனை கல்விக் கல்லூரி பீடாதிபதி ஏ.எல்.ஏ றஸூல், தெ.கி.ப கலை கலாசார பீட பீடாதிபதி எம்.ஐ.எம்.கலீல், பிரதம அதிதியாக வருகை தந்த, கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் (கோட்டுடன்) எம்.எஸ்.மூக்கையா விரிவுரையாளர் ரமீஸ் அப்துல்லாஹ், அட். ஆசிரியர் கலாசாலை அதிபர் எம்.எஸ். அப்துல் ஹபீல் (மௌலவி) நூலாசிரியர், பேராசிரியர் வீ.கே. கணேசலிங்கம் ஆகியோர் வீற்றிருப்பதையும் காணலாம்.

படமும் தகவலும்: அக்கரைப்பற்று செய்தியாளர்




## நாளுக்கு நாள் அழிவுக்குள்ளாகி வரும் வெலித்தர முஸ்லிம் வித்தியாலயம்




கல்வி அதிகாரிகளினதும் அரசியல்வாதிகளினதும் பாராமுகம் காரணமாக நாளுக்கு நாள் அழிவுக்குள்ளாகி வரும் பலப்பிட்டிய, வெலித்தர முஸ்லிம் வித்தியாலயத்தை இழுத்து மூடப்படும் நாள் அதிக தூரத்தில் இல்லை என்று ஊரார் தெரிவிக்கின்றனர்.

வெலித்தரை முஸ்லிம் வித்தியாலயமானது அம்பலாங்கொடை மாகாண கல்வி அலுவலகத்துக்குரிய ஒரே ஒரு முஸ்லிம் பாடசாலையும், பிரதான காலி மாவட்டத்தில் அமைந்துள்ள முஸ்லிம் பாடசாலைகளுள் காலி வீதியில் அமைந்துள்ள ஒரேயொரு முஸ்லிம் பாடசாலையுமாகும்.

கடந்த 07 தசாப்தங்களாக இப்பிரதேசத்தில் வசிக்கும் முஸ்லிம் மாணவர்களின் தமிழ் மொழிக்கல்வியை மேம்படுத்துவதற்காக இக்கல்லூரியானது மிகப்பாரியளவில் தனது பங்களிப்பை நல்கியுள்ளது. ஆனால் 80-ம் ஆண்டிலிருந்து இன்றுவரை கல்வி அதிகாரிகளால் மிகக் குறுகிய அளவிலான கவனிப்பே செலுத்தப்படுகிறது.

01-ம் ஆண்டு முதல் 13-ம் ஆண்டு வரை வகுப்புக்கள் நடைபெறுகின்ற இந்தப் பாடசாலையில் நூற்றுக்கணக்கானோர் கல்வி கற்கின்றனர். ஸ்ரீ.ல.மு.கா. தலைவரும், முன்னாள் அமைச்சருமான மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்களின் ஆலோசனையின் பேரில் ஜனாதிபதி சந்திரிக்கா அம்மையாரினால் 'அமற்றி ஸ்கூல்' என்ற முறைமையின் கீழ் உள்வாங்கப்பட்டது. அம்பலாங் கொடை மாகாணத்தில் ஸ்ரீ சுமங்கல மகா வித்தியாலயத்திற்கு அடுத்தபடியாக 'அமற்றி ஸ்கூல்' முறைமையின் கீழ் இப்பாடசாலை மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

06-ம் ஆண்டிலிருந்து ஆங்கிலப்பாடத்திற்குப் புறம்பாக வேறு 03 பாடங்களை ஆங்கில மொழி மூலம் கற்பிக்கப்படுவதே 'அமற்றி ஸ்கூல்' கல்வி முறைமையாகும்.

பலப்பிட்டிய நகரத்தில் அமைந்துள்ள 'அமற்றி ஸ்கூல்' முறைமைக்கு உட்பட்ட இந்தப் பாடசாலை அழிவுக்குள்ளாவதை பார்த்துக் கொண்டிருப்பது கவலைக்குரியது. மிகவும் பள்ளத்தில் அமைந்துள்ள இப்பாடசாலை மழைக்காலங்களில் பூரணமாக நீரில் மூழ்கிவிடுகிறது. பாடசாலையைச் சூழவுள்ள பலவிதமான தொழிற்சாலைகள் மற்றும் சுயதொழில் நிலையங்களில் தேங்குகின்ற மழை நீர் பாடசாலை வளவுக்கே வெட்டிவிடப்படுகிறது. இதன் காரணமாக பாடசாலையின் விளையாட்டுத்திடல் ஒரு நீர்த்தடாகத்தைப் போன்று காட்சியளிக்கிறது.

பாடசாலை நூலக கட்டிடத்தின் நிர்மாண வேலைகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ளது. புதிய விஞ்ஞான கூட கட்டிடத்தின் கட்டிட பணிகளும் 03 வருட காலமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளன.

பாடசாலை சுற்றி மதில் இல்லாமை காரணமாக பாடசாலை பாதுகாப்பற்ற நிலையில் உள்ளது. நூற்றுக்கணக்கான மாணவர்களும், ஆசிரியர்களும் பாடசாலை வளவில் அமைந்துள்ள ஒரேயொரு மலசலகூடத்தையே பயன்படுத்த வேண்டியுள்ளது.

இப்பாடசாலை தனித்து விடப்பட்டுள்ளது என்றே கூற வேண்டியுள்ளது. இது பற்றி அம்பலாங்கொடை மாகாண கல்வி அலுவலகத்திற்கும், கல்வி அமைச்சருக்கும் பல முறை முறைப்பாடு செய்தும் பயனில்லை. இது பெருங் குறைபாடாகவே உள்ளது. ஆகவே, சம்பந்தப்பட்டவர்கள் இவ் விடயத்தில் கூடிய கவனம் செலுத்துமாறு பெற்றோர்களும், ஆசிரியர்களும், மாணவர்களும் வேண்டிக் கொள்கின்றனர்.

றிஸ்வி முஹம்மட், பலப்பிட்டிய

### தோனாவில் மேல் ஒரு வகை புற்கள்

சாய்ந்தமருது பிரதேசத்துக்குட்பட்ட தோனாவில் சில வகையான தாவரங்கள் வளர்ந்து வருவதனால் அதிலிருந்து வரும் துர்நாற்றத்தால், நுளம்பு உருவாகுவதற்கு இந்த தாவரம் உதவுகின்றது. இதிலிருந்து வரும் நுளம்பு தொல்லையினால் அருகில் இருக்கும் மக்கள் பெரும் பிரச்சினைக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. தாமதிக்காமல் உடனடியாக சுகாதார பணிப்பாளர் நடவடிக்கை எடுப்பாரா?

கே.எல்.ஹில்மி, சாய்ந்தமருது 13

## பிரிந்தணியினர் ஓரணிப்படுவார்களா?

மர்ஹூம் அஷ்ரஃப் அவர்களுக்கு உண்மையாகவே ஆற்ற வேண்டிய கடமைப்பாடுகளென வரிசைப்படுத்தும் போது அவரது மக்கள் தொடர்பான எண்ணங்கள் அரசியல் அபிலாசைகள், சமூக ஒற்றுமைக்கான முன்னெடுப்புக்கள் என்பவைகளை சம்பந்தப்பட்டவர்கள் செயற்படுத்தல் வேண்டும். அரசியல் ரீதியிலாக முஸ்லிம்கள் மிகப் பெரும் நிர்ணய வல்லமை கொண்ட சக்தியாக அடையாளப்படுத்திட வித்திட்ட மு.கா என்ற விருட்சம் இன்று கிளை முறிந்து, இலைகள் உதிர்ந்து, வேர் அறுந்து தள்ளாடத் தொடங்கியிருப்பதைக் கண்ணுற்றும் ஆக்கபூர்வ மான செயற்றிட்டங்களுக்கான வழிகளுக்கு முயற்சிக்காமல் பொறுப்பற்றிருப்பது இன்னும் புரியாததாகவே உள்ளது. மூன்றாகப் பிளவு பட்டுள்ள மு.கா முக்கியஸ்தர்கள் என்றாவது ஓரணிப்படுவார்கள் என்ற பொதுவான மக்கள் எதிர்பார்ப்பின் காலம் நீண்டுகொண்டிருப்பதைத் தவிர வேறில்லை.

[illegible]

## பாதை திருத்தப்படுமா?

கொழும்பு 9 தெமடகொட பாடசாலை ஒழுங்கையினூடாக ஒரு வழி பாதையில் அமைந்துள்ள புகையிரத பாலத்தின் கீழ் குன்றும் குழியுமாக இருப்பதால் எந்நேரமும், அசுத்த நீர் நிரம்பிக் காணப்படுகிறது. தொழிலுக்கு செல்பவர்கள் வாகனங்களிலும் கால் நடையாகவும் இப்பாதையூடாகவே பயணம் செய்கிறார்கள். இப்பாதை குன்றும் குழியுமாக இருப்பதால் வாகனங்கள் விரைந்து செல்ல முடியாதுள்ளது. வாகன சக்கரங்கள் குழிகளில் இறங்கி ஏறும்போது அசுத்த நீர் வீசித் தெறிப்பதால் பாலத்தின் கீழ் போகும் பாதசாரிகள் பெரும் அவலத்திற்குள்ளாகிறார்கள். இச்சிறிய ஒற்றை வழி-ஒழுங்கையை சில முச்சக்கரவண்டி ஓட்டுனர்களும், தள்ளுவண்டி மீன், காய்கறி வியாபாரிகளும் இரட்டைவழிப் பாதைபோன்று பாவிப்பதால் வாகன போக்குவரத்து நெருக்கடி ஏற்படுகிறது. இரவு நேரத்தில் மின் ஒளி இல்லாததால் பாலத்தின் கீழ் போக்குவரத்து செய்ய மக்கள் அச்சப் படுகிறார்கள். மற்றும் தெமடகொட கொட்டவலமுல்ல சனசமூக வரவேற்பு மண்டபத்திற்கு அருகில் குப்பை கூழங்கள் போடப்படுகிறது. அவ்விடத்தில் பொதுமக்கள் பாவனைக்கான குப்பைத்தொட்டி இல்லாத குறைபாடால் அப்பகுதி குடியிருப்பாளர்கள் குப்பை கூழங்களை வரவேற்பு மண்டப அருகில் வீசி விடுகிறார்கள். இதனால் திருமணம் விருந்துபசார நிகழ்ச்சிகளுக்காக அம்மண்டபத்தை பாவிக்கும் மக்களும் மண்டப குறுக்கு பாதையூடாக மாளிகாவத்தை நீதிமன்றம், நீர் வழங்கல் வடிகால் சபை, மாநகர மிருக வைத்திய இலாக ஆகியவற்றிற்கு செல்லும் மக்களும் அசௌகரியத்திற்கு ஆளாகிறார்கள். இக்குறைபாடுகளை துரிதமுறையில் நீக்க கொழும்பு மாநகர சபை நடவடிக்கை எடுக்குமா.

எம்.எப். சல்மான் பாரிஸ் தெமடகொட, கொழும்பு - 09

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண முஸ்லிம்களின் கோரிக்கைகள்!

ஜனாதிபதி என்ற வகையிலும் இலங்கையின் இனப்பிரச்சினையினைத் தீர்ப்பதற்காக நடைபெறும் சமாதானப் பேச்சுவார்த்தைகளின் குறிப்பான தொடக்கதாரி என்ற வகையிலும், அதிகாரம் உள்ளவர் என்ற பொறுப்பிலும் இலங்கையின் வட மாகாணத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களால் ஏகமனதாக ஏற்கப்பட்ட பிரேரணைகளை இத்துடன் சமர்ப்பித்துள்ளோம்.

(இறுதியானதும், நியாயமானதுமான முடிவைத் துரிதப்படுத்துவதற்கும், அத்தகைய முடிவைக் கண்டுபிடிக்க உதவுவதற்கும்)

இலங்கையின் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கான கட்டாயத்தில் உட்படுத்தப்படுவதற்காகப் பின்வரும் தீர்மானங்கள் இலங்கையின் வட மாகணத்தில் இருந்து இன ரீதியாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களால் நிறைவேற்றப்பட்டுள்ளன.

<u>தொடர்புடைய எல்லாத்தரப்பினரும் எற்க வேண்டியதும், அங்கீகரிக்க வேண்டியதுமான விடயங்கள்</u>

01. வடக்கு கிழக்கு மாகாணங்கள் உட்பட இலங்கையில் முஸ்லிம்கள் பல நூற்றாண்டு காலமாக இலங்கையின் பூர்வீகக் குடிகளாவர்.

02. முஸ்லிம்கள் சுதந்திரமானதும், இறைமையுடையதும், சுதந்திரம் உடையவர்களாவர். அத்துடன், அவர்கள் தனியான சிறுபான்மை இனத்தினராவர்.

03. இலங்கையின் ஆரம்ப குடிமக்கள் என்ற வகையில் முஸ்லிம்கள் முழுமையானதும், பிற சமூகங்கள் அனுபவிக்கக் கூடிய மட்டுப்படுத்தப்படாததுமான அடிப்படை உரிமைகளை, சுதந்திரங்களை, சலுகைகளை அனுபவிக்க உரிமையுள்ளவர்களாவர்.

04. இலங்கையில் குறிப்பாக வடக்கு-கிழக்கில் வாழும் முஸ்லிம்கள் எத்தரப்பினராலும், எக் கட்சியினராலும் அநாவசியமுறையில் பணப் பறிப்புகளுக்கு உள்ளாக்கப்படக்கூடாது.

05. வடக்கு -கிழக்கு மாகாணங்கள் உட்பட இலங்கையின் எப்பாகத்திலும் வாழக்கூடிய முஸ்லிம்கள், இந்நாட்டின் அரசியல் அமைப்புத்திட்டத்திற்கேற்ப, காணி விடயமாயினும், வேறு எவ் விடயமாயினும் சரி வாங்கவோ, அனுபவிக்கவோ உரிமை உள்ளவர்களாவர்.

06.வடக்கு- கிழக்கு மாகாணங்கள் உட்பட இலங்கையில் எப்பகுதியில் வாழும் முஸ்லிம்களும் தம்மிடையே புழக்கத்திற்கான பாஷைகளைத் தெரிவு செய்யலாம். அரசியல் அமைப்புத் திட்டத்தின்கீழ் தம்மிடையே அல்லது வேறு எந்தப் பிரிவினருடனும் சரி தொடர்பு கொள்வ தற்கான ஏற்பாடுகளைச் செய்யும் சுத ந்திரம் உடையவர்களாக இருத்தல் வே ண்டும்.

07. கட்டாயப்படுத்தப்பட்டதால், வடக்கில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட உண்மையான இழப்புக்களை கணக்கீடு செய்வதற்காக, ஒரு ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட வேண்டும்.

08. கட்டாயப்படுத்தப்பட்டு, வெளியேற்றப்பட்ட வடக்கு முஸ்லிம்களுக்குரிய காணி, காணி சம்பந்தமான சொத்துக்களும், 1990ம் ஆண்டு ஒக்டோபர் மாதத்திற்கு முன் இருந்த படியான சட்டபூர்வமான உரிமையாளர்களுக்கு மீளளிக்கப்பட வேண்டும். கட்டாயப்படுத்தப்பட்ட வெளியேற்றத்தின் விளைவாக தமது காணி களை, வீடுகளை விற்க வேண்டி எற்பட்ட வர்களுக்கு அது மீளளிக்கப்படல் வே ண்டும்.

09. 1990ம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் அவர்கள் குடியிருந்த ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தின் பிரிவிலும், விகிதாசாரப்படி வட மாகாணத்தில் அரச காணிகள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

<u>வடக்கில் தமது சொந்த இடங்களில் இருந்து இன ரீதியாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் நிரந்தரமானதும், ஏற்றுக்கொள்ளக்கூடியதுமான தீர்வு காணப்படும் வரை</u>

10. அதிகமாக வாழும் இடங்களில், இலங்கையின் அரசியல் அமைப்புத்திட்டத்திற்கேற்ப எல்லா அடிப்படை உரிமைகளையும் அனுபவிக்க அவர்கள் உரித்துடையவர்கள் ஆவர்.

11. அவர்கள் தமது உயிர் வாழ்வுக்காக, வழங்கப்படும் உதவிகளிலேயே தங்கி உள்ளதால், அவர்களுக்கு வழங்கும் நிவாரணங்கள் இப்போது நிலவும் வாழ்க்கைச் செலவுக்கேற்ப பொருத்தமானதாக அமைய வேண்டும்.

வடக்கில் இருந்து அங்கீகாரம் அற்ற முறையிலும், அநீதியாகவும், பலவந்தமாகவும் முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டமை குறித்து விசாரணை செய்வதற்காக, ஒரு ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமிக்கும்படி நாம் மேன்மை தங்கிய தங்களை பணிவாகவும், ஆர்வத்துடனும் வேண்டிக் கொள்கிறோம்.

## பின்லாடன் எச்சரிக்கை!

கட்டாரின் அல்-ஜஸீரா தொலைக்காட்சி ஊடாக பின்லாடன் அவர்களின் புதிய ஒலி நாடாவொன்று ஒலிபரப்பப்பட்டது. அமெரிக்காவிலும், அதனைச் சுற்றிலும் தற்கொலை குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்படும் என்றும் ஈராக்குக்கு எதிராக அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு துணை போகும் ஏனைய நாடுகளுக்கும் பின்லாடன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## அமெரிக்கா மீது மீண்டும் தாக்குதல் மேற்கொள்ளப்படும்



அல்-ஜஸீரா தொலைக்காட்சி மூலம் முழு அராபிய உலகிற்கும் ஒலிபரப்பப்பட்ட இந்த ஒலிநாடாவுக்குக் குரல் கொடுத்தவர், ஈராக்கில் அமெரிக்க இராணுவத்தினருக்கு உதவி ஒத்தாசைகள் புரியும் ஈரானியரையும் எச்சரித்தார். அமெரிக்காவிற்கு எதிராக புனித யுத்தத்தை ஆரம்பிக்குமாறு அண்டை நாடுகளிலுள்ள அரேபிய இளைஞர்களிடம் அவர் வேண்டுகோள் விடுத்தார். அமெரிக்காவுக்கு உதவி வழங்குகின்ற பிரித்தானியா, ஸ்பெயின், அவுஸ்திரேலியா, போலந்து, ஜப்பான், இத்தாலி போன்ற நாடுகளுக்கு எதிராக குறித்த காலத்தில், குறித்த நேரத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஈராக்குக்கு எதிராக அமெரிக்காவுடன் ஒத்துழைக்கும் முக்கியமாக, குவைத்தையும் எச்சரித்துள்ளார். அமெரிக்காவின் அண்மைய வேண்டுகோளுக்கிணங்க துருக்கியும், தென் கொரியாவும் ஈராக்கிற்கு தமது இராணுவத்தை அனுப்பிவைக்க இணங்கியுள்ளன.

இந்த ஒலிநாடாவானது மிகவும் நம்பகமான ஒருவரிடமிருந்தே கிடைத்ததாக அல்-ஜஸீராவின் செய்தி ஆசிரியர் இப்ராஹீம்ஹிலால் அவர்கள் தெரிவித்துள்ளார்.


கொம்பியூட்டர் துறையின் முன்னோடி

இன்போ டெக் சிஸ்ரம்



எம்.பீ.சீ.எஸ். வீதி, ஓட்டமாவடி. 065-2257123.

- இப்பொழுது மாணவ, மாணவிகளின் நலன் கருதி ரமழான் கால விடு முறையை கருத்திற் கொண்டு, எமது நிறுவனம் மற்றுமோர் புதிய பாடநெறி யினை ஆரம்பித்துள்ளது.
- மாணவர்கள் தங்கள் வசதிக்கேற்ப பாட நேரங்களை ஒழுங்கு படுத்திக் கொள்ளும் வசதி.
- வெற்றிகரமாக பயிற்சி நெறியினை பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு அமெரிக்க அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.
- இன்னும் எமது நிறுவனத்தின் மூலம் ஆங்கில, தமிழ், அரபு கடிதங்கள், லோகோ டிசைனிங், இறப்பர் முத்திரை, கடிதத்தலைப்புக்கள், லேபள்கள், திருமண அழைப்பிதல்கள், கலண்டர்கள் ஆகியன நவீன வடிவமைப்புடன் செய்து தரப்படும்.
- உங்கள் வசதிக்கேற்ப கணினிகளை குறைந்த விலையில் கொள்வனவு செய்து கொள்ளவும் முடியும்.


## பதுளையில் இனவாதத்தைப் பரப்பும் கருத்துக்கள் விதைக்கப்படுகின்றன. (ஊவா செய்தியாளர்)

பதுளை "பவர்" நிறுவனத்தின் ஏற்பாட்டில் கடந்த 17ம்திகதி முதல் 19ம் திகதி வரை "சமஷ்டிமுறை" என்ற தொனிப்பொருளில் மூன்று நாள் கருத்தரங்கொன்று பதுளை "துங்கிந்த போல்ஸ்இன்" ஹோட்டலில் நடைபெற்றது.

பவர் பவுண்டேசன் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கே. வேலாயுதம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தாய்வில் முஸ்லிம்கள் தொடர்பாகப் பேசப்பட்ட விடயங்கள் அதிக மனத்தாக்கத்தை முஸ்லிம்களுக்கு ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையில் தற்போது நடைபெறும் சமாதான பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம்களும் தனித்தரப்பாக கலந்து கொள்வது அவசியமா என்ற கேள்விக்கு இலங்கையின் சமாதான பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம்கள் தனித்தரப்பாக கலந்து கொள்ளக் கூடாது அவர்களுக்கு இந்த நாட்டில் வரலாற்று நெடுகிலும் எந்த விதமான இழப்புக்களும் நடந்ததில்லை. மாறாக இலங்கையை ஆட்சி செய்த எல்லா அரசாங்கங்களிலும் நன்றாக சலுகைகளை அனுபவித்தே வந்திருக்கின்றனர். அதேவேளை 1983 வன் செயல்களில் ஈடுபட்டு முழுமையாக இலாபமடைந்தவர்களும் முஸ்லிம் கள்தான்" என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது.

மேற்குறிப்பிட்ட கருத்துக்களை கூறியவர்கள் கடந்த காலங்களில் பதுளையில் ஏற்பட்ட பர்தா பிரச்சினையின் போது தமது பாடசாலையில் கடமை புரிந்த சகோதர முஸ்லிம் ஆசிரியர்களுக்கெதிராக பாடசாலை மாணவர்களை வன்முறைக்கு தூண்டி விட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ் சகோதரிகளுக்கு முஸ்லிம் பெண்களைப் போல் முக்காடிட்டு அகதி முகாம்களில் சேர்த்து விட்ட சம்பவங்கள் மற்றும் சகோதர தமிழர்களின் சொத்துக்கள் உடமைகள் முஸ்லிம்களால் பாதுகாக்கப்பட்டு உரிய விதத்தில் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது போன்ற சம்பவங்களை ஆதாரங்களுடன் பட்டியல் போட்டுக் காட்டலாம். இது போன்ற விஷக்கருத்துக்களை மக்கள் மத்தியில் பரப்புவது தெளிந்த நீரை களங்கப்படுத்தும் வக்கிரப்புத்தியாகும்.

மேலும் இவ்வாறான கருத்தரங்குகளின் மூலம் மக்கள் அபிப்பிராயத்தை உண்டுபண்ணுவதாயின் சகல இன மக்களையும் சமமாக பங்கு கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்பதை இவற்றுக்கு நிதியுதவிகள் வழங்கும் அரச சார்பற்ற நிறுவனங்கள் விளங்க வேண்டும்.

இது விடயங்களில் மக்கள் பிரதிநிதிகளாக ஏற்றுக் கொள்ளப்படும் மு.வேலாயுதம் போன்ற சமூகத்தலைவர்களும் பக்கச் சார்பற்ற முறையிலும் நிதானத்துடனும் செயல்பட வேண்டியதன் அவசியத்தை உணர வேண்டும்


**Muslim Kural News Paper**

முஸ்லிம் குரல் பத்திரிகை

181/1, Ananda Mawatha, Colombo -10

**Advertisement Rates**

**விளம்பரக் கட்டண விபரம்**

| Page Size<br>பக்க அளவு | Colour or Black & White<br>கலர் அல்லது கறுப்பு வெள்ளை | Rate<br>கட்டணம் |
|---|---|---|
| Full Page<br>முழுப் பக்கம் | 4 Colour (4 கலர்)<br>2 Colour (2 கலர்)<br>Black & White (கறுப்பு வெள்ளை) | Rs. 60,000/-<br>Rs. 40,000/-<br>Rs. 30,000/- |
| Half Page<br>அரைப் பக்கம் | 4 Colour<br>2 Colour<br>Black & White | Rs. 30,000/-<br>Rs. 20,000/-<br>Rs. 15,000/- |
| Quarter Page<br>கால் பக்கம் | 4 Colour<br>2 Colour<br>Black & White | Rs. 15,000/-<br>Rs. 10,000/-<br>Rs. 7,500/- |
| Half - Quarter Page<br>அரைக்கால் பக்கம் | 4 Colour<br>2 Colour<br>Black & White | Rs. 7,500/-<br>Rs. 5,000/-<br>Rs. 4,000/- |
| 1 Column x cm<br>1 கலம் X செ.மீ.<br>1 கலம் = 3 செ.மீ.<br>1 Column = 3 cm | 4 Colour<br>2 Colour<br>Black & White | Rs. 150/-<br>Rs. 100/-<br>Rs. 75/- |

Front Page - Extra 30% Premium Page - Extra 20%

முன் பக்கம் - மேலதிகம் 30% விருப்பத்திற்குரிய பக்கம் - மேலதிகம் 20%

சிறு விளம்பரங்கள் - Classified Advertisements

முதல் 20 சொற்களுக்கு Rs. 200/- மேலதிக சொல் ஒன்றுக்கு Rs. 10/-

First 20 words Rs. 200/- Per Additional word Rs. 10/-

விளம்பர முகாமையாளர், முஸ்லிம் குரல் பப்ளிகேஷன்

**Advertisement Manager, Muslim Kural Publication**



'முஸ்லிம் குரல்' பத்திரிகையில் பங்காற்றுவதற்கான பதவி வெற்றிடங்கள்

+ கம்பியூட்டர் டைப் செட்டர்
+ (டைப்செற்றிங்கில் விரைவும், பக்க அமைப்பில் அனுபவமும் இருக்க வேண்டும்)
+ ஒப்புநோக்குனர் (Proof Reader) (மொழித்தேர்ச்சியும் வாசிப்பு அனுபவமுள்ளவர்)

எமது நிறுவனத்தில் மேற்படி பதவிகளுக்கு வெற்றிடம் உள்ளன. முஸ்லிம் சமூகத்தின் மீதான உணர்வுள்ளவர்களிடம் இருந்து பங்காற்றலை எதிர் பார்க்கிறோம். தகுதியான ஆண்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. விண்ணப்பிக்கும் பதவிக்குரிய அனுபவங்களும், சான்றிதழ்களும் உள்ளடக்கியதாக விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு இருவாரங்களுக்குள் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் வந்து சேரவேண்டிய அகம்

ஆளணி முகாமையாளர்

'முஸ்லிம் குரல் பப்ளிகேஷன்'

இல. 181/1, மாளிகாகந்த வீதி, மருதானை, கொழும்பு 10.


## புல்மோட்டை முஸ்லிம் மீனவர்களின் வலைகள், உபகரணங்கள் அபகரிப்பு

(புல்மோட்டை செய்தியாளர்)

புல்மோட்டை மீனவர்களின் மீன்பிடி வலைகள், அதற்கான உபகரணங்கள் அனைத்தையும் கடந்த மாதம் கொக்குளாய் கடல் பிரதேசத்தில் இனம் தெரியாதவர்களினால் அபகரிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவத்தின் மூலம் பத்து மீனவர்கள் சுமார் 25 இலட்சத்துக்கு அதிகமான இழப்புக்களை ஏற்க வேண்டியதாயிற்று என பாதிக்கப்பட்ட மீனவர்கள் கூறுகின்றனர்.

இரவு வேளையில் திடீரென வந்த இவ்வினந்தெரியாதவர்கள் பிடிக்கப்பட்ட பல ஆயிரம் கிலோ எடையுள்ள மீன்களையும் மீன்பிடி உபகரணங்களையும், மீனவர்களையும் எடுத்துச் சென்று மீன்களை 'ஐஸ்' பண்ணி எங்கேயோ அனுப்பி விட்டு வலைகள் உபகரணங்கள் யாவற்றையும் அவர்கள் எடுத்துக் கொண்டு மீனவர்களை மாத்திரம் திருப்பி அனுப்பியுள்ளனர். இச்சம்பவம் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் நடைபெற்றது என அம்மீனவர்கள் கூறுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.



சூரியன் எப்.எம். அறிவிப்பாளரும், கவிஞருமான யூயெல் மப்றூக்கின் "தடை செய்யப்பட்ட கவிதை" நூல் வெளியீட்டு விழாவின் போது சூரியன் எப்.எம்.ஆலோசகர் சி. நடராஜன் சிவம் அவர்களிடமிருந்து கவிஞர் ரவூப் ஹஸீர் பிரதியைப் பெறுவதைப் படத்தில் காணலாம்.

## அரபாத்தை நாடு கடத்தினால் மத்திய கிழக்கில் இரத்த ஆறு ஓடும்

மனித வரலாற்றில் மிக நீண்ட வரலாற்றைக் கொண்டதாக கருதப்படுவது மத்திய கிழக்குப் பிரச்சினை அல்லது பலஸ்தீனப் போராட்டமாகும். அது தற்போது மிக உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது. 1948ம் ஆண்டு மே மாதம் 14ம் திகதி இஸ்ரேல் இராஜ்ஜியம் உருவானதுடன் யுத்தம், மனிதக் கொலைகள், பயங்கரவாதம், அகதிகள் பிரச்சினைகள் ஆகியனவே கண்ணீராலும் உதிரத்தாலும் எழுதப்பட்டன.

இஸ்ரேலுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள பயங்கரவாத தாக்குதல்களுக்கு பின் உந்து சக்தியாக இருப்பது யஸீர் அரபாத் என்பதே அமெரிக்க - இஸ்ரேலியரின் முடிவாக உள்ளது.

யஸீர் அரபாத்தை கேவலப்படுத்தி, தனிமைப்படுத்தி அதன் பின் அவரை தற்போது வசித்துக் கொண்டிருக்கும் காஸா கரையிலிருந்து விரட்டியடிப்பதற்கு இஸ்ரேல் தீர்மானித்துள்ளது. கடந்த காலங்களில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதல்களே அதற்கு காரணமாகும். பலஸ்தீனப் போராளிகளை பின்னணியிலிருந்து ஊக்குவிப்பது யஸீர் அரபாத்தான் என்பதே இஸ்ரேலின் முடிந்த முடிவாகும். ஏனெனில் அத்தகைய பயங்கரவாத செயல்களில் ஈடுபடுகின்ற இயக்கங்களை அடக்கி ஒடுக்குவதற்கு



முன்வராமையையே அவர்கள் காரணம் காட்டுகின்றனர்.

ஆகவேதான் இஸ்ரேலியர்கள் அரபாத்தை நாடு கடத்த தீர்மானித்துள்ளனர். இதனைக் கேள்வியுற்ற பலஸ்தீனர்கள் அனைவரும் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்த முற்பட்டுள்ளனர். எத்தகைய குறைபாடுகள் இருப்பினும் அரபாத்தே பலஸ்தீனர்களின் தலைவர். கடந்த காலங்களில் அவரது புகழ் சிறிது மங்கியிருப்பினும், தற்போதைய இஸ்ரேலின் முடிவால் அரபாத் மீண்டும் வீரராக்கப்பட்டுள்ளார்.

ஆகவே, இஸ்ரேல் தனது தீர்மானத்தை அமுல்படுத்த முற்பட்டால் மத்திய கிழக்கில் இரத்த ஆறு ஓடும் என்றும் மிக நீண்ட காலத்திற்கு தொடர் அநர்த்தங்கள் ஏற்படும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

### சரிபாதி அமெரிக்கர்கள் புஷ்ஷை ஓரங்கட்டுகின்றனர்.

2004-ம் ஆண்டு தேர்தலின் போது அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷை தோற்கடிக்க அநேகமான வாக்காளர்கள் செயற்படுவார்கள் என்றே தோன்றுகின்றது.

'நியுஸ்வீக்' சஞ்சிகை நடத்திய மக்கள் கருத்துக் கணிப்பின் படி, அமெரிக்க வாக்காளர்களில் 50 சதவீதமானோர் ஜோர்ஜ் புஷ்ஷுக்கு எதிராக வாக்களிப்பார்கள் என தெரியவருகிறது.

கடந்த மாதம் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பின்போது 47 சதவீதமாக இருந்த எதிர்க் கருத்துக்கள் தற்போது மீண்டும் 3 சதவீதம் அதிகரித்துள்ளது.

ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த ஜனாதிபதி வேட்பாளர் வெஸ்லிக் களார்க் என்பவர் ஜனாதிபதி புஷ்ஷைக் காட்டிலும் முன்னணியில் இருக்கிறார்.

## முஸ்லிம் உலகிலிருந்து அமெரிக்காவுக்குக் கடுமையான செய்தியொன்று

ஈராக்கை ஆக்கிரமித்துள்ள அனைத்து வெளிநாட்டு சக்திகளும் உடனடியாக அந்நாட்டை விட்டும் வெளியேற வேண்டும் என்று குரலெழுப்பப் பட்டது எங்கிருந்து தெரியுமா? கடந்த வாரம் இஸ்லாமிய மாநாட்டு ஒழுங்கமைப்பின் ராஜாங்க தலைவர்களின் கூட்டம் நடாத்தப்பட்ட மலேசிய நகரமான புத்ரஜாயவிலிருந்தே அந்தக் குரல் எழுந்தது. அது இஸ்லாமிய உலகிலிருந்து அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்ட பாரதூரமான செய்தியாகும். அது, தற்போது ஈராக்கில் உள்ள அமெரிக்காவின் தலைமையின் கீழ் செயற்படும் கூட்டுப் படை வெளியேற வேண்டும் என்பது மட்டுமல்ல, வேறு நாட்டு இராணுவம் ஈராக்கிற்கு செல்வதையும் தடுக்கிறது.

தனது உதவிக்காக ஈராக்கிற்குள் பல்நாட்டுப்படையினரை நிலைப்படுத்தும் அமெரிக்காவின் முயற்சிக்கு எதிராக ஒன்றுபட்ட இஸ்லாமிய உள்நுழைவை கட்டியெழுப்பும் முயற்சியுமாகும் இது.

கடந்த சனியன்று இந்த அமைப்பின் செயலாளர் நாயகம் அப்துல்லாஹெத் பெல்கெஸீஸால் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

ஈராக்கை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு அந்நிய படையினர் அந்நாட்டை விட்டும் வெளியேற வேண்டியது அத்தியவசியமானது என்று அவர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார்.

## தீக்கிரையாக்கப்பட்ட கடை

கொலன்னாவையில் வசிக்கும் அஜ்வாத் நஜிமுதீன் என்பவருக்கு சொந்தமான கொழும்பு மெயின் வீதியில் அமைந்துள்ள ஸ்டார் பெலஸ் என்ற பாதணிக் கடை 2003.10.01. புதன் கிழமை இனந்தெரியாத நபர்களால் தீக்கிரையாக்கப்பட்டது.

கடையில் இருந்த பெறுமதியான பொருட்கள் சூறையாடப்பட்டும் எரிந்தும் நாசமாகியுள்ளது. இது பேரினவாதிகளால் திட்டமிடப்பட்டு நடக்கும் சதியா? அல்லது இயற்கை தீ அனர்த்தமா? என்ற சந்தேகம் நிலவுகின்றது.

-மூதூர் ஜஸ்ரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் காங்கிரஸ் கட்சி செல்கின்ற வழி சரியா? தற்காலத்தில் அது சாதித்தது என்ன?

எம்.எல்.எம். முஸ்தபா
மருதமுனை

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் அபிலாசைகளை வென்றெடுக்க உருவாக்கப்பட்ட கட்சியாகும். அக்கட்சியின் வளர்ச்சிக்காக நாட்டின் ஏனய பிரதேச முஸ்லிம் மக்களைக் காட்டிலும் வடக்கு கிழக்கு வாழ் முஸ்லிம்கள் பல தியாகங்களையும், அர்ப்பணிப்புக்களையும் செய்திருக்கின்றனர். இன்னும் செய்து வருகின்றனர். இக்கட்சி ஆரம்பித்த வேளை இம்மக்கள் பட்ட துன்ப துயரங்கள் கொஞ்ச நெஞ்சமல்ல. பல உயிர்கள் இழக்கப்பட்டு, இரத்தம் சிந்தி, நோன்பிருந்து, பிரார்த்தித்து இக்கட்சியை எம் மக்கள் வளர்த்தெடுத்தனர்.

அம்மக்களின் எண்ணங்களைப் புரிந்து அதற்கமைய செயல்படும் தலைமையையும் இம்மக்கள் பெற்றிருந்தமை மேலும் ஒரு சிறப்பம்சமாகும். அத்தலைமைத்துவத்தின் தீர்க்க தரிசனமான அரசியல் வழிகாட்டலில் கட்சியும், கட்சியை நேசித்த மக்களும் வெற்றிநடைபோடும் காலமும் கனிந்து நனவாகி பயனும் கிடைத்தது. எனினும் யார் செய்த சதியோ? மீழ முடியாத இவ்வுலக வாழ்க்கைப் பிரயாணத்தை அத்தலைவன் சந்திக்க நேரிட்டு எங்களைவிட்டும் மறைந்தார்.

அதனையடுத்து முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைமைக்கு யார் வருவது, என்ற கயிறிழுப்புக்கள் நடைபெற்று ஈற்றில் இன்றைய தலைமைத்துவம் தெரிவானது. வடக்கு கிழக்கு முஸ்லிம்களும் நிரம்ப இவர் மீது நம்பிக்கை வைத்தனர். ஆனால் அந்த நம்பிக்கைக்கு தகுந்த மாதிரி புதியதலைவர் செயல்பட்டுள்ளாரா? என்பதே இன்றைய கேள்வியாகும். ஏனெனில் இன்று நடைபெற்றுவரும் சமாதானப் பேச்சுவார்த்தைகளின் முடிவில் ஏற்படுத்தப் போகும் நிர்வாக கையளிப்பின் பின்னால் ஈடுசெய்ய முடியாத பெரும் இழப்புக்களைச் சந்திக்க வேண்டிய இக்கட்டானதொரு நிலையில் வடக்கு கிழக்கு முஸ்லிம்கள் இருந்து கொண்டிருக்கின்றனர். முஸ்லிம்கள் இன்று கணக்கெடுக்கப்படாமல் இருக்கின்றனர். அத்தகைய நிலைமைக்கு இம்மக்கள் வருவதற்கு யார் காரணம்? என்பன போன்றனவையை அறிவது அவசியமாகும்.

அதற்கு சில உண்மைகளை நாம் விளங்க வேண்டும். கடந்த பொ.ஐ.ஐ. முன்னணி அரசாங்கத்தில் பொறுப்பு வாய்ந்த அமைச்சராக பதவி வகித்த மறைந்த தலைவர் அல்ஹாஜ் அஷ்ரஃப் அவர்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வடக்கு கிழக்கு முஸ்லிம்களுக்கு பாதகமான அரசியல் உடன்படிக்கைகளைச் செய்ததில்லையென்பது அனைவருக்கும் தெரிந்ததாகும். எனினும் அன்றைய அரசின் அமைச்சர்களுடனோ, அல்லது ஜனாதிபதியுடனோ சிறுசிறு பிரச்சினைகள் தோன்றிய போதெல்லாம் அவைகளை தனது அரசியல் ஞானத்தின் மூலமாக பேசி தீர்வுகளைக் கண்டார். அது மாத்திரமல்லாமல் வரலாற்றில் எவரும் செய்திடாத பாரிய அபிவிருத்திகளையும், இன்னும் வேலைவாய்ப்புக்களையும் வழங்கினார். எனினும் அன்றைய அரசு அவைகளைத் தடைசெய்யவில்லை. தென்கிழக்கு அலகு ஒன்று ஸ்த்தாபிப்பதைத் தவிர மற்றய ஏனய அனைத்து விடயங்களையும் அன்னார் செய்தார். இதில் பிரதேச செயலகங்கள், நகரசபைகள் போன்றவைகளும் அடங்கும்.

2000 ஆம் ஆண்டைய பொதுத்தேர்தலைப் பொறுத்தவரை பொ.ஐ.ஐ. முன்னணிக்கும், ஐ.தே. கட்சிக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் ஆதரவும் தேவைப்பட்டது. எனவே அதற்கான முயற்சிகளில் அக்கட்சியினர் இறங்கினர். இவ்வேளை முஸ்லிம் காங்கிரசை ஐ.தே.கட்சிக்கு ஆதரவுதரவைக்கும் ஓர் முயற்சியாக அவ்வேளை பொதுச்செயலாளராகவிருந்த றஊப் ஹக்கீம் அவர்களுடன் சில ஐ.தே.க. முஸ்லிம் தலைவர்கள் பேசினார்கள். இந்தச் செய்திகள் பரபரப்பாக அன்று செய்தி ஊடகங்களில் வெளிவந்தன. இத்தனைக்கும் முஸ்லிம் காங்கிரஸ் பொ.ஐ.ஐ. முன்னணி அரசியல் முக்கிய பங்காளியாகவே இருந்ததும், குறிப்பிடத்தக்கதாகும்.

இப்படியான நிலையில் முஸ்லிம் காங்கிரஸ் உயர்பீடத்தில் இரு அணிகள் தோன்றத் தலைப்பட்டன. அதாவது ஐ.தே. கட்சியுடன் இணைந்து போட்டியிடுவதற்கு ஒரு குழுவும், தொடர்ந்தும் பொ.ஐ.ஐ. முன்னணியுடன் இணைந்து போட்டியிடுவதற்கு மற்றொரு குழுவுமே அந்த இரு அணிகளாகும். இந்த நிலை பனிப்போராக உள்ளுக்குள் நடைபெற்று பத்திரிகை அறிக்கையாக வெளிவரத்தொடங்கின. இந்தக் காலகட்டத்தில் இன்றைய தலைவரான றஊப் ஹக்கீம் அவர்கள் ஐ.தே. கட்சியுடன் இணைந்து போட்டியிடுவதையே விரும்பினார். இதை அக்காலத்தில் வெளிவந்த சகல பத்திரிகைகளையும் வாசித்தால் அறிந்துகொள்ள முடியும்.

எனவே கருத்து மோதல் வலுக்கத்துவங்கியது. முடிவில் தேசியத்தலைவரான மர்ஹூம் அஷ்ரஃப் அவர்கள் அவ்வருட புனித உம்ராவைச் செய்துவிட்டு நாடு திரும்பியதும் கட்சி உயர்பீடத்தைக்கூட்டி நடைபெறப்போகும் பொதுத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் பொ.ஐ.ஐ. முன்னணியுடனேயே இணைந்து போட்டியிடும். இது கட்சித்தலைமையின் முடிவு. இதற்கு சகலரும் கட்டுப்பட வேண்டும் என அறிவித்தார். இந்த அறிவிப்பின் மூலம் ஐ.தே.கட்சி ஈர்ப்பாளர்கள் ஆட்டம் கண்டனர். (இன்றைய மு.கா. தலைவர் உட்பட)

அதன் பிரகாரம் மு.காங்கிரஸ் பொ.ஐ.ஐ. முன்னணியுடன் இணைந்து அத்தேர்தலில் போட்டியிட வேட்புமனுக்களைத் தாக்கல் செய்தது. இதுபற்றி மர்ஹூம் அஷ்ரஃப் அவர்களிடம் பத்திரிகையாளர்கள் ஏன் நீங்கள் பொ.ஐ.ஐ. முன்னணியுடன் மீண்டும் இணைந்து போட்டியிடுகின்றீர்கள் எனவினவியபோது, சந்திரிக்கா தலைமையிலான அரசாங்கத்தில் எனக்கு சிறு சிறு பிரச்சினைகள் ஏற்படுத்தப்பட்டதென்னவோ உண்மைதான். ஆனால், எனது முஸ்லிம் சமூகத்திற்கு ஏனய அரசாங்கங்களைவிடவும் மிக கூடுதலான சேவைகளை சந்திரிகா அரசாங்கம் செய்திருக்கின்றது. இதனை விட ஐ.தே.கட்சி கூடுதலாகச் செய்ததுமில்லை. இனிமேல் செய்யும் என்ற நம்பிக்கையுமில்லை என அன்னார் தெரிவித்தார்.

எனினும் அத்தேர்தல் பிரசார ஆரம்பத்திலேயே அன்னார் விபத்தொன்றில் மரணமானார். அம்மரணம் விபத்தல்ல அவரது அரசியலை விரும்பாத சிலரின் சதியாக இது இருக்கலாம் என்ற கருத்தும் தற்போது பரவலாகக் கேட்க முடிகிறது. எது எப்படியாகினும் அன்னாரை விரும்பாத சக்திகள் அவரது கட்சிக்குள்ளேயே ஊடுருவியதை யாரும் மறுப்பதற்கில்லை. இந்த இடத்தில்தான் அன்னார் அரசியல் காரணங்களுக்காக ஏன் பழிவாங்கப்பட்டிருக்கக்கூடாது என்ற கேள்வியும் எழுகின்றது. இம்மரணம் பற்றி இன்னுமே சரியான தகவல்கள் இல்லை. இது கண்டறியப் படவேண்டிய விடயமாகும். அதனை பூசி மெழுகி மூடிவிடக்கூடாது.

தற்போதய தலைவரான றஊப் ஹக்கீம் அவர்கள் பொ.ஐ.ஐ. முன்னணி அரசில் ஒரு வருடம் முழு அமைச்சராகப் பதவியில் இருந்தார். இதனையடுத்து இன்றைய அரசியலிலும் முக்கிய அமைச்சராக இருந்து வருகின்றார். ஆனால் முஸ்லிம் காங்கிரஸ் தலைவராகவோ அல்லது அமைச்சராகவோ இவரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என்ன? என்பதை நாம் ஒப்பீட்டளவில் பார்ப்பது வடக்கு கிழக்கு முஸ்லிம்கள் ஒவ்வொருவரின் கடமையாகும்.

ஏனெனில், முஸ்லிம் காங்கிரஸ் தலைமை வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் தலைமை மட்டுமல்ல தலையெழுத்தை தீர்மானிக்கும் அரசியல் தலைமையுங்கூட. எனவே பேச வேண்டிய இடத்தில் பேசாமல், சேவை செய்ய வேண்டிய காலத்தில் செய்யாமல் தட்டிக்களிப்பது ஒரு சமூகத்துரோகமாகும். இதனை அனுமதித்து பார்த்துக் கொண்டிருப்பது ஒரு சமூகத்துரோகமாகும். இதனை அனுமதித்து பார்த்துக் கொண்டிருப்பது அச்செயல்களுக்கு துணை போகும் நடவடிக்கையாகும். வரலாற்று ரீதியான இந்த துரோகத்தனத்திற்கு வக்காலத்து வாங்குவது. அதனை வரவேற்பது மன்னிக்க முடியாத படுபாதகமாகும். எனவே, இன்றையத்தலைவர் றவூ் ஹக்கீம் நமக்கு வரலாற்றுத் துரோகமிழைத்துக் கொண்டிருக்கின்றார் என்பதில் சந்தேகமில்லை. இதற்கு பின்வரும் விளக்கங்கள் சான்றாக அமைகின்றன.

தென்கிழக்கு அலகு விடயமே சந்திரிகா அரசுடன் முஸ்லிம் காங்கிரஸ் முறிவை ஏற்படுத்தக் காரணமாகும் என அன்று அறிக்கைவிட்ட இன்றைய தலைமை தற்போதய ஐ.தே. கட்சி அரசாங்கத்திலிருந்து எப்போது அதனைப்பெறவுள்ளது?

- உடத்தலவின்ன படுகொலைகளில் காட்டிய வேகம் ஏன் தேசியத் தலைவரின் மரண விடயத்தில் தற்போதைய முஸ்லிம் காங்கிரஸ் தலைவரால் காட்டப்படவில்லை?

- அன்றைய அரசிலும், இன்றைய அரசிலும்



முழு அதிகார அமைச்சராக இருக்கும் இன்றைய முஸ்லிம் காங்கிரஸ் தலைமை.

வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் வேலை வாய்ப்பு க்கள், பொது அபிவிருத்திகள் விடயத்தில் செய்திருக்கும் சேவைகள் என்ன?

- வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகிய நிலையில் கிழக்கு மாகாணத்தில் 550 முஸ்லிம் பொலிசார் சேர்ப்பு பின் தமிழ்பேசும் பொலிசார் சேர்ப்பாக மாறி, எடுக்கமுடியாத கிடப்பில் போடப்பட்டதன் மர்மமென்ன?

- வட புலம் சென்று புலிகளின் தலைவரோடு ஒப்பந்தம் செய்ததை அறிக்கைகளாக வெளியிட்ட ஆர்வம், அதனை நடைமுறைப்படுத்தலில் இல்லாமல் போனதன் காரணமென்ன?

- அரசதரப்பாக சமாதானப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டபோதிலும் வடக்கு கிழக்கு பற்றி பேசும்போது அங்கு வாழ் முஸ்லிம்கள்பற்றியும் பேசியேயாக வேண்டும். எனினும், கிடைத்த அந்த அரிதான சந்தர்ப்பங்களை பயன்படுத்தாமல் சோரம் போனதன் மர்மமென்ன?

- கூடவந்தோர் தென்கிழக்குபற்றி பேசவேண்டுமென்று கூறியபோதிலும் அதுபற்றி பேசி சமாதானத்தைக் குழப்ப வேண்டாம். பிறகு அதனைப் பார்ப்போம் எனக்கூறி அதனை அறிக்கையாகவும் விட்டதன் உண்மையான தாற்பரியம் என்ன?

- ஸ்தாபகத் தலைவர் ஐ.தே.கட்சியுடன் முஸ்லிம் காங்கிரஸ் இணைந்து போட்டியிடாதென்று கூறி, அக்கொள்கையில் உறுதியாக இருக்க தற்போதய தலைவர் அதற்கு மாற்றமாக எந்தக் காரணங்களுக்காக ஐ.தே.கட்சியுடன் இணைந்து தேர்தலில் போட்டியிட கட்சியைத் தாரைவார்த்து ஒப்பந்தங்களைச் செய்தார்? அந்த ஒப்பந்தத்தின் மூலமாக வடக்கு கிழக்கு முஸ்லிம்களுக்கு கிடைக்கவிருக்கும் நன்மைகள் என்ன? கிடைத்த நன்மைகள் என்ன? இவையெல்லாவற்றிற்கும் சிகரம்வைத்தால் போல் பேச்சுவார்த்தை மேசையில் முஸ்லிம்கள் தனித்தரப்பாகக் கலந்துகொள்ள அனுமதிக்க வேண்டும். அதுவும் அவரது தலைமையில் அக்குழு அமைய வேண்டுமென கூறுவதன் நோக்கம் என்ன?

- அரசாங்கத்தரப்போ, தனிக்குழுவோ எதுவாக இருந்தபோதிலும் பேச்சுவார்த்தை நடைபெறும்போது முஸ்லிம்கள்பற்றி பேச சந்தர்ப்பம் கிடைத்தால் அதனைப் பயன்படுத்தி பேசவேண்டும். ஆனால் அரச தரப்பில் பேசாத தலைவர், தனித்தரப்பில் கலந்து கொண்டு பேசுவார் என்று எப்படி உத்தரவாதம் பண்ண முடியும்? அதற்கான காரணங்கள் நம்பக்கூடியதாக தருவதற்கு ஏதாவது கடந்தகால அவரது செயற்பாடுகளில் உள்ளனவா?

- வடக்கு கிழக்கு முஸ்லிம்கள் முன்னரைவிட ஒன்றுபட்டு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவங்களை அதிகரித்து அதன்மூலமாக பேரம் பேச வேண்டும். பேரம் பேசும் சக்தியாக வேண்டுமென அறிக்கைவிடும் தற்போதய தலைமை அந்தப் பேரத்தின் உள்ளடக்கம் என்ன? எத்தனை அமைச்சு, எத்தனை நியமன எம்.பி. எத்தனை அனுகூலங்கள் போன்றனவா? அல்லது வேறு ஏதாவதா? என்பதையும் மக்களுக்கு அறியத்தர வேண்டும்! மேலும் தற்போது முஸ்லிம் காங்கிரஸ் வழிநடத்தப்படும் முறை கட்சியின் ஸ்தாபக கொள்கைக்கு ஏற்புடையதா? என்பதையும் அறிவிக்க வேண்டும்.

- ஐ.தே.கட்சியுடன் முஸ்லிம் காங்கிரஸ் இணைந்து தேர்தலில் போட்டியிடுவதாக இருந்தால் ஒப்பந்தங்களைப் புதுப்பிக்க வேண்டும் எனக்கூறும் இன்றைய தலைமை அவ்வொப்பந்தங்கள் மூலமாக முஸ்லிம்களுக்குக் கிடைக்கவிருக்கும் அல்லது கிடைத்திருக்கும் சமூக ரீதியான சேவைகள் என்ன என்பதையும் தெரியப்படுத்த வேண்டும். இவைகளை மூடி மறைப்பதன் காரணமென்ன? ஏன் ஐ.தே. கட்சியுடன் மட்டும் இணையும் கதை தொடர்கதையாகின்றது? இவற்றுக்கும் உரிய பதில் தரப்பட வேண்டும்.

மேலே கூறப்பட்டவைகளை விடவும் இன்னும் ஏராளம் கேள்விகளாக இருக்கின்றன. ஆனால் அவைகளுக்கான பதில்கள் எங்களுக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கை இல்லவே இல்லை. இன்றைய நிலையில் முஸ்லிம் காங்கிரஸ், ஐ.தே. கட்சியின் ஒரு பிரிவாகச் செயல்படுகின்றமை அக்கட்சியை உற்று நோக்கினால் நன்றாக புரிந்து கொள்ள முடியும். அப்படியானால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற பெயரில் எதற்காக ஒரு கட்சியும், அதற்குத் தலைமையும் தேவை? எனவேதான், முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் அடிப்படைக் கொள்கைகளைக் கடைப்பிடிக்கின்ற துணிவும், நேர்மையும் அரசியல் ஞானமும் கொண்ட தலைமை தேவைப்படுகின்றது.

## குற்றத்தடுப்பு - பொலிஸாரின் பொறுப்பு

மனித உரிமை மீறல் என்பது தற்கால இலங்கை சமூக வியூகத்தில் காணக்கூடிய முக்கியமான பிரச்சினையாகும். சட்டம், பாதுகாப்புப் பிரிவு மற்றும் அரசியல் செயற்பாடுகள் ஊடாக இம் மனித உரிமை மீறல்கள் ஏற்படுவதாகவே அநேகரின் தர்க்கமாகும். பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்திருக்கும்போது இறப்புக்குள்ளானவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதால், இலங்கை மனித உரிமைகள் கலாசாரம் மீண்டும் சவால்களை எதிர்நோக்கியுள்ளது. இந்நிலைமைக்குக் காரணம்தான் என்ன?

தற்கால இலங்கைச் சமூகத்தில் மனித உரிமைமீறல் தொடர்பான விடயங்களை விசாரணைக்கு உட்படுத்தும்போது, அவற்றை பல விதங்களில் விபரிக்கலாம். அரசியல் காரணங்களுக்காக கடத்தப்படுதல், பொலிஸாரின் தாக்குதல்கள் காரணமாக இறப்புக்குள்ளாதல் ஆகியன உள்ளடங்கும். தொழிலாளரை சேவையிலிருந்தும் இடைநிறுத்தல், தொழிலாளரின் உரிமைகளைக் குறைத்து மதிப்பிடல் போன்ற தான்தோன்றித்தனமான செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இதற்குப் புறம்பாக தேசிய மற்றும் சமய அடிப்படையிலான பலவிதமான மனித உரிமை மீறல்களைக் காணக்கூடியதாக உள்ளன. இலங்கையின் மனித உரிமைகள் துறையை ஆராயும்போது இவை அனைத்தையும் கருத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

குற்றவாளிகளாகக் கருதி சந்தேக நபர்களை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றதன் பிற்பாடு அவர்கள் தாக்குதல்களுக்கு உள்ளானதன் காரணமாக இறப்புக்குள்ளாக்கப்பட்டனர் என்பதனை கடந்த காலங்களில் மட்டுமல்ல அண்மையிலும் கேள்விப்பட்டுள்ளோம். இது ஒரு கவலைக்குரிய விடயமாகும்.

பொலிஸ் அதிகாரிகள் தங்களுக்குரிய சட்டவரையறைக்கு உட்பட்டே செயல்பட வேண்டும். சில பொலிஸ் அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொள்ளும்போது ஆவேசப்படுகின்றனர். இத்தகைய ஆவேஷம் காரணமாக சட்டப்படி முறையான விசாரணையொன்றை மேற்கொள்ள முடியாமல் போய்விடும். தற்காலத்தில் நடைபெறுகின்ற அநேகமான அவதானிப்புக்கள் அறிவை முற்படுத்தி அல்ல, உணர்ச்சியை முற்படுத்தியே செய்யப்படுகின்றன. மறுபுறத்தில், குற்றவாளி மிக உயர் தொழில்நுட்ப முறைகளை அறிந்து வைத்துள்ளதோடு, அவற்றை புரிந்து கொள்ள தேவையான புதிய தொழில்நுட்ப சாதனங்கள் மற்றும் அதற்குரிய அறிவு பொலிஸாரிடம் இல்லை.

பாதுகாப்புப் பிரிவினரும், அரசியல்வாதிகளும் பாதாள உலகத்தினரும் ஒரே தட்டில் உண்ணுகின்ற தன்மை காரணமாகவே



இத்தகைய நிலைமை உருவாகியிருப்பதாக அநேகர் கருதுகின்றனர். இது விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டிய ஒன்றாகும். குற்றங்கள் அதிகரிப்பது என்பது தனியே விபரிக்கப்படக்கூடிய ஒன்றல்ல. 1977ஆம் ஆண்டு திறந்த பொருளாதாரக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்ட கையோடு சமூகங்கள் மாற்றத்திற்குள்ளாகின. அனைத்துத் தேவைகளும் ஒரே கணத்தில் நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய நிலைவரை அனைத்தும் மாற்றத்திற்குள்ளாகின. ஆகவே, போதைப் பொருட்கள் மற்றும் ஆயுத விற்பனை மூலம் பணம் சம்பாதிப்பது முக்கியமானதாக உள்ளது. வடக்கு கிழக்கு போர் சூழல் காரணமாக இத்தகைய செயற்பாடுகள் தீவிரமாகின. பலம் பெற்றன. முக்கியமாக, போர் காரணமாக சமூகவிரோத கலாசாரம் விருத்தியடைந்தது மட்டுமல்ல குற்றங்களை தடுத்து நிறுத்துவதற்கான பொலிசாரின் அதிகாரங்கள் கூட மட்டுப்படுத்தப்படுவதற்கு காரணமாகின.

மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்குப் போதுமான மனித உரிமைச் சட்டம் எம் வசம் உள்ளது, என்பதே எனது தனிப்பட்ட கருத்தாகும். மனித உரிமை சட்டம் காரணமாக தங்களால் உரிய முறையில் கடமைகளை புரிய முடியாது உள்ளது என்று பொலிசார் தெரிவிக்கின்றனர். மாணவர்களின் ஒழுக்கத்தை கட்டியெழுப்புவதற்கு மனித உரிமைகள் சட்டம் தடையாக உள்ளதாக ஆசிரியர்கள் குறைபட்டுக் கொள்கின்றனர். அரசாங்க அதிகாரிகளின் கூற்றும் இதற்கு ஒப்பானவையே.

இக்கூற்றுக்களின் மூலம் புரிவது என்ன? பலவீனப்பட்டிருப்பது மனித உரிமைச் சட்டமல்ல, கலாசாரத்தின் பின்னடைவே காரணமாகும்.

## திருகோணமலை புலிகளின் அரசியல் பிரிவுத் தலைவர் எஸ். திலக்குடனான பேட்டி

*மூதூர் மோதல்களின் பின் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டி இருபக்கத் தலைவர்களும் ஒப்பந்தமொன்றை ஏற்படுத்திக் கொண்டனர். அந்த உடன்படிக்கையின் தற்போதைய நிலை என்ன?*

அது தற்போதும் செயற்படுத்தப்படுகின்றது.

*புலிகள் முஸ்லிம்களுக்கு எதிராக செயற்படுவதாக குற்றஞ்சாட்டப்படுகின்றனர். இதுபற்றி என்ன கூறுகிறீர்கள்?*

இல்லை. நான் அதனை மறுக்கிறேன். ஆனால், ஜிஹாத், உசாமா என்ற பெயர்களில் முஸ்லிம் குழுக்கள் செயற்படுகின்றன. அவற்றுக்கு உதவி புரிபவர்கள் யார் என்று தெரியவில்லை. தமிழர்க்கு எதிராகவே அவை செயற்படுகின்றன.





*குரங்குபாஞ்சான் முகாம் அமைந்துள்ள இடம் முஸ்லிம்களுக்குரியது என்று கூறப்படுகிறதே?*

1990ன் பின்னர் முஸ்லிம்கள் இப்பகுதியில் வரவில்லையென்று அண்மையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது முஸ்லிம்களின் பிரதிநிதிகள் ஏற்றுக் கொண்டுள்ளனர். மணிராசகுளம் பிரதேசத்தில் முஸ்லிம்களின் காணிகள் இருந்தனவா இல்லையா என்பது பற்றி இரண்டொரு தினங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

*1990ன் பின்னர் புலிகளால் இப்பகுதியில் வசித்த முஸ்லிம்கள் விரட்டியடிக்கப்பட்டனர் அல்லவா?*

இல்லை. சிலவேளைகளில் எமக்கும் இராணுவத்தினருக்குமிடையில் நடந்த மோதல்களின்போது அவர்கள் இடம்பெயர்ந்திருக்கலாம். தமிழர்க்கும் அப்படியே நிகழ்ந்தது. (அப்போது குரங்குபாஞ்சான் முகாமுக்கு அருகில் இருந்த கட்டிட இடிபாடுகளை சுட்டிக் காட்டிய ஊடகவியலாளர்கள் 'அது என்ன' என்று வினவினர். 'அது



எங்களுடைய சமையலறை' என்று திலக் கூறினார். ஆனால், பள்ளிவாசலொன்றின் இடிபாடுகள் என்றே ஊடகவியலாளர்கள் கருதுகின்றனர். பள்ளிவாசலுக்கே உரிய சில அமைப்புக்கள் அங்கே காணக்கிடைத்தன. அது ஒரு பள்ளிவாசல் என்றே அங்கிருந்த போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவிற்கு திருமலை பிரதித் தலைவரான கர்ட் ஸ்பூர் கூறினார். ஆனால், புலிகள் அதனை நிராகரித்தனர். எப்படியிருப்பினும், குரங்குபாஞ்சான் முகாம் போர் நிறுத்த உடன்பாட்டுக்குப் பின்னரே நிறுவப்பட்டுள்ளதென்று திலக்கின் எதிரிலேயே கர்ட் தெரிவித்தார்)

*எப்படியிருப்பினும், குரங்குபாஞ்சான் முகாம் திருமலை கப்பற்படை தளத்திற்கும், துறைமுகத்திற்கும் அச்சுறுத்தல்தானே?*

நாம் சமாதானத்தை குழப்பும் வகையில் செயற்படமாட்டோம். அத்தோடு, திருகோணமலை என்பது தமிழ் ஈழத்தின் தலைநகரமாகும். துறைமுகமும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. ஆனால், எவ்வகையிலேனும் பேச்சுவார்த்தை குழம்பினால் நாம் திருகோணமலையைத் தாக்குவோம்.

நன்றி லங்கா 19.10.2003
தமிழில் : ரீ.ஜே. அகமத் ஜான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர் ரவூப் ஹக்கீம்

# எமது மக்களுக்கும் வழி திறந்து தாருங்கள்!

இலங்கையில் கடந்த 12வது பாராளுமன்ற பொதுத்தேர்தல் தினத்தன்று கண்டித் தேர்தல் மாவட்டத்தில் பாத்த தும்பறை தொகுதியில் "மடவளை பஸார்" எனும் முஸ்லிம் கிராமத்தைச் சேர்ந்த பத்து முஸ்லிம் இளைஞர்கள் கொல்லப்பட்டார்கள். சிலர் காயத்தோடு உயிர்தப்பினார்கள். இவர்களுக்கு நஸ்டஈடு கொடுக்கப்பட்டு பின்னர் "சுஹதாக்கள் நிதியம்" எனும் அமைப்பூடாக மாதாமாதம் நிதி வசதி செய்யப்படுகிறது. இதற்காக பலகோடி வாழ்த்துக்கள்.



றவூப் ஹக்கீம் அவர்களே! உங்களுக்கு 2000-10-02ஆம் திகதி மூதூர் குண்டு வெடிப்பின் ஞாபகம் வருகிறதா? இதற்காக வருடாவருடம் பத்திரிகைகளில் கண்ணீர் கவிதைகள் பிரசுரமாகிறது தெரிகிறதா? இதில் இருபத்தி நான்கு பேர் மரணமடைந்தார்கள். பலர் காயமடைந்தார்கள். மயங்கினார்கள் மூதூர் இருண்டே போனது புரிகிறதா? இப்போது புரிந்திருக்கும் என்று நேரடியாகவே விடயத்திற்கு வருகின்றேன்.

எமது மண்ணில் அன்று முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்காக கைகள். கால்கள். கண்கள். மூக்குகள். நாக்குகள். சிறுகுடல். பெருங்குடல். கிட்னி. இதயம். எனத் தனது தசைப்பிண்டத்தை சுக்கு நூறாக்கி குருதியால் தார் ஊற்றி இன்று சுஹதாக்கள் பட்டியலில் இவர்களும் மூன்று வருடத்தைத் தாண்டுகிறார்கள்.

இவர்களின் குடும்பங்களில் முழுநேர மாணவர்களாகிக் கொள்ள முடியாத நிலையும், வயதுக்கு வந்த வளர்ந்த குமர்கள் திருமணம் முடிக்கயியலாத நிலையும் ஒரு நாளைக்கு ஒரு நேரச் சாப்பாட்டிற்குக் கூட வழியில்லாதவாறு இம்மண்ணில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்காக உயிர் நீத்தவர்களின் குடும்பங்கள் அனுபவித்து வருகின்றதை நான் தினந்தோறும் காணும் காட்சியாக உள்ளது.

**அ.கா.மு. றிஸ்வின், மூதூர்-01.**

இதிலேதான் தாஹீர். முகைதீன் ஷகாப்தீன் எனும் இருவர் தமது இரு கண்களையும் இழந்தார்கள். அன்றிலிருந்து இன்று வரைக்கும் இவர்களின் வாழ்க்கை இருண்டே கிடக்கிறது. இன்னும் இருளே காத்துக்கொண்டிருக்கிறது. அமர்விடத்திலிருந்து ஒரு அடியேனும் நகர முடியாத இவர்களின் வயிற்றுக்கூடியின் நிலை என்ன? மடவளை முஸ்லிம் கிராமத்தைச் சேர்ந்த 10 சுஹதாக்களுக்கு "சுஹதாக்கள் நிலையம்" அமைத்தால் ஏன் மூதூரிலுள்ள 24 சுஹதாக்களுக்காக அமைக்க முடியாது. இவை விந்தையல்லவா?

இப்போது மூதூரிலே தொழிலில்லாப்பிரச்சினையுள்ளது. உதாரணமாக காட்டுத்தொழில். கடற்றொழில். விவசாயத்தொழில் போன்ற முக்கிய மூன்று தொழில்வகையும். முடங்கியதை நான் சொல்லித்தான் நீங்கள் தெரியத்தேவையில்லை! இதனை எதற்காக எடுத்துரைத்தேன் என்பதைத்தெரிந்து ஆக்கபூர்வமாக எமது மக்களுக்காக கருணை காட்டும் வழியைத் திறந்து தாருங்கள்.

# உங்களுக்கு...!

## காத்தான்குடிக்கு புலிகள் வருவது தடைப்பட்டது?

விரைவில் புலிகளை அழைத்து காத்தான்குடியில் ஒரு வைபவத்தை நடாத்துவோம் - விரைவில் அங்கு செல்ல இருக்கிறோம் என முஸ்லிம்களில் ஓரிருவரும் புலிகளும் கடந்த சில வாரங்களுக்கு முன் சொல்லி வந்ததை நாமனைவரும் அறிவோம்! கருணா அம்மான் அயர்லாந்தில் இருந்து திரும்பியவுடன் காத்தான்குடிக்கு வருவதில் அதிக அக்கறையாக இருந்தாராம். ஆனால் அவரை வரவேற்க ஒழுங்கு செய்தவர்கள் பின்வாங்கி விட்டனராம்! இதனால் காத்தான்குடிக்கு கருணாவின் வருகை இப்போது இல்லை!

## முக்கூட்டு முடிவெடுக்க உள்ளதாம்!

முஸ்லிம் காங்கிரஸிலுள்ள மூன்று இளம் முஸ்லிம் பா.உ. கள் இணைந்து ஒரு முடிவுக்கு வர திட்டமிட்டுள்ளனராம். எதிர்வரும் 26ம்திகதி உம்ராவுக்கு சென்று நாடு திரும்பியதும் இவர்களது முடிவு அறிவிக்கப்பட உள்ளதாக அறியமுடிகிறது.

அம்பாறையைச் சேர்ந்த இருவரும் வன்னியைச் சேர்ந்த ஒருவருமான இவ்முக்கூட்டுக்கு மு. கா. தலைவர் எதிர்வரும் தேர்தலில் டிக்கட் கொடுப்பது சந்தேகமாக உள்ளதாம்! தனக்கு வேண்டியவர்களை இப்போது மு.கா தலைவர் அவ்விடங்களுக்கு தயார்படுத்தி வருவதை வெளிப்படையாகவே காணக் கூடியதாக உள்ளதாம்!

## இலங்கையர் சார்பில் யாரைப் பிரேரிப்பது?

ஐ.நா. சபை செயலாளர் பதவிக்கு இலங்கையைச் சேர்ந்த ஒருவரின் பெயரை சிபார்சு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளதாம் - அதற்கு டிரோனின் பெயரை சிபார்சு செய்ய ரணில் முடிவெடுத்துள்ளாராம் - ஆனாலும் இதுவும் பெரும் பிரச்சினைக்குள்ளாகி ஐக்கிய நாடுகள் சபைவரை போவதற்கு வாய்ப்பு உள்ளதாம். ஏனெனில் சந்திரிக்காவும் இன்னொருவரின் பெயரை சிபார்சு செய்ய உள்ளாராம். சந்திரிகா தரப்பில் சிபார்சு செய்யப்பட உள்ளவர் கதிர்காமர் என்றா நினைக்கின்றீர்கள்? பொறுத்திருந்து பாருங்கள்!

## போதைப் பொருளுக்காக குழந்தையை விற்ற தாய்!

கணவனின் தொல்லை தாங்காமல் போதைப் பொருள் வாங்குவதற்காக தனது குழந்தையை விற்ற மனைவியையும் போதைப் பொருளுக்கு அடிமையான குழந்தையின் தந்தையையும் கல்கிசை பொலிசார் அண்மையில் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். நீதிமன்றத்தில் இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது பலத்த பரபரப்பு ஏற்பட்டது. கருணை காட்ட வேண்டாம் என பலர் நீதிபதியை வேண்டிக் கொண்டுள்ளனராம். குழந்தையின் விலை என்ன தெரியுமா? 3750 ரூபாய்தானாம்!

## முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்!

கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபைத்தலைவர் திலங்க மீதான குற்றச்சாட்டுக்கள் பெரும்பாலும் நிரூபிக்கப்பட்டு வருகின்றன. இப்போது அவரை வசமாக மாட்டி விட்டிருப்பவர் முக்கிய பதவியில் உள்ள ஒரு அரசியல்வாதிதானாம். திலங்காவை எப்படியாவது ஜெயிலுக்கு அனுப்பி வைப்பதில் அவர் தீவிரமாக உள்ளாராம்! சந்திரிக்காவிடமிருந்து ஜீ.எல். பீரிஸ் போன்றோரை இந்த அரசாங்கம் கட்சி அமைக்கக் கொண்டு வந்தவர் திலங்க என்பது எல்லோருக்கும் தெரியும் - ஆனால் அண்மைக்காலமாக இவர் - ரணில் தரப்பிலிருந்த பலரை சந்திரிக்காவிடம் கொண்டு செல்ல எடுத்த முயற்சியை அடுத்துதான் திலங்கவுக்கு இந்தக் கதி என்கின்றனர் விசயம் தெரிந்தவர்கள்.

## அமைச்சர் அதாஉல்லா கலந்துகொள்ளவில்லை

சமத்துவத்தரப்பு விவாதம் பாராளுமன்றத்தில் நடைபெற்ற போது அதாஉல்லா கலந்து கொள்ளாதது பலரையும் முகம் சுழிக்க வைத்துள்ளதாம். அபிவிருத்திக்கு முக்கியத்துவம் கொடுத்து அக்கரைப்பற்றை அழகுறச் செய்வதில் அதாஉல்லா காட்டும் அக்கறையை யாரும் கூறுவதற்கில்லை. ஆனாலும் உரிமை விடயத்தில். சமத்துவத்தரப்பு என்பது முக்கியமான விடயமாகும் - முஸ்லிம்களுக்கு எதிர்காலத்தில் ஏதாவது நியாயம் கிடைப்பதாக இருந்தால் - இந்த சமத்துவத்தரப்பு நிலைப்பாட்டில்தான் கிடைக்க வேண்டும். அதாஉல்லா இந்த விடயத்தில் கட்டாயம் கலந்து கொண்டிருக்க வேண்டும் என்பதே பலருடை அபிப்பிராயமாகும்.

# சரிபாதி அமெரிக்கர்கள் புஷ்ஷை ஓரங்கட்டுகின்றனர்

2004-ம் ஆண்டு தேர்தலின் போது அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷை தோற்கடிக்க அநேகமான வாக்காளர்கள் செயற்படுவார்கள் என்றே தோன்றுகின்றது.

'நியுஸ்வீக்' சஞ்சிகை நடத்திய மக்கள் கருத்துக் கணிப்பின் படி. அமெரிக்க வாக்காளர்களில் 50 சதவீதமானோர் ஜோர்ஜ் புஷ்ஷுக்கு எதிராக வாக்களிப்பார்கள் என தெரியவருகிறது.

கடந்த மாதம் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பின்போது 47 சதவீதமாக இருந்த எதிர்க் கருத்துக்கள் தற்போது மீண்டும் 3 சதவீதம் அதிகரித்துள்ளது.

டெமோக்ரடிக் கட்சியைச் சேர்ந்த ஜனாதிபதி வேட்பாளர் வெஸ்லிக்களார்க் என்பவர் ஜனாதிபதி புஷ்ஷைக் காட்டிலும் முன்னணியில் இருக்கிறார்.

# முஸ்லிம் மாணவியர் "பர்தா" அணியத்தடை

(மருதமுனை செய்தியாளர்)

கண்டி மாநகரில் முஸ்லிம் மாணவியர் பாடசாலை வளாகத்தினுள் "பர்தா" அணிவதற்கு முற்றாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மேற்படி விடயம் சம்பந்தமாக மேலும் தெரியவருவதாவது: அரச பாடசாலைகளில் எந்த சமூகத்தைச் சார்ந்தவரும் அப்பாடசாலையில் கற்பிக்கப்படும் மொழிமூலம் கல்வியைக் கற்கலாம் என்பது பொது விதி. முஸ்லிம் பாடசாலையொன்றில் கல்வி கற்கும் ஏனைய சமூக மாண மாணவியர் முஸ்லிம் கலாசாரப்படியே பாடசாலைக்கு வரவேண்டும் என்பதும் நிபந்தனை அல்ல. ஆனால் கண்டி மாநகரில் அமைந்திருக்கும் விகாரமாதேவி பெண்கள் பாடசாலையில் கல்வி கற்கும் சுமார் 2500 மாணவிகளில் 750 பேர் முஸ்லிம் மாணவிகளாவர். இவர்கள் ஏனைய முஸ்லிம் மாணவியர் அணிவது போன்ற பர்தா. ஜீன்ஸ் என்பவற்றை பாடசாலை நுழைவாயிலில் அவிழ்த்து விட்டே உள்ளே செல்ல வேண்டும் எனத் தெரிய வருகின்றது. உலக நாடுகளில் முஸ்லிம் நாடல்லாத நாடுகளில் வாழும் முஸ்லிம் பெண்கள் பர்தா (ஹிஜாப்) அணியத் தடைவிதித்தாலும் நீதிமன்றத்தீர்ப்புகள் மூலம் அணிவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதை நாம் எல்லோரும் அறிவோம்.

இது இவ்வாறிருக்க அண்மையில் (2003-08-30 அன்று) கண்டி புஸ்பதான மகளிர் கல்லூரியில் "மத்திய மாகாண முஸ்லிம்களின் கல்விப் பிரச்சினை" குறித்து ஆராயப்பட்ட நிகழ்விற்கு அமைச்சர் றஊப் ஹக்கீம் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். இதனை மத்திய மாகாணக் கல்வி அமைச்சரே ஏற்பாடு செய்திருந்தார்.

மேற் சொன்ன பிரச்சினை மத்திய மாகாணக்கல்விப் பிரச்சினையோடு தொடர்புடையது இல்லையா? அல்லது முஸ்லிம் சமூக உரிமைப் பிரச்சினைதான் இல்லையா எனப் பலரும் விசனம் தெரிவிக்கின்றனர்.

# சீதன ஒழிப்பு மாநாடு

சென்ற 09-10-2003 வியாழன் அன்று யகம்வெல. தும்மலசூரில் அமைந்துள்ள மஸ்ஜிதுத் தாரிக் ஜும்ஆப் பள்ளிவாசலில் சீதன ஒழிப்பு மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டின் தலைவராக உஸ்தாத் ரஸ்மி ஷாஹிட் (அமீனி) அவர்கள் நியமிக்கப்பட்டிருந்தார். அவர் தலைமையுரையில் சமூகக் கொடுமைகளுள் பிரதான இடத்தை வரதட்சணை பிடித்துள்ளது என்றும் வட்டி. விபச்சாரம். சூது போன்ற கொடுமைகளைவிட ஆயிரம் மடங்குகள் சீதனம் பெரிய கொடுமை என்றும் இன்றய மாநாட்டுடன் இனிமேல் இந்த சீதனம் என்ற விடயத்தில் ஒதுங்கிவாழ வேண்டும் என்றும் வேண்டிக் கொண்டார்.

தொடர்ந்து மௌலவி இஸ்மாயில் (ஸலபி) அவர்கள் இன்றய சூழலில் இஸ்லாமிய இளைஞன் எனும் தலைப்பில் உரை நிகழ்த்தினார். இளைஞர்கள் வழிகெட்டுப் போகக்காரணம் என்ன? இளமை எப்படிப்பட்டது என்பவைகளைத் தெளிவு படுத்தினார்.

தொடர்ந்து மௌலவி மீரான் (பாஸி) அவர்கள் இஸ்லாமியத் திருமணம் எனும் தலைப்பில் உரை நிகழ்த்தினார். அவர் தனது உரையில் திருமணங்கள் இஸ்லாம் கூறியபடி நடை பெறவேண்டும் அன்றய சஹாபாக்கள் மஹர் கொடுத்தே திருமணம் செய்தனர். இஸ்லாம் மஹருக்கு கூடிய கவனம் செலுத்துகிறது இவ்வாறு உணர்வு பூர்வமாக பல கருத்துக்களை குறிப்பிட்டார்.

தொடர்ந்து I.I.R.O. நிர்வனத்தின் பணிப்பாளர் மௌலவி நௌபர் (கபூரி) அவர்கள் உரையாற்றினார். இவர் சீதனம் சமூகக் கொடுமை எனும் தலைப்பில் உரை நிகழ்த்தினார்.தனது உரையில் பெண்கள் சமூகத்தில் விஷேட இடத்தைப் பெறுகின்றனர் கணவனுக்காக எதையும் செய்யத் தயாராகின்றனர். இப்படிப்பட்ட தியாகம் செய்யும் அவர்களிடம் சீதனம். லஞ்சம். வட்டி இதை வேண்டுவது முறையல்ல. சீதனம் ஒரு வழிப்பறிக்கொள்ளை என்றும் குறிப்பிட்டார்.

கடைசி அமர்வாக மாலை அஸர் தொழுகையைத் தொடர்ந்து மௌலவி ஹனீபா (காஷிபி) சட்டக்கல்லூரி மாணவர். இஸ்லாமும் வாரிசுரிமையும் எனும் தலைப்பில் உரை நிகழ்த்தினார். அவர் தனது உரையில் வரதட்சணைக் கொடுமையின் விபரீதங்கள் சமூகத்தில் வாழ்வற்று. வாழ்விழந்து காணப்படும் கன்னிப் பெண்களுக்கு ஆண்வர்க்கமே பொறுப்பு எனும் மகுடத்தில் மக்கள் கண்ணீர் சிந்த உரை நிகழ்த்தினார். தொடர்ந்து சமூகங்கொடுத்த மக்களிடம் சத்திய வாக்குறுதி வாங்கப்பட்டது.

சீதனம் வாங்க மாட்டோம்.
சீதனம் கொடுக்க மாட்டோம்.
சீதனம் வாங்கியதைத் திருப்பிக் கொடுப்போம்
சீதனம் எடுத்து நடைபெறும் திருமணங்களில் கலந்து கொள்ள மாட்டோம்.

அங்கு வருகை தந்தவர்கள் அல்லாஹ்வை முன் நிறுத்தி கையொப்பம் இட்டனர். இம்மாநாட்டிற்கு ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். இந் நிகழ்வுகள் மாலை 6.15 மணி அளவில் முடிவுற்றது.

தொகுப்பு : எம்.எச்.எம்.எ

# அல்குர்ஆன் மத்ரஸா திறப்பு விழா

திஹாரிய ஹிஜ்ரா மாவத்த எனும் கிராமத்தில் சுமார் மூன்று வருடங்களாக வீடொன்றில் இயங்கி வந்த அல்குர்ஆன் மத்ரஸா சென்ற 05.10.2003 (ஞாயிறு) ஆண்டு புதிய கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு "தாருல் இஸ்லாம் லித்த.ஃ.லிமுல் இஸ்லாம்" எனும் பெயருடன் ஆரம்பிக்கப்பட்டது. இதன் திறப்பு விழா வைபவம் மாணவர்களின் நிகழ்ச்சியுடன் சிறப்பாக நடந்தேறியது. இந்நிகழ்ச்சிக்கு மத்ரஸாவின் உஸ்தாத் முஹம்மது ஹனீபா முஹம்மது அக்ரம் அவர்கள் தலைமை வகித்தார். தலைமை உரையில் உஸ்தாத் அக்ரம் அவர்கள் அவர்களின் ஆரம்ப மூன்று வருட சிரமங்களை எடுத்துக் கூறி இன்று இந்த நிலைமைக்கு வருவதற்கு வாய்ப்பளித்த இறைவனைப் புகழ்ந்தார். தொடர்ந்து மத்ரஸா பணிப்பாளர் அல்ஹாஜ் A.C.M. ரம்ஸி அவர்கள் உரை நிகழ்த்தும் போது மத்ரஸாவின் பாடத்திட்டங்கள், எதிர்காலத்திட்டங்கள் போன்றவற்றை குறிப்பிட்டார். இந்நிகழ்ச்சிக்கு திஹாரிய அல் ஜாமிஉத் தௌஹீத் நிறுவனத்தின் அதிபர் உஸ்தாத் ரஸ்மி ஷாஹிட் (அமீனி) அவர்கள் வருகை தந்தார். அவர் அறபு மொழியில் உரை நிகழ்த்தினார். சிறப்பதிதியாக கஹடோவிட த.ஃ.வா நிலைய மௌலவி றிஸ்வான் வருகை தந்து மார்க்க கல்வியின் முக்கியத்துவம் எனும் தலைப்பில் உரை நிகழ்த்தினார். கடைசியாக சகோதரர் எம்.யூ.எம். ஜிப்ரி அவர்களின் நன்றியுரையுடன் இந்நிகழ்ச்சி முடிவு பெற்றது.

தொகுப்பு:- எம். எச். எம். அக்ரம்.

# ஜோர்ஜ் புஷ்ஷின் அடுத்த குறி ஈரான்

ஈரானின் அணு தொடர்பான வேலைத்திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு எதிர்கால உலகில் பலப்பரீட்சை, சர்வதேச ஒற்றுமை மற்றும் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு. பாரதூரமான அழிவுகளை ஏற்படுத்தக் கூடிய சூழலொன்று உருவாகிக் கொண்டு வருகிறது.

அந்தச் சூழலின் கேந்திரம்தான். ஈரான் அணு ஆயுதங்களை உற்பத்தி செய்வதில் ஈடுபடுகிறது என்ற அமெரிக்காவின் குற்றச்சாட்டாகும். இக்குற்றச்சாட்டில் சுட்டிக் காட்டப்படுவது என்னவென்றால். ஈரான் அணு ஆயுதங்களை உற்பத்தி செய்து. அவற்றை மேலும் அபிவிருத்தி செய்வதில் ஈடுபாடு கொண்டிருப்பதால். அதன் பெறுபேறாக மத்திய கிழக்கில் ஆயுதப் போட்டி ஏற்பட்டு. மத்திய கிழக்கும் முழு உலகமும் ஒரு நிலையற்ற தன்மையை எதிர் நோக்கும் என்பதே. ஆனால், தங்களுடைய அணு தொடர்பான செயற்பாடுகளும். நடவடிக்கைகளும் மின்சார உற்பத்தியை முன்னிட்டே செயற்படுகின்றன என்று ஈரான் பதில் அளித்துள்ளது.

ஆனால் உடனடியாக இந்த வேலைத்திட்டத்தினை ஈரான் கைவிட வேண்டும் என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது. இல்லாவிடில் ஈரானுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அணு தொடர்பான இந்த வேலைத் திட்டத்தினை கைவிடப்போவதில்லை என்று ஈரானும் சூளுரைத்துள்ளது. தேவையற்ற கட்டாயத்தினை திணிக்க அதிகாரவர்க்கம் முற்படுமானால். அணு ஆயுத கட்டுப்பாட்டுக்கான தற்போதுள்ள முக்கிய உடன்பாடுகளிலிருந்து தான் விலகப் போவதாக ஈரான் எச்சரித்துள்ளது. அப்படி ஏதும் நடந்தால் அதுவே அணு ஆயுதப் போட்டிக்கு அடிப்படையாகலாம்.

அது மட்டுமல்ல. எதிர்காலத்தில் ஈரானும் ஈராக்கைப் போன்று அமெரிக்காவின் தாக்குதலுக்கும் உள்ளாகலாம்.

# தங்கப் பதக்கம் பெற்றார்



பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச்சங்கத்தின் பவளவிழாவை முன்னிட்டு அகில இலங்கை ரீதியாக நடைபெற்ற கவிதைப்போட்டியில் பொத்துவில் மத்திய கல்லூரி உயர்தர வகுப்பு மாணவரான செல்வன் யூஎல்.எம். அஸ்மின் முதலாமிடம் பெற்று தங்கப்பதக்கத்தினையும் சான்றிதழையும் சுவீகரித்துக் கொண்டார்.

பொத்துவில் பிரதேச சமுர்த்தி சௌபாக்கியா இளைஞர் அணியினதும், ஸம் ஸம் இளைஞர் கழகத்தினதும் அமைப்பாளராக இருக்குமிவர்: 'விடை தேடும் வினாக்கள்', 'விடியலின் ராகங்கள்' எனும் இரு கவிதை நூல்களை வெளியிட்டு இருப்பதோடு. 'தேடல்' எனும் கலை இலக்கிய காலாண்டிதழின் பிரதம ஆசிரியராகவும் இருந்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் பொத்துவில் மத்திய வீதியை சேர்ந்த கே. உதுமா லெவ்வை. எம்.சி. ஆயிஷா தம்பதிகளின் சிரேஸ்ட புதல்வராவார்.

தகவல்:
ஆசிரியர்
எம்.எல். பிர்தௌஸ் (பி.ஏ) பொத்துவில் மத்திய கல்லூரி
பொத்துவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பந்தும் மட்டையும்...

இலங்கை வானொலியின் சிங்களப் பிரிவு நடாத்தும் "சுபாரதி" என்னும் நிகழ்ச்சி காலை 7.00 மணிக்கு ஒலிபரப்பாகின்றது. கடந்த 20.10.2003இல் நடைபெற்ற சுபாரதி நிகழ்ச்சியில் இலங்கை முஸ்லிம்கள் "இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் நடைபெறும் கிரிக்கட் போட்டிகளில் பாகிஸ்தானுக்கு ஆதரவாக நடந்து கொள்வதை காணக் கூடியதாக உள்ளது" என ஒருவர் குறிப்பிட்டார். இதனை நம் நாட்டின் அனைத்து மக்களும் கேட்டிருப்பார்கள்.

இலங்கை எமது தாய்நாடு. இங்குதான் பிறந்தோம். வாழ்கிறோம். இறப்போம். இந்நாட்டில் எமக்குள்ள சகல உரிமைகளும் உண்டு. இனத்தின் அல்லது மொழியின், மதத்தின் பெயரால் எமக்கு ஏதாவதொரு நாடு இடம் தருமா? எமக்கு உரிமை கொண்டாட முடியுமா? அந்நாட்டின் அனுமதியின்றி ஒரு நிமிடம் இருக்க முடியுமா? "தாய் நாட்டின் மீது பற்றிருப்பது ஒரு மனிதனின் கடமையாகும்" என இஸ்லாம் கூறுகின்றது. இது இவ்வாறிருக்க ஒரு பந்துக்கும் மட்டைக்குமாக எமது இனத்தையும் மதத்தையும் காட்டிக் கொடுப்பதா? மற்ற சமூகங்கள் சந்தேகக் கண் கொண்டு பார்க்க இடம் வைப்பதா? நயவஞ்சகர்கள் என்று பெயர் எடுப்பதா? நம்முன்னோர்கள் நம் நாட்டுக்காக செய்த தியாகங்களை கிள்ளுக் கீரையாக்குவதா

சில நாட்களுக்கு முன்னர் "தம்புள்ள"வில் ஒரு கிரிக்கட் போட்டி, ஒரு முஸ்லிம் நாட்டுக்கும் இன்னொரு நாட்டுக்கும் இடையே நடைபெற்றது. அன்று வெள்ளிக் கிழமை விளையாட்டு வீரர்களும் பார்வையாளர்களும் ஜும்ஆத் தொழுகைக்கு செல்லவும் இல்லையென அறிய முடிந்தது. போதாக்குறைக்கு போட்டி நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் 'அல்லாஹு அக்பர்' என கோஷங்கள் எழுப்பிக் கொண்டிருந்ததையும் தொலைக்காட்சி மூலம் காண முடிந்தது. மடமையின் அளவு எல்லை மீறிச் செல்வதை உணர முடிகின்றது.

இந்தக் கிரிக்கட் வீரர்கள் யார்? இஸ்லாமியப் பெயர்களை வைத்துள்ளதால் மாத்திரம் பெரிய சரித்திர நாயகர்கள் அல்ல? இஸ்லாத்துக்காக சொத்து சுகங்களை விட்டு காடுகளில் மலைக் குகைகளில் தியாக வாழ்க்கை வாழும் ஒஸாமாவோ, செச்செனியா போராளிகளோ அல்ல, பணத்துக் காகவும், புகழுக்காகவும், உலக இன்பங்களை அனுபவிக்கவும் கிரிக்கட்டை ஒரு தொழிலாகக் கொண்ட சாதாரண விளையாட்டு வீரர்கள்தான். சிலர் இதற்கு விதி விலக்காகவும் இருக்கிறார் கள்தான்.

இங்கிலாந்து வீரர் நாஸர் ஹுஸைன் பள்ளி வாசலுக்கு செல்வதேயில்லையென அவர் தந்தை ஒரு பேட்டியில் குறிப்பிட்டார். அஸாருதீன் சொந்த மனைவி மக்கள் இருக்க ஒரு சினிமாக்காரி சங்கீதா பிஜ்லானியுடன் ஒட்டிக் கொண்டார் பட்டோடி நவாப் ஷர்மிளாடாகுர் என்ற நடிகையைத்தான் திருமணம் செய்து கொண்டார். புனித ரமழானில் நடைபெற்ற ஒரு கிரிகட் போட்டியில் எந்த வித கூச்சமுமின்றி குளிர்பானம் அருந்திக் கொண்டிருந்த முஸ்லிம் வீரர்களையும் கண்டோம்.

நமது நாட்டில் வாழும் சில இளைய தலைமுறையினர் பொது இடங்களிலும் விளையாட்டு மைதானங்களிலும் நடந்து கொள்ளும் முறை விசனத்துக்குரியதே. ஏதோ ஒரு புனித யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவே இவ்விளையாட்டுப் போட்டிகளைப் பார்க்கின்றனர். வரலாறு நம்மைப் பற்றி தவறான கருத்துக்களை கொள்ள நாம் இடமளிக்கக் கூடாது. நமது நாட்டில் வாழும் முஸ்லிம் புத்தி ஜீவிகள் இது சம்பந்தமாக கூடிய கவனம் செலுத்த வேண்டும். பள்ளிவாயல்கள் முஸ்லிம் ஸ்தாபனங்கள், உலமாக்கள், ஆசிரியர்கள்,



இஸ்லாமிய ஊடகங்கள் கிடைக்கும் சந்தர்ப்பங்களில் இது சம்பந்தமாக இயன்றளவு கவனம் எடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

நாட்டின் பல பகுதிகளிலும் இன்று இனவாதத்தைக் கக்கும் பல அமைப்புக்கள் உருவாகியுள்ளன. முச்சக்கரவண்டி வாடகைப் பிரச்சினை, கடைகளுக்கிடையில் வியாபாரப் பிரச்சினை போன்ற சிறு பிரச்சினைகள் பெரிதாக வெடித்து சில இடங்களில் இலட்சக்கணக்கில் இழப்புக்களும் ஏற்பட வழி அமைந்ததையும் கண்டோம். வீடுகளிலும், வியாபார ஸ்தாபனங்களிலும் கும்பலாகக் கூடுவதும் பட்டாசு கொளுத்துவதும் கூச்சலிடுவதும் இன்று சர்வசாதாரணமாகக் காணக் கூடியதாக இருக்கின்றது. ஒரு பந்துக்கும் மட்டைக்குமாக எங்கள் சமூகத்தை பலிக்கடாவாக்கக் கூடாது.

எச். எம். கவுஸ் மொஹிதீன்

## புனித நோன்பின் மாண்புகள்

புனித ரமழான் நோன்பு முஸ்லிம்களுக்குக் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அதனை உரிய விதிகளின் படி ரமழானிலும், பிற காலங்களில் சுய விருப்பப்படியும் கடைப்பிடித்து ஒழுகினால் அளப்பரிய பயன்களைப் பெறமுடியும். மருத்துவ விஞ்ஞானத்துக்கு, அதன் விருத்திக்கு முன்னரே, வல்ல அல்லாஹ்வும் எமது அன்புக்குரிய நபியுல்லாஹ் (ஸல்) அவர்களும், தீர்க்க சிந்தனையுடன் நோன்பை விதியாக்கினார்கள்.

இருதய நோயாளிகள் புனித ரமழான் மாதத்திலும் குறைந்த பட்சம் பிற நாட்களில் வாரம் ஒரு முறையேனும் நோன்பு நோற்க முடியுமெனின் சந்தேகமின்றிப் பயன்பெற முடியும். பலருக்கு சுமார் நாற்பது வயதை அடையும் போது இருதய நோய் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் இக்காலத்தில் அதிகம் உள்ளன. இக்கால கட்டத்தில் உணவு முறை மாற்றம் காரணமாக நிலைமை மோசமாகலாம். உடற்பயிற்சிகளில் போதியளவு ஈடுபடாதவர்களுக்கு இருதயம் தொடர்பான நோய்கள் ஏற்பட இடம் உண்டு. அலுவலக வேளைகளில் உட்கார்ந்து கடமை புரியக்கூடியவர்கள் விடயத்தில் உடலின் சக்தி, கொழுப்பாக உடலில் தேக்கி வைக்கப்படுகிறது.

அதிக உணவு உண்ணுவதும், குறைவான உடற்பயிற்சியில் ஈடுபடுவதும் சகஜமான வேளையில் கொழுப்புப் படிவங்கள் இருதயத்திலும் இரத்த நாளங்களிலும் சேகரிக்கப்பட்டு, இறுதியில் மாரடைப்புக்கு வழியேற்படுகிறது.

எனவே புனித ரமழான் மாதத்திலும் பிற காலங்களில் குறைந்த பட்சம் வாரம் ஒரு நாளிலும் நோன்பு நோற்பதுடன் மிதமான உணவுப் பழக்கங்களையும் கைக்கொள்ள முடியுமெனின் இருதய நோயாளிகளுக்கு மட்டுமன்றி நாற்பது வயதடைந்த சுகமான, வளமான எதிர் காலத்தை நாடும் யாவருக்கும் அதிசிறந்த ஔடதமாகும்.

புனித ரமழானில் நோன்பைக் கட்டாயமாக்கிய வல்ல அல்லாஹ்வின் கட்டளைகளை முழுமையாகக் கடைப்பிடித்து ஈருலகிலும் நற்பயன் பெறுவோமாக.

ஏ.எம். முஹம்மத் மதனி
ஒகொட பொள.

# வரலாறு தொல்பொருள் ஆய்வுகளை இஸ்லாம் மறுக்கின்றதா? 5

## அறிவைப் பெறும் அடிப்படைகள்

உலகியல் சிந்தனையின் அடிப்படையிலும் சடவாதத்தத்துவத்தின் நோக்கிலும் மனித அறிவின் பண்பை அதாவது அவனையும், அவனது சுற்றாடலையும் அறிவதற்குப் பெரும் துணைபுரியும் கருவியாக புலனுணர்வு, பகுத்தறிவு, தத்துவஞானம் என்பவைகள் திகழ்கின்றன. இவற்றின் தத்துவஞானம், பகுத்தறிவின் தர்க்கரீதியான வளர்ச்சியாகும். பகுத்தறிவென்பது புலனுணர்வினால் பெறப்படும் அறிவின் வளர்ச்சியாகும்.

எல்லாவகையான அறிவின் அடிப்படையும் புலன்கள் மூலமாகவே பெறப்படுகின்றன. அறிவின் மூலமும், தன்மையும் பற்றி பல தத்துவஞானிகள் பல்வேறு கருத்துக்களை முன்வைத்துள்ளனர். இவற்றுள் EMPIRICISM என்ற தத்துவமே அதாவது "மனித அறிவு என்பது புலன்களின் துணை கொண்டு பெறப்படும் அனுபவமே" என்ற கோட்பாடே பெரும்பாலான மனிதர்களின் சிந்தனையை ஆக்கிரமித்து இருப்பதாகும்.

மிகப் பழைமைமிகு கிரேக்க நாகரிக காலந்தொட்டு இக்கோட்பாடு ஏற்றுக்கொள்ளப்பட்டு வந்திருப்பதை நாம் அறிந்துள்ளோம். PROTAGORAS, HERACLID, U.S ஆகியோர் இக்கோட்பாட்டை பிரபல்யப்படுத்துவதில் அதிக பங்களிப்பை நல்கியவர்களாவார்கள். LOCKE,BARKELAY, DAVIDHUME ஆகியோர் மத்திய கால நவீன ஐரோப்பிய சிந்தனையாளர்களும் இக்கோட்பாட்டின் பிரதிநிதிகளாவார்கள்.

### மெய்யான அறிவுப்பரம்பல் ரிஸாலத்திற்கே உண்டு!

"மனிதனது புலன்கள் ஒரு கட்டுக்கோப்புக்குள் உட்பட்டே தொழிற்படுவதினால் புலன்களின் மூலம் பெறப்படும் அறிவும் ஒரு வரையறைக்குட்பட்டே செயற்படும்" என்பதினால் மனித சிந்தனையின் அடிப்படையில் தோன்றிய அனைத்துத்தத்துவங்களும் கால ஓட்டத்தின் மாற்றத்திற்கும், திருத்தத்திற்கும் உட்பட்டே வந்திருப்பதை நாம் அவதானிக்கலாம். ஆயின் புலன்களின் துணைகொண்டு பெறப்படும் அறிவே யதார்த்தமானது என்ற கோட்பாடு வலுவிழந்ததாகும்.

எனவே, மனித அறிவின் மூலம் உண்மைகளைக் கண்டறிவதில் தடுமாற்றங்களும், தவறுகளும் நிகழ முடியும். இதற்கு நல்லதொரு உதாரணமாக மருத்துவத்துறையில் நோய்கள் பற்றி எழுந்த கோட்பாடுகளைக் கொள்ளலாம்.

"ஒரு காலத்தில் நோய்கள் உடல் கோளாறுகளினால் ஏற்படுகின்றன என்று கருதப்பட்டது. பின்னர் உடல் நலிவினாலும், மன உளைச்சல்களினாலும் நோய்கள் வருகின்றன எனறு கண்டுபிடிக்கப்பட்டது. இப்போது இக்கொள்கை பரவலாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இதற்கு உடலும் உள்ளமும் சார்ந்த நோய்கள் என்று பெயர் வழங்கப்படுகின்றது.

இதனால்தான் வரலாற்றில் "புலன்களினால் பெறப்படும் அறிவை சிந்தனை, ஆராய்ச்சி, பரிசீலனை மூலமாகப் பகுத்துணர்ந்து பெறப்படும் அறிவே யதார்த்தமான அறிவு" என்ற கருத்து தோற்றம் பெற்றது. இதுவே "பகுத்தறிவு வாதம்" என அழைக்கப்பட்டது. பிளேட்டோ இத்தத்துவத்தின் பிரதானமானவர்களுள் ஒருவராவார்.

எது எப்படியிருந்த போதிலும், படைப்பினங்களின் இலக்கு, இலட்சியம் பற்றிய எந்தவிதமான அறிவுகளையும் பகுத்தறிவு வாதம் மனிதனுக்கு நல்கவில்லை. இதனால் இதனையும் ஒரு சம்பூரணமான அறிவாகக் கொள்ள முடியாது. மாற்றத்திற்கும், திருத்தத்திற்கும் அடி க்கடி இரையாகி ப்போகின்ற ஒன்று உயர்ந்த கோட்பா டாகத் திகழத் தகுதியு டையதன்று. புலனறிவுகள் நிலை யான கருத்தை, கோட்பாட்டை வழங் கத் தக்கதில்லை என்பதை நாம் நிதர்சனமாக உணர முடியும்.

**எம்.எம்.எம். நூறுல்ஹக் சாய்ந்தமருது 05.**

ஆனால், நபிமார்களின் அறிவான வஹி மூலம் பெறப்படுகின்ற அறிவில் தவறுகள், தப்புக்கள் நிகழாது என்ற நம்பிக்கையே முஸ்லிம்களிடம் இருக்கின்றது - இருக்கவேண்டும். இதுவும் முஸ்லிம்கள் ஏனையவர்களிலிருந்து வேறுபடுவதற்குரிய காரணங்களில் ஒன்றாகும்.

### நபித்துவமில்லாத மனித சமூகம் நானிலத்தில் இருந்ததில்லை

இப்பூவுலகில் தோற்றுவிக்கப்பட்ட அனைத்து மனித சமூகத்தின் - வர்க்கத்தின்பாலும் நபிமார்கள் அனுப்பப்பட்டிருக்கின்றனர். நபித்துவமில்லாத மனித சமூகம் இருந்ததில்லை என்பதையும் நபித்துவ வழிகாட்டுதலின் பின்னர்தான் மீறியோர்கள் தண்டிக்கப்பட்டிருக்கின்றனர் என்பதையும் இஸ்லாமிய மூலாதாரங்களின் முதற்தர ஆதாரமான குர்ஆன் பின்வருமாறு எடுத்துக்காட்டுகின்றது.

"ஒவ்வொரு சமூகத்தினருக்கும் ஒரு ரஸூல் (தூதர்) உண்டு" (குர்ஆன் 10:47)

*"எந்த சமுதாயத்திலும் அதில் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவர் செல்லாமல் இல்லை" (குர்ஆன் 35:24)*

*("இவ்வாறு தூதர்களை அவன் அனுப்பியதற்கும்)காரணம் யாதெனில் அநியாயம் செய்பவர்களின் ஊரை, அதிலிருப்போர் எச்சரிக்கை செய்யாமலிருக்கும் நிலையில் அவர்கள் செய்துவிட்ட அநியாயத்தின் காரணமாக உம் இறைவன் அழிப்பதில்லை என்பதேயாகும்" (குர்ஆன் 6:131)*

*இன்னும் வரும்*

# பள்ளிமுனைக் கிராமத்தின் கதை

14 குறுநாவல்

-என்.ஏ.தீரன்-

## அத்தியாயம் 6

நடக்க ஆரம்பித்து சிறிது தூரத்தில் மறுபடி ஒரு முச்சந்தி. மறுபடி ஒரு தபாற் கா.. ரனில்ல.. பொலிஸ்.. ஓ.. பொலிஸ்.... பொலிஸ்... பொலிசிக் காரண்... ரைற்! அல்லா! அல்லாவழி காட்டிட்டான்! பொலிஸ்..... காட்டவ்லியா அப்பா! புதிய தைரியத்தினால் உற்சாகமடைந்து நெருங்கினான். ஒரு பெரிய மோட்டர்சைக்கிள் ஓரமாக நிறுத்தப்பட்டிருந்தது. அதில் வெள்ளைக் கையுறையுடன் மோபைக் சீற்றில் சாய்ந்து உட்கார்ந்திருந்தான். மற்ற பொலிஸ்காரன் வாகனச் சமிங்ஞையில் குறியாயிருந்தான்.

'சேர்... சேர்....சேர்... மாத்தயா.... சேர்!'

'.......'

'சேர்... சேர்....!

'கவ்தபாங் ஒயா?'

'சிங்களம் தெரியா சேர். நாங்க பள்ளி முன. வழிதப்பி உட்டுட்டு ஓடிட்டான் சேர். யூக்கேட லொச்சில என்ட மாமியும்... மைம்னாவும்...'

'அநே! தெமளத? ஐடென்டி எக்க கண்ட பலமு!'

'ஐட்டிங்காட்டு லொச்சில சேர்!'

'நெத்த? உம்ப கொட்டிஹொத் தன்நே!'

உடன், கழுத்தில் தொங்கிய விசிலை மெலிதாக "உய்க்" கென்றான். வெள்ளைக் கையுறை திரும்பிப்பார்த்தான். இவன் வரச் சொல்லி சைகை செய்ய அவன் வந்தான்.

'மச்சாங்! மேகொல்லாட்ட டிக்கக் கதா கரண்ட! மொகத்த பிரஸ்ன கீயலா... தெமள, தெமள...?

வெள்ளைக் கையுறை முத்து முகம் மதை உறுக்கிப் பார்த்தான். திடீரென முத்து முகம்மதின் கைகளைப் பிடித்து முறுக்கி உயர்த்தி இடுப்பை சோதித்தான். நெஞ்சிலும் கால்களுக்கிடையிலும் தடவி பின், முத்துமுகம்மதின் சேர்ட் பைக்குள் கைவிட்டு மைமுனாவின் 'பேர்ஸை' எடுத்தான். திறந்து பார்த்தான், ஒன்றுமில்லை. பின், யாஸீனைப் பார்த்தான் திடீரென அதிசயமாக-

'நீங்க எவடம்? உன்ட பேரென்ன?' என்றான் பழக்கமான தமிழில் முத்துமுகம்மதின் காதுகளில் தமிழ் இன்பத் தேனள்ளிப் பாய்ந்தது ஒரு கணம் பள்ளி முனையே காலடியில் தெரிந்து மறைந்தது.

'சேர்.. என்டல்லோ.. சேர். ஏமாத்திக் கூட்டிட்டுவந்து வழி தப்ப உட்டுட்டு ஓடிட்டான் சேர். சப்புட அறாமி! மைம்னாவ லொச்சில வெச்சிருக்கான் சேர். யூக்கேட லொச்சி சேர். கைல ஒரு சதமும் ல்ல சேர்.. அல்லா...?

'டேய்! பொறு! மெதுவாச் சொல்லு! உன்ட பேரென்ன?'

'முனா முத்துமுகம்மது சேர். இவன் என்ட மச்சினன், ஆனா யாஸின் சேர்'

'சரி இப்படி வா!'

பக்கத்திலிருந்த ஒரு தள்ளுவண்டிக் கடையில் இரண்டு 'கோலா படி' எடுத்து முத்துமுகம்மதிடம் நீட்டினான். 'ந்தா முதல்ல இதக் குடி!'

'குடிரா யாஸின்! குடிரா..'

'நீயும் குடி! சரி இப்ப சொல்லு.. என்ன நடந்தது?'

முத்துமுகம்மது முடிந்தவரை சொன்னான். யூக்கே லொட்ஜ் எங்கேயென்று சொல்லத்தெரியவில்லை. 'கொழும்பு யூக்கே லொச்சி' என்பது தவிர மருதானை என்று தெரியவில்லை.

'ஏய். மொட்டையாக லொச்சி லொச்சி என்டால்.. எந்த இடம் என்டாச்சும் தெரியாதா? மரதான? கொள்பிட்டி?

'..ல்ல சேர்..'

'வெள்ளவத்த'

'ஓம் சேர்...'

'தெஹிவளயா'

'ஓ..ம்... ல்ல சேர். செரியாத் தெரியாது சேர். வெளிநாடு போற ஆக்கள் தங்குறது. யூக்கேட லொச்சி!'

'அப்படிக் கண்டுபிடிக்க ஏலாது. நீ இப்ப எங்க போகனும்?'

லொச்சிக்கு! மைம்னா...'

'அதான் இடம் தெரியாதே.. அத விடு! பொலிஸ் ஸ்டேசனுக்கு போறியா?'

'ல்ல சேர்! டென லொச்சிக்கி...'

'பேச்.....ர மகனே! லொச்சி எடம் தெரியாம எப்பிடிப் போறடா?'

'... என்... டல்லோவ்....வ்! ம்மோவ்!'

'இப்பிடியே கத்தி அழுது இஞ்ச சுணங்கினா, அங்க அவன்... ஆரு... சுலைமான் எண்ட மச்சிக்கு புள்ள குடுத்...?

'ல்ல...ல்ல..சேர்... என்ன தலவர்ர ஊட்ட உடுங்கசேர்!'

தலைவரா...? அப்படீண்டால்.. யாரு?'

'இஸிலாங்கட்சித் தலைவரு. இஸாக் எம்.பி.!'

'அவரா? அவருக்கு எப்பிடி உன்னத் தெரியும்?'

'என்ன வெரச் சென்ன! கொளும்புக்கு!

'உன்னையா.....? ஏன்... கொத்துரொட்டி அடிக்கவா?'

'ல்ல கூட்டம்! கட்சிக் கூட்டம்!'

'.......'

'சேர்... சேர்... காலப்புடிச்சன் சேர்!'

'விடு காலை! கொஞ்சம் பொறு வாறன்!'

வெள்ளைக் கையுறை மறுபடி வீதிக்குப் போனான். வாகனங்களை கூர்ந்து பார்த்தான், பத்து நிமிடமாயிற்று... ஒரு வாகனத்தை நிறுத்தினான். 'பஜரோ' பளபள நிறத்தில் மினுங்கியது. அதன் சாரதி இவனுடன் சிநேகமாய் சிரித்தான். இருவரும் பத்து நிமிடங்கள், பேசிக் கொண்டிருந்தனர். முத்துமுகம்மதுக்கு ஆத்திரமாக இருந்தது. அவசரமாக இருந்தது.

திடீரென வெள்ளைக் கையுறை முத்து முகம்மதைக் கூப்பிட்டான்.

'இதுல ஏறுங்க! எம்பிர வீட்டுல கொண்டு விடுவாரு! செரியா?'

'காட்டவ்லியா அப்பா! சேர், அல்லாதான் ஒங்கள கொண்டு உட்ட, ந்த தெவிய என்ட சீவியத்திலயும் மறக்கமாட்டன் சேர்!'

'செரி செரி ஏறு! ஜீப்புல!'

வாழ்க்கையிலேயே முதற்தடவையாக, குளிரூட்டப்பட்ட பஜரோவில் ஏறினர். 'ஜீப்பு என்ன மச்சான் கூளாயிரிக்கி!' யஸீன் சகலமும் மறந்து அனுபவித்தான்.

சாரதி முத்துமுகம்மதை பார்த்து பரிதாபமாய் சிரித்துவிட்டு அசுர வேகத்தில் கிளப்பிப் பறந்தான். இருபது நிமிடம்.. அங்கும்.. இங்கும்.. சந்தும்.. பொந்துகளும் விசாலப் பாதையும்.. திடீரென பஜரோ நின்றது. சாரதி இறங்கினான்.

'ஹரி.. ஹரி பகின்னகோ! மேக்கதமா கெதர'

சாரதியே கதவைத் திறந்தான். இருவரும் இறங்கினர். ஜீப்பிலிருந்த வானொலியில் நண்பகல் செய்திப் பின்னணி ஒலித்தது. செய்தி சிங்களம் பேசியது... 'ந்நேரம்.. மைம்னா.. என்ன கெதியோ..அல்லா...'



சாரதி விரைவாகச் சென்று வீட்டின் உயரமாக கதவைத் திறந்து உள்ளிருந்த பொலிஸ்காரனுடன் பேசினான். அவன் சிரித்து இவர்களை உள்ளே அனுமதித்தான். ஜீப் போய்விட்டது. பொலிஸ்காரன் 'செல்பேசியில்' உள்ளே தகவல் சொன்னான். சிறிது நேரத்தில்-

வீட்டினுள்ளிருந்து ஒருவர் வெளியே வந்தார். கம்பீரமாகவும், கண்ணியமாகவும் இருந்தார். கண்களில் மட்டும் சிறிய பொறாமை தெரிந்தது. முத்துமுகம்மதுக்கு இவரைத் தெரியும். இவர் ஹூஸைன் பாறுக்! தலைவரின் இணைப்பதிகாரி!

'யார் வந்தது...? ஏய் யார் நீ?'

'சேர் நான் முத்துமுகம்மது. பள்ளிமுன. தலவர ஒடன பாக்கனும்'

'அப்பிடி 'ஒடன' பாக்கேலா! டேய், யார்ரா நீ?'

'சேர், தலைவர் என்ன கோள் பண்ணி வெரச்சென்ன. பள்ளிமுன செய்லான் ஆசிரியர் வீட்ட...'

'உன்னையா.... அதுவும் கோள் எடுத்தா?'

'அல்லறிய சேர்!'

'பேரென்ன? மூத்தம்பியா?'

'முத்துமுகம்மது சேர்!'

'சரி இப்பிடி இரி!'

உள்ளே போய்விட்டார். முத்துமுகம்மது மர நிழல் சீமெந் கதிரையில் அமர்ந்தான். தரையெல்லாம் புல் வளர்ந்து வெட்டி பசு மையில் குளித்திருந்தது... குரோட்டன்.. காராமுட்டன்... மல்லிகை... சின்னச் சின்ன பொண்ஸாயி'... விருட்சங்கள்.. பத்தடி தூரத்தில் தலைவரின் கறுப்பு பஜ ரோ.. மிக்க அமைதி.. 'காவ்க்... காவ்க்' என்று கொழும்புக் காகம்..... யாஸீனின் கொட்டாவிகள்...

முத்துமுகம்மது பார்த்துக் கொண்டிருக்கும் போதே "சட்"டென வீட்டின் உட்புறக்கதவு திறக்க- தலைவர்!

(இன்னும் வரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினைக்கான தீர்வு சமஷ்டி முறைமையில் காணப்பட வேண்டும்!

சாரம் — ஆங்கில ஊடகங்கள் — தமிழில்: ஏ.எம்.மிமாஜுமட்மதனி

இடைக்கால அரசியல் தீர்வு தொடர்பாகப் புலிகளின் கருத்துகளைக் கொண்ட ஆலோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வேளையில் அரசாங்க-எதிர்க்கட்சிகளின் பேச்சுவார்த்தை மூலம் முடிவு காணல் அரசியல் சீர்திருத்தங்கள் ஏற்படுத்துதல் எனும் முறைகள் முக்கியத்துவம் பெறுகின்றன. இனப்பிரச்சினை கடந்த ஐந்து தசாப்தங்களுக்கு மேலாக வழிப்படுத்தப்பட முடியாமற் போனதற்கான முக்கிய ஒரு காரணம். அதனைத் தீர்ப்பதற்காக ஒன்று சேர்ந்து செயற்பட அரசியற்தலைவர்களின் இயலாமை அல்லது விருப்பமின்மையாகும்.

இப்போதைய சமாதான முன்னெடுப்புகளை விளக்கும்போது. அதன் முக்கிய பலவீனம் அதில் பொதுமக்களின் பங்கின்மை என அடிக்கடி கூறப்படுகிறது. அரசாங்கம் தான் என்ன செய்யப்போகிறது என்பதையிட்டு உண்மையாக மக்களுக்கு வெளிப்படுத்துவதாக இல்லை என மக்களிடையே அபிப்பிராயம் நிலவுகிறது. இது மக்களிடையே அச்சத்தை தோற்றுவிப்பதுடன் சமாதான முன்னெடுப்பின் இப்பலவீனத்தைப் பயன்படுத்திப் பெரும் நம்பிக்கைத் துரோகம் நடக்கப்போகிறது என்று கோருவதற்கு எதிர்க்கட்சியின் சில பிரிவினருக்கு இடமளிக்கிறது.

இடைக்கால நிர்வாகம் பற்றிய புலிகளின் ஆலோசனைகள் சமாதான முன்னெடுப்புக்கு எதிர்ப்பை உருவாக்குமென்று அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

புலிகளின் கோரிக்கைகள் மிகப் பெரிய அளவில் அமைந்திருக்குமென்றும், எதிர்க்கட்சிகள் இதனை வாய்ப்பாய்ப் பயன்படுத்தி மக்களை அரசாங்கத்திற்கும் சமாதான முன்னெடுப்புக்கும் எதிராகத் திருப்புவதற்கு முடியுமென்றும் கருதப்படுகிறது.

புலிகளின் கோரிக்கைகளை அரசாங்கம் வழங்காத போது, அல்லது வழங்கமுடியாத போது புலிகள் போருக்குத் திரும்புவர் என எதிர்க்கட்சியின் ஒரு பிரிவு மக்களிடையில் பய உணர்வைத் தோற்றுவிக்கின்றது.

இவ்வகையில் கம்யுனிசக்கட்சியின் தலைமையில் எதிர்க்கட்சிகளின் பல உறுப்பினர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட பீட்டர் கெனமன் ஞாபகார்த்தக் கருத்தரங்கு முக்கியமானது. சமாதான முன்னெடுப்பின் எதிர்காலம் பற்றிப் பலரும் கருத்துத் தெரிவித்தனர். அரசாங்கம் இவ்வாறு எதிர்க்கட்சி உறுப்பினர்களின் முயற்சிகளை அணுகமுடியுமெனின், அரசாங்கம் தனது எண்ணங்களை அச்சமின்றி மக்களுக்கு விளக்க முடியும்.

## முதல் முன்னடைவு

புலிகள் கோரும் இடைக்கால நிர்வாக அமைப்பு உயர்வான திட்டங்கள் கொண்டதாக இருக்கலாம் எனச் சந்தேகிக்க அதிக இடமில்லை. முதலில் முன்வைக்கப்படும் சமர்ப்பிப்பு என்ற வகையில் இவ்வாறு தான் எதிர்பார்க்கப்படுதல் வேண்டும். எக்கட்சியினதும் முதல் கோரிக்கை அதிகமானவற்றையே கேட்கும். பேச்சு வார்த்தைகளின் தன்மையினை உணர்பவர்கள் மக்களுக்கு இதனைத் தெளிவுறுத்த வேண்டும்.

இது அரசாங்கத்தின் மட்டுமன்றி அனைவரதும் பொறுப்பாகும். பீட்டர் கெனமன் நினைவுக் கருத்தரங்கினை இதற்கு அடிப்படையாக கொள்ள முடியும்.

சமாதான முன்னெடுப்பு தொடர்பாக அரசின் தாமதமான, பொதுவான போக்கும், சிறு சிறு நடவடிக்கைகளும் வரவேற்கத்தக்கதல்ல. இது இறுதியான அரசியல் தீர்வைப் பாதிக்கும். புலிகளின் தூரநோக்கான செயல்களுக்கு அரசு மெதுவான குறுகிய அளவில் பதிலளிக்கிறது. தனது சுயமான திட்டங்களை வெளியிடுவதை விடப் பிற ஒருவரின் திட்டரீதியான செயல்களுக்குப் பதில் அளிப்பது இலகுவானது.

மீண்டும் யுத்தம் ஏற்படக்கூடாது என்பதிலேயே அரசாங்கம் கண்ணும் கருத்துமாக இருக்கிறது. எல்லா இனத்தினரும் சமாதானத்தையும், நீதியையும் ஏற்படுத்தக்கூடிய மீளமைக்கப்பட்ட இலங்கை பற்றி அரசு அக்கறை கொண்டதாக இல்லை.

அரசாங்கம் எத்தகைய அரசியற் தீர்வை மனதிற் கொண்டிருக்கிறது என்பது பற்றி இந்நாட்டு மக்களிடம் தெளிவு இல்லை.



புலிகளின் திட்டம் வடக்கு-கிழக்கிற்கு எனவும் நாட்டின் பிற பகுதிகளுக்கெனவும் இரு சமஷ்டி அரசுகள் இருக்க வேண்டுமென்பதாகும் என ஊகிக்கலாம். இப்படி ஆண்டுகளாகப் போராடிய அவர்கள் தமக்கும் கொழும்பைப் போன்ற அதிகாரம் தேவை என எதிர்பார்க்கின்றனர்.

## மாற்றுவழி

இறுதித்தீர்வுகள் எவ்வாறு இருக்கும் என்பது பற்றி தனது கருத்தை அரசு வெளியிடாமல் புலிகளது ஆலோசனைகளுக்குப் பதில் அளித்துக் கொண்டேயிருந்தால், பேச்சு வார்த்தைகள் புலிகளின் நிபந்தனைக்கமையத்தான் நடைபெறும் என்பது தவிர்க்க முடியாதது.

அரசாங்கம் இந்நாட்டில் சமஷ்டி ஆட்சிமுறையினையிட்டுப் பிரசாரம் நடத்துவது போல் தெரியவில்லை. அந்த அமைப்புக்கள் தயாராகுவது போலும் தெரியவில்லை.

இதற்குக் காரணம் இத்தகைய ஏற்பாடுகளில் கடந்த அரசு மேற்கொண்ட முயற்சிகள் தோல்வி கண்டமையாக இருக்கலாம்.

எத்தகைய தீர்வு அறிமுகப்படுத்தப்படினும் வடக்கு - கிழக்கு வாழ் முஸ்லிம்களதும், சிங்களவர்களதும் உரிமைகள் மறுக்கப்படலாகாது. வடக்கு கிழக்கு தவிர்ந்த பகுதிகளில் வாழும் தமிழ் மக்களின் உரிமைகளும் கவனிக்கப்படவேண்டும்.

எனவே அரசாங்கம் புலிகளின் நிபந்தனைகளுக்கு இணங்கி நடப்பதை விடச் சமஷ்டி அமைப்பின் கீழ் முழு நாட்டு மக்களும் நிம்மதியாக வாழ வழிவகை மேற்கொள்ள வேண்டும்.

புலிகள் இராணுவ பலத்துடன் அன்றி அரசியல் ரீதியில் செயற்பட முன் வரவேண்டும்.

அத்துடன் சிறுவர்களைப் படையிற் சேர்த்ததாயினும் சரி அரசியல் ரீதியிலான படுகொலைகள், பலவந்தப்படுத்தல் என்றாலும் சரி புலிகளின் நேரடியான தாக்குதல் வன்செயல்கள் என்பன கடந்த காலங்களுக்குரியவை என ஒதுக்கிவிட்டு சகல தரப்பினருடனும் ஒத்துழைக்க முன்வர வேண்டும்.

–ஜெஹான் பெரேரா
டெய்லி மிரர்
14.10.2003.

---

குறுங்கதை

"என்னடா பொடிப்பயலுகளா கூடிக்கிட்டு இங்கு முருங்கச் செதவலுக்க கவுத்தப் போட்டு கட்டி தோளுல மாட்டினா தொவக்கா போகுமா? மொளச்சி மூணு எல உடுகிறத்துக் கெடையில வெளயாடக் குள்ளேயும் இந்தப்பழக்கந்தானா? மெய்மியா தொவக்கெண்டாப் போல எங்களுக்கு பயமில்ல. மனிசனாய்ப் பொறந்தா எப்படி வாழணும் எண்டு எண்ட பரம்பர சொல்லிடுச்சி. நேத்து மொளச்ச நெத்தலிக் குஞ்சிகள் இந்த எம்பது வயசுக் கெழட வெரட்டிப் பாக்கீங்க... என்ன ஓர்மட ஒங்களுக்கு. மரமறியாதவனுகள் எண்டு நெனச்சா எலபறிச்சிக் காட்டீங்க. இந்த ஒலகத்து சுத்தி கேட்டுப் பாத்தா எண்ட பரம்பரயப் பத்தி புட்டுப்புட்டு வெய்ப்பாங்க.

பாலவனத்தில பொறந்த எண்ட கோத்திரத்தாரு ஈச்ச மரத்த உண்டாக்கின ஒடனே வானத்திலே இருந்து போட்டோ பிடிச்சுப் பாத்த அஞ்சாறு நரிக்கூட்டம் சேந்துக்கிட்டு. ஈச்சமரத்துக்கீழ எண்ண இரிக்கி எண்டு போட்டு பூந்தவனுகள் இன்னும் போகல. இஞ்ச என்னடான்னா பேயிற மழையில நாலு தென்னங்கண்ட வெச்சி இணலில குந்திக்கிற்று தண்ணி குடிக்கலாமெண்டா இஞ்சயும் நாலஞ்சி மிருகசாதிகள்ல கரச்சல் தாங்க ஒண்ணுதில்ல. அதோ காய்கிற மரத்துக்கு கணக்குப் பாத்து என்னெண்டான தெரட்டாம், என்னொரு ஆக்கள்ளப்பா.

தள்ளாடுற வயசிலயும் மரத்துக்குக் கீழண்டான காலத்தக் கழிப்பமெண்டு பாத்தா மானம் மரியாத தெரியாத புள்ளக் கெளயளா சேந்துக்கிட்டு அநியாயம் செய்றனுகள். அன்னரம் நாங்களும் புள்ளயலா இருந்தான் இப்பிடியெல்லாம் இல்ல. அந்தக்காலத்தில நாங்க வெழயாடத வெளயாட்டா. தென்னமர ஒல மட்டய வெட்டி புடவத் துண்டுகள உருட்டி பந்தாக் கட்டி அடிச்சி வெளயாடினத, புதிசாக் கண்டு புடிச்ச மாதிரி கிரிக்கட் எண்டு சுத்துறதப் பாத்தா பொக்க வாயெண்டும் பாக்காம சிரிக்கணும் போல இரிக்கி. எங்களுக்கு காது குத்த வராதெங்க அந்தப் பழக்கத்த செய்றல்ல. இந்த ஒலகத்துக்கே நாகரீகத்த கத்துக் குடுத்தவங்க நாங்க இரிக்கக்க முருங்கச் செதவலக்காட்டி பயமுறுத்துறீங்களா தம்பிமாரே!

நீங்கெல்லாம் பொறக்காத அந்தக் காலத்தில இந்த எடத்தில ஒங்குட மூதாதையர்களும் நாங்களும் எப்பிடி அன்னியோன்யமா ஒண்டுக்குள்ள ஒண்டா சண்ட சச்சரவில்லாம ஒராளுக்கொராள் ஒதவியாக் கெடந்த காலத்த நினச்சா வாயூறும். நட்ட நடு சாமத்தில ரெட்ட மாடு வண்டி பூட்டு அரிகன் லாம்ப வண்டிலுக்குக் கீழால தொங்க உட்டு அந்த வெளிச்சத்தில ஒத்த நாயி வளிப்பாடு காட்டி வர நாங்க வண்டில் பொட்டிக்க தூங்கி முளிக்கும் போது கம்பு வெட்டும் காட்டுக்குள்ள வண்டில் போயிரும்.

அது வரைய்க்கு எங்கள ஆரும் மறிக்கிறதுமில்ல களவெடுக்கிறதுமில்ல. காளிதாஸ் படத்த ராவோடு ராவாக ரெண்டு தரம் பாத்துப்புட்டு மழுக்கால் இருட்டுக்க கூட பேய் பிசாசிக்கித்தான் பயமே தவிர இந்த மிருக சாதிக்கெல்லாம் பயமில்ல. பேருகளில வேற வேற கருத்திருந்தாலும் ஊருக்குள்ள ஒற வாத்தானிருந்தம்.



சொல்லன்பன் நசிறுதீன்
ஒலுவில்

வழிபாடுகள் வேற வேறயா இருந்தாலும் வேண்டுதல்களெல்லாம் ஒண்டாத்தான் இருந்திச்சி. அல்லயல் அடுத்த ஊடுகளா இருந்துக்கிட்டு வயல்களில வெள்ளாம வெட்டுறது புல்லுப் புடுங்கப் போறது கல்லு வெற்றது இப்பிடி எல்லா வேலைக்கும் ஒண்டாத்தான் போவம் வருவம் எல்லாருக்கும் சேத்து பேயிற மழத் தண்ணிய மறிச்சுக்கட்டி வெச்சிக்கிட்டு எல்லாரும் குடிச்சோம் குளிச்சம் பயிரு பச்ச உண்டாக்கினம் ஆருக்கும் ஆரும் கப்பங்குடுக்கயுமில்ல கப்பல் ஓடயுமில்ல. மனிசனா காலங் கழிச்சம் தவிர மானத்த வெல பேசல்ல.

நல்லாப் பாருங்க இண்டய்க்கும் குயில் குஞ்சிக்கு காகந்தானே மருத்துவச்சி வேலபாக்குது. மனிசன் ஒசந்த சாதி எண்டு நினச்சிக்கிட்டு எல்லாருமாச் சேந்துக்கிட்டு ஒலகத்தப் போட்டு நாசமாக்குறானுகள் பாவிகள்.

வேப்பங்குச்சியில பல்லுத் தீட்டி வீரக்கொள்ளியில தண்ணி சூடு காட்டி நன்னாரி வேர் கலந்து சக்கரயோட தேயிலய செரட்டல குடிப்பம். எருமப் பாலில செரக்காய அவிச்சித் திண்டு நோய் கீய் இல்லாம வளர்ந்த ஒடம்பு. களிமண் செவருல குடில் கட்டி வைகோலால கூர மேய்ஞ்சி நொளும்புக்கடி என்னெண்டு தெரியாம தன்ன மறந்து நித்திர கொண்டு சாமத்தில உசாரா வேல வடைக்கு போன உடம்பு.

டேய் மக்காள்!

ஈரக் கொலய போட்டோ புடிச்சி எணக்கத் தெரியும் எண்டு கோழியாக் கூவுதுகளே. அந்த மனசில கூடுகட்டிக் கெடக்கிற ஏக்கங்களையும் தாக்கங்களையும் படம் புடிக்கிற மிஷினக் கண்டு புடிச்சிருக்காங்களா? சண்ட சச்சரவாகுதல் கொறஞ்சிருக்கும். வானத்துக்கு கதைக்கும் மிசினக்கண்டு புடிச்ச மனிசனுக்கு, பக்கத்து வீட்டு காரன்ட பசிக்குரல் கேக்கிற மிசினக் கண்டு பிடிக்க முடியல்ல.. ஒளிச்சிருந்து சுடுகிற தொவக்க வைச்சிருந்தா சண்டியனா? ஒத்தைக்கு ஒத்தையாய் நேர நிண்டு மோதிப்பாக்கணும் அப்பான் பெலன் தெரியும்.

கரிமருந்தா எரி பொருளா எண்டு பூமி சுத்துறது தெரியாம, முதிரக்கட்ட யோட மோதுறத்திற்கு முருங்கச் செதவலோட வெட்டக்கரங் இரிக்கீங்க. மக்காள்! மக்காள்!

"ஆமானதெல்லாம் ஆலிசப்படுகுதாம் பீத்தச் சொளகு மாத்தெள்ளுது" எண்டாப் போலதான் இந்த ஒலகத்திர கதகாலு கெடக்கு. ஆரு எழச்சவன் ஆரு வலுத்தவன் எண்டு சண்ட புடிச்சிப் புடிச்சி ஒண்டயுங்காணல்ல. நானும் பொறந்த காலத்திலிருந்து பாக்கன் நிம்மதிய இப்ப உள்ளாக்கள் தான் தொலச்சிப் போட்டாக பூக்களால மணந்து கெடந்த பூமி இரத்தவாடையால பொணம் எழும்புது. ஒத்துமையாக் 'கெடக்கிறவெண்ட தேசமெல்லாம் செல்வம் கொழிக்குது. நம்முட பகமயால நம்முட மண்ணு கரியாப் போச்சி. எல்லாருக்கும் செங்கோல் புடிக்க ஆசதான் அதுக்கு நடமொற நல்லா இரிக்கணுமே! எல்லாரையும் ஒண்டு போல கவனிச்சாத்தானே எல்லா மனிசனும் சேர்ந்து ஒசரத்தில உக்கார வெப்பாங்க. அதஉட்டு புட்டு இப்படியா மனச நோக வெச்சி ஆளச் சாக வெக்க முருங்கச் செதவலோட வாறது" என்ற அவரது ஞானப் பிரசங்கத்தில் நோனிகள் சிந்திக்கத் தொடங்கினர்.

---

## றமழானை வரவேற்று..

ஆறாதவடுக்கள் என் உள்ளத்தில்
பூகம்பமாய் புரட்சிகாண
நீ வரும் நாளையிட்டு
பூ மலராய்
ஜொலிக்கின்றது
என் விடியலுக்காய்...

புதைந்திருக்கும் எனாத்மீகமாணிக்கத்தை
நீயே – சுடர்விட்டெரிய
பட்டைதீட்ட வருகின்றாய்
அவனிடமிருந்து
என் விடியலுக்காய்...

உதிர்ந்துவிட்ட எனாத்மீகம்
உன்னை உதயதாரையாகக் கண்டது
துளிர்விடுவதற்காய்
என் விடியலுக்காய்...

சாணமாய் துயில்கொள்ளும்
மாந்தர்தனை
நீயே – பெருமுரமாய்
வார்த்தெடுக்கின்றாய்
நீயென்ன – களை நீக்கும்
சலவையியந்திரமா?

பல்நின்லக் கோணத்தில்
வீற்றிருக்கும் மனிதன்தனை
சன்மார்க்கப்போதகனாய்
பிழிந்தெடுக்கின்றாய்
நீயென்ன
ஆத்மீக அரசனா?

நீ வருமுன்
உள்ளமெல்லாம்
பாவத்தின் சுரங்கம்
வந்தபின் – சுவனத்தின் அரங்கம்
என்று மாற
நீயென்ன
சுவனதேவனா?

றிஸ்வான் இப்னு முஹம்மத்,
கிண்ணியா.

## இரண்டிலும் ஒன்று மூன்றாகிறது

அந்தக் கறையான்
புத்தில்
கருநாகம் குடியிருந்ததைத் தவிர
பிறழ்வுறாத
ஆற்றோரத்தின் மணல் மேடையில்
தொடர்ச்சியான
எங்கள் சங்கமம்

அண்மையில் மிக
அண்மையில்
தெரிவுக்காய்யவனது
நீண்டிருந்தது
சுட்டுவிரலும் பாம்புவிரலும்.

வயிற்று வலிக்காரனைப்போல்
பாம்பு விரலால்
நின்னது தேர்கை
வழமைக்கு மாறாய்

சிக்கல் ரேகை
படர்ந்திருந்தது.
அவனது முகத்தில்
புனிதமான இடத்தில்
எதையோ அவன்
திருடியது போல்

பாஷா.

## யுத்தப் புயல் தீராதோ!

ஆதிக்க வெறியரின்
அராஜக கொடுமையால்
பாதித்த பாலஸ்தீனம்
படு கொலை கலாசாரம்
வேதனைத்தீயினில்
வேகுதல் முறையோ
நீதிகள் சாவதேன்
நேர்மைகள் அழிவதேன்!

இஸ்ரேலின் கெடு பிடி
இரத்தத்தில் தோய்வதோ?
இஸ்லாமியர் உடல்களில்
இவைக்கென்ன மோகமோ?
துஷ்டரின் தூண்டலால்
துள்ளிடும் கயவனே
கஷ்டத்தில் ஒரு நாள்
கலங்குவாய் நிச்சயம்!

அரேபிய மண்ணிலே
அடிமையாய் வாழ்ந்த நீ
அரேபியர் எச்சிலை
அமுதமாய் புசித்த நீ
புரவியின் கொட்டிலில்
புல்மேய்ந்த பேடியே!
வீரத்தைக் காட்ட வா
வெடி வைத்துத்தகர்க்கிறாய்!

பலஸ்தீனப் போராட்டம்
படு கொலை பேயாட்டம்
நிலையானது விதியோ இல்லை
நெஞ்சத்தால் எழுந்த சதியோ?
அலைமோதுதே உள்ளம்
அடுக்குமா இந்த அவலம்
கலங்குதே இஸ்லாமியரிதயம்
கொடிய யுத்தப் புயல் தீராதோ!

பூதூர் கலைமேகம்

## ஓய்ந்துபோன தெருக்களில் வாழ்ந்து முடிந்த மனிதர்கள்

ஓய்ந்துபோன தெருக்களில்
வாழ்ந்து முடிந்த மனிதர்கள்
வலம் வருகிறார்கள்
வாழ்க்கை கிடைக்காதாவென்று!

ஒரு தசாப்தத்தில்
ஓங்கி ஒலித்தவர்கள்
ஒதுங்கி நிற்கிறார்கள்
ஒதுங்கவொரு இடமிருக்குமாவென்று!

பட்டம் பதவி இருந்தபோது
எட்டவிருந்தவர்கள் – இன்று
கிட்டவருகிறார்கள்
சுற்றம் தேவை என்று!

பணம் புகழ் வளர்ந்தபோது
பார்க்கவே வருத்தப்பட்டவர்கள்
பக்கத்தில் வருகிறார்கள்
பக்க உதவி தேவை என்று!

வாலிபம் இருந்த போது
வக்கிரமம் புரிந்தவர்கள் – வழிகளில்
வருந்தி அலைகிறார்கள்
மன்னிப்புக் கிடைக்குமாவென்று!

யூ. எல். எம். நஜீப்
– ஓட்டமாவடி

## தயாராகின்றன போராட்டம்

சகோதரனே
உனக்கு எப்படி
இந்தத் தேசம் சொந்தமாச்சோ
அப்படித்தான் என் பெயரிலும்
இந்தத் தேசம்

நீ துப்பாக்கி பிடித்தாய்
அழிந்தது
உன் இனம் மட்டுமல்ல
எனது இனமும்தான்
யுத்த வலி
உனக்கு மட்டுமானதல்ல
எனக்குமானது.

நீ யார்?
எனது மண்ணை
எனக்கு பங்குபோட
உனக்கென்ன த
குதியுண்டு

என்னைப்
போராடச் சொல்லாதே
நீ தோல்வி பற்றி
அதிகமதிகம் கற்றுக் கொள்ள
வேண்டியிருக்கும்

இப்போதெல்லாம்
ஜிஹாதியப் பயிற்சி
என் ஈரற் குலை தொட்டு
உனது பெயரில்
நான் மாட்டுக் கோபம்

முடிந்தால் தவிர்த்துக்கொள்
என்னவர்களிடம்.
கப்பம் கோருவதை
தயாராகின்றன,
எனது ஜிஹாதிய போராட்டம்

கிண்ணியா ஏ. நஸ்புல்லாஹ்

அந்த நட்சத்திரம் என்னைப்
பார்த்து
கண் சிமிட்டியது.
என்ன விசயம் என்று கேட்டேன்
உன் சமூகம் ஏமாறப்போகிறது.
என்றது
எப்படி என்று கேட்டேன்
உங்களைத்தாஜா பண்ணி
கூஜாதூக்கவைக்க
உங்களையே பாவிக்கிறார்கள்
என்றது

## பாவம் நட்சத்திரம்

நாங்கள் நிம்மதியாய்
உண்டு உறங்குவது
உனக்குப் பிடிக்கவில்லையா
என்றேன்.
எது நிம்மதி என்று புரியாமல்
உன் சமூகம் தூங்குகிறது.
கூடிய கதியில்
நீயும் சேர்ந்து
கலங்கி நிற்கப்போகிறாய்
அப்போது தெரியும்
எது நிம்மதி என்று என்றது
கோபத்தினால் நட்சத்திரத்தின்
முக்கு சிவந்திருந்தது
பயந்து போன நான்
கண்களை மூடித்திறந்த போது
எங்கோயிருந்து வந்த
அண்டக்காக்கா ஒன்று
நட்சத்திரத்தை
கொத்தித்தின்றது


–கல்முனை முபாரக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண முஸ்லிம்கள் சொந்த மண்ணிலிருந்து விரட்டப்பட்ட வாரம்

இலங்கை நாட்டின் வடபுலத்தில் ஆண்டாண்டு காலமாக நாம் வாழ்ந்த எமது சொந்த மண் எம்மிடமிருந்து பறிக்கப்பட்டுப் பதின்மூன்று ஆண்டுகள் முடிவடைந்துவிட்டன. பரம்பரை பரம்பரையாக நாம் வாழ்ந்த எமது பாரம்பரிய மண்ணைவிட்டும் புலிகளால் புலவந்தமாக விரட்டப்பட்டு, திக்கொன்றும் திசைக்கொன்றுமாய் எமது மண்ணின் உறவுகள் அகதிகளாகச் சிதைந்து போய் இத்தனை வருடங்கள் கடந்தும் எம்மைப் பற்றிச் சிந்திக்க இதுவரை எந்த ஒரு தரப்பும் முழு மூச்சுடன் ஈடுபடவில்லையென்பது கவலைக்குரிய விடயமாகும்.

யாருக்கும் தொந்தரவுகள் செய்யாது, எவருக்குமே கெடுதல்கள் புரியாது எங்களது பாட்டில் வாழ்ந்து வந்த நாம் ஏன் விரட்டப்பட்டோம்? எதற்காகத் துரத்தப்பட்டோம்? என்பதற்கான எந்த விடைகளும் இன்னமும் எமக்குக் கிடைக்கவில்லை.



எமது பெறுமதி மிக்க சொத்துக்கள் சூறையாடப்பட்டன. எமது கலாசார விழுமியங்கள் சுபளீகரம் செய்யப்பட்டன. எமது நிலம் அபகரிக்கப்பட்டது. நாம் துப்பாக்கிகளை எதிர்த்துப் போராடுகின்ற நிலைமையில் இல்லாத காரணத்தால், அப்பாவிகளாக வெளியேறி, அகதிகளாக ஆகிப் போனோம்.

எமது வெளியேற்றத்தை வைத்து ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் ஆதாயம் தேடிக் கொண்டனவேயொழிய, எமது பிரச்சினைகளுக்குத் தக்க பரிகாரம் காணத் தவறிவிட்டன. இன்னும் பலர் எமது மண்ணிலிருந்து நாம் விரட்டப்பட்ட அந்தக் கோரமயமான நிகழ்வைச் சர்வ சாதாரணமாக எண்ணி வாளாவிருந்து கொண்டிருக்கிறார்கள். மேலும் சிலர் எமது வெளியேற்றத்தை நியாயப்படுத்தும் ஈனத்தனமான வேலைகளையும் செய்து கொண்டிருக்கிறார்கள். இவைகள் வருத்தத்திற்குரியவை.

இன்று நாட்டின் நானா புறங்களிலுமுள்ள ஒழுகும் ஓலைக் கொட்டில்களில் வட புலத்து முஸ்லிம் மாந்தர்கள் வாழாமல் வாழ்ந்து அனுபவிக்கும் வேதனைகளை வார்த்தைகளில் வடித்துவிட முடியாது. உணவு, உடை, உறையுள் எனும் அத்தியாவசியத் தேவைகள் எவையும் பூர்த்தி செய்யப்படாத நிலையில், கண்ணீரும் கம்பலையுமாக எமது முஸ்லிம் மக்கள் வாழ்கின்ற அவலமான அகதி வாழ்க்கைக்கு என்றுதான் முடிவு கிட்டப் போகிறது?


உலர் உணவு என்ற பெயரில் வழங்கப்படுகின்ற தரங்குறைந்த ரேஷன் உணவு ஓரிரு நாட்களுக்கே போதுமானதாக உள்ளது. இதுகூடப் பல குடும்பங்களுக்கு ஒழுங்கான முறையில் வழங்கப்படுவதில்லை. பல முகாம்களிலே குடிநீர் வசதிகள் இல்லை; மின்சாரம் இல்லை; தரமான பாடசாலைகள் இல்லை. இந்த நிலைமையில் இன்னும் எத்தனை காலத்திற்குத்தான் எமது மக்கள் அவலறப்படுவது? எனவே, இத்தகைய கேவலமானதும், துன்பகரமானதுமான அகதி வாழ்க்கையிலிருந்து விடுபட்டு எமது மக்கள் தங்களது சொந்தத் தாயகத்திற்குச் சகலவிதமான உரிமைகளுடனும் செல்ல வேண்டும் என்பதே இந்தப் பதின்மூன்று வருட அகதி வாழ்வு நிறைவு வாரத்தில் நாம் விடுக்கின்ற கோரிக்கையாகும்.

எமது சொந்த மண்ணில்-எமக்கும் உரித்தான தாயகத்தில் எமது முஸ்லிம் மக்கள் கல்வி, கலை, கலாசாரம், பாதுகாப்பு, வேலைவாய்ப்பு, வாழ்விடம், வர்த்தகம் போன்றவற்றில் தமக்கான உரிமைகள் அனைத்தையும் பெற்று வாழ்வதற்குரிய வழிவகைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். எமது நிலைமையை தேசிய, சர்வதேச சமூகங்கள் உள்வாங்கி, உரிய நீதி வழங்கிட வேண்டும். எந்த ஒரு தரப்புக்கும் அடிமையில்லாத, ஏனைய சமூகங்கள் அனுபவிக்கும் அனைத்து உரிமைகளையும் பெற்று வாழக்கூடிய ஒரு சமுதாயமாக நாம் வாழ்வதற்கேற்ற வகையில் சட்டங்கள் இயற்றப்பட்டு அவை அமுல்படுத்தப்பட வேண்டும். இதனைச் செய்யத் தவறின் எமது மக்கள் கிளர்ந்தெழுந்து தமது உரிமைகளைப் போராடிப் பெறுகின்ற ஓர் இக்கட்டான நிலைமை ஏற்படுவதை எந்தச் சக்தியாலும் தடுக்க முடியாமல் போய்விடுமென்பதைச் சகல தரப்பினரும் புரிந்து கொள்ள வேண்டும்.

விரட்டியடிக்கப்பட்ட வட மாகாண முஸ்லிம்களின் உரிமைகளை உரத்துக் கேட்கின்ற வாரமாக எதிர்வரும் 23.10.2003 தொடக்கம் 30.10.2003 வரை பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது. இந்த வாரத்தில் நடக்கும் கூட்டங்களிலும், ஆர்ப்பாட்டங்களிலும் பலாத்காரமாக வெளியேற்றப்பட்ட வடபுல முஸ்லிம்களும், அனுதாபிகளும் உணர்வு பூர்வமாகக் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம். குறிப்பாக 23.10.2003 வியாழன் நண்பகல் பன்னிரெண்டு மணியளவில் கொழும்பு கோட்டைப்புகையிரத நிலையத்தின் முன்னால் நடைபெறும் எழுச்சிப் பேரணியில் வடமாகாண முஸ்லிம்கள் அனைவரும் இதயபூர்வமாகப் பங்கு பற்றுமாறு வேண்டுகிறோம்.

-பலாத்காரமாக வெளியேற்றப்பட்ட வட மாகாண முஸ்லிம்கள் சார்பில் வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரம் மீள் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது.

வடக்கு மண்ணிலிருந்து முஸ்லிம்கள் இனச்சுத்திகரிப்புச் செய்யப்பட்ட போது அங்கிருந்த பல இறை இல்லங்கள் அழித்தொழிக்கப் பட்டன. மன்னார் மாவட்டத்தில் உள்ள விடத்தல் தீவு பள்ளி வாசலின் தோற்றமே இது!



# அஷ்ஷஹீத் அஷ்ரஃப் அவர்களின் கொள்கையும் ஒற்றுமையுமே முஸ்லிம்களின் பாதுகாப்புக்கான ஒரே வழி!

அன்புள்ளம் கொண்ட சகோதர சகோதரிகளே இந்த ஒக்டோபர் மாதம் எங்களுக்கு மறக்க முடியாத ஒரு மாதம். சமூகத்துக்காக உழைத்து சமூகத்துக்காகவே தனது உயிரையும் தியாகம் செய்த சமூக தொண்டன் 'அஷ்ஷஹீத் அஷ்ரஃப்" அவர்களின் பிறந்த திகதியான (23.10.2003) இந்த மாதத்தை நினைவு கூர நாம் கடமைப்பட்டுள்ளோம்.

முஸ்லிம் சமூகத்துக்கு ஒரு உறுதியான அரசியல் சக்தி கிடைக்காமல் நாம் தத்தளித்துக் கொண்டிருந்த காலத்தை மறக்க முடியாது. எமது சமூகத்துக்கு அநீதிகள், ஆக்கிரமிப்புக்கள் நடந்து கொண்டிருந்த சமயம் பெரும்பான்மை கட்சிகளில் இருந்த முஸ்லிம் அரசியல்வாதிகளால் சமூகத்தின் பாதுகாப்புக்கு உருப்படியான எந்த தீர்வையும் எடுக்க முடியவில்லை. அந்த சந்தர்ப்பத்தில் சமூக விடிவுக்கு மாற்றுவழி தேட முயற்சித்த வேளையில் 'அஷ்ஷஹீத் அஷ்ரப்' அவர்கள் ஜனநாயக வழியில் முஸ்லிம்களின் உரிமைகளை பெறும் சக்தியாக முஸ்லிம் காங்கிரஸை ஆரம்பித்தார்.

இனம், மதம், பிரதேசம் பார்க்காமல் சேவை செய்த முஸ்லிம் அரசியல்வாதிகளில் "அஷ்ஷஹீத் அஷ்ரஃப்" அவர்கள் முதன்மை வகிக்கின்றார். இன்று இலங்கையிலும் உலக நாடுகளிலும் முஸ்லிம் சமூகத்துக்கு அநீதிகள், ஆக்கிரமிப்புக்கள், சதிகள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. எமது சமூகத்தின் ஒற்றுமையின்மையை சாதகமாக பயன்படுத்தி சதிகாரர்கள் எமது முஸ்லிம் சமூகத்தை குழப்புகின்றார்கள். நாம் நடந்து வந்த பாதையை சற்று திரும்பிப் பார்க்க வேண்டும். எத்தனையோ சவால்களுக்கும், பல ஏளனங்களுக்கும் நாம் முகம் கொடுத்தோம். ஒரு காலத்தில் எம்மை இனவாதிகள் இனவாத கண்ணாடி கொண்டு பார்த்தவர்கள் எல்லோரும் பின்பு எமது காலடியில் வந்து வீழ்ந்தார்கள். இவை அனைத்தும் எமது தலைவர் அஷ்ஷஹீத் அஷ்ரஃப் அவர்களின் கொள்கையை நாம் சரியாக பின் பற்றியதால்தான் நடந்தது.

நாங்கள் இன்று பிரிக்கப்பட்டுள்ளோம். முஸ்லிம் காங்கிரஸ் மூலம் ஒற்றுமையாகவும், அரசியலில் பெரும் சக்தியை கொண்டிருந்தோம். இப்பொழுது பேரம் பேசும் சக்தி கை நழுவிப் போனதற்கு காரணம் பெரும்பான்மை அரசியல்வாதிகளின் சதியே. அந்த பெரும்பான்மை கட்சிகளில் இருந்த ஒரு சில சோரம் போன முஸ்லிம் அரசியல்வாதிகள்தான்.

ஆனால் எங்களுக்கு இன்னும் காலம் இருக்கிறது நடந்து முடிந்த கசப்பான சம்பவங்களை மறந்து, சில விட்டுக் கொடுப்புக்கள், தியாகங்கள் செய்வதன் மூலம் நாம் மீண்டும் பலம் பெறலாம். தற்பொழுது கிழக்கில் முஸ்லிம் சகோதரர்கள் கொல்லப்படுகின்றனர். சொத்துக்கள் அழிக்கப்படுகின்றது. இந்த நேரத்தில் நாங்கள் பிரிந்திருப்பது சதிகாரர்களுக்கே வெற்றியாக அமையும். மேலும் எமது சமூகம் நசுக்கப்படும். அப்படி நடந்து கொண்டிருக்கும் போது ஜனநாயக கொள்கையை நம்பி இருந்த முஸ்லிம் இளைஞர்கள் சமூகத்தின் விடிவுக்கும், பாதுகாப்புக்கும் சமமாக ஆயுதம் தூக்குவார்கள். அந்தக் காலத்தில் முஸ்லிம் காங்கிரஸ் கூறினாலும் உலமா சபை கூறினாலும் பிரச்சினை நீங்காது. ஆனால் ஒன்று இளைஞர்கள் எல்லோரும் முன் வைத்த காலை பின் வாங்க மாட்டார்கள்.




"தியாகத்தால் வளர்தெடுத்த தனித்துவ தீபம் தீயோரால் ஒளி குன்றி அணைத்திடவும் விடுவதா"? ஆகையால் நாங்கள் அனைவரும் ஒற்றுமைப்படுவோம். சகல அரசியல் கட்சிகளில் இருக்கும் முஸ்லிம்களுக்கும் அழைப்பு விடுத்து ஓர் அணியில் சேருவோம். முஸ்லிம் சமூகத்தின் எதிர்காலத்து பொருளாதாரம், கல்வி, மார்க்க விடயங்கள், முஸ்லிம் பெண்களின் மானம், எதிர்கால சந்ததிகளின் வாழ்க்கை" இவை அனைத்தையும் சிந்தித்து காங்கிரஸில் இருப்பவர்களும், காங்கிரஸில் இருந்து வெளியேறியவர்களும் ஒற்றுமையாகுவோம். வெற்றிபெறுவோம். இதுவே நாம் மறைந்த தலைவருக்குச் செய்யும் கைமாறாகும்.

**- மாத்தளை ரம்சான் -**

# வெளிச்ச வாசல்

## இரவின் பயங்கரம்

ஆங்கிலத்தில்: எட்னா யாகி தமிழில் : அபூ அஸ்ஹான்



எனது பெயர் ஹுதா. எனக்கு வயது எட்டு. இஸ்ரேலிய புல்டோசர்கள் உடைத்துச் சிதைத்த எங்கள் குடும்பத்தின் வீட்டின் கல்லுக் குவியலுக்கு அருகே நின்று கொண்டிருக்கிறேன். எங்கள் வீடு காஸாவின் தென்பகுதி நகரான தெய்ர் அல் பலாஹ்வில் அமைந்திருந்தது.

ஒரு காலத்தில் எங்களது வீடு 'கபர் தாரொம் ' என்ற சட்டவிரோத இஸ்ரேலியக் குடியிருப்பை எதிர் நோக்கியதாக அமைந்திருந்தது. அந்த இடம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக அங்கு வாழ்ந்து வந்த எமது முன்னோருக்குச் சொந்தமான பூமியாகும்.

நான் அன்று அதிகாலை இரண்டு மணிக்குக் கண்விழித்தேன். இயந்திரத் துப்பாக்கிகள் எனதும் எனது குடும்பத்தாரதும் முகங்களைக் குறிவைத்தபடியிருந்தன. வீட்டை விட்டு உடனடியாக வெளியேறுமாறு இஸ்ரேலியத் துருப்பினர் அறபு மொழியில் மிகக் கடூரமான குரலில் கட்டளையிட்டனர். நாங்கள் துப்பாக்கி முனையில் வெளியே தள்ளப்பட்டோம். எங்கள் கண்முன்னாலேயே துண்டு துண்டாக உடைத்து நொறுக்கப் பட்ட எங்களது வீட்டிலிருந்து எந்தப் பொருளையும் எங்களால் எடுத்துக் கொள்ள முடியாமல் போய் விட்டது.

பயத்திலும் குளிரிலும் நடுங்கியபடி எனது சகோதரிக்கு அருகில் நான் நின்றிருந்தேன். பதினொரு வயதான எனது சகோதரியின் பெயர் பத்ர். எமது வாழ்வைச் சிதைக்கும் அவர்களது பேரழிவுக் காரியத்துக்கு புல்டோசர்களினதும் யுத்த டாங்கிகளதும் வெளிச்சம் அவர்களுக்குப் பாதுகாப்பளித்தது. எனது இதயத்தை என்னிலிருந்து திருகி வெளியே எடுத்து எறிந்தது போன்று நான் உணர்ந்தேன். எனது சகோதரியை நான் நிமிர்ந்து பார்த்தேன். ஆடாமல் அசையாமல் நின்றிருந்த அவளது கண்களிலிருந்து கண்ணீர்த் துளிகள் உருண்டு விழுந்தன. அவளுடைய முகம் பயத்தினால் வெளிறிப்போய் இருந்தது. அந்தக் குளிர் இரவின் உறைய வைக்கும் காற்றில் எனது கண்ணீரின் உப்பு என் கன்னங்களில் காய்ந்து போயிருந்தது. ஆனால் எனது நடுக்கத்தை நிறுத்த முடியவில்லை. எங்களது வாழ்வை அழித்தொழிக்கும் அவர்களது செயலுக்கு ஏதாவது இடைஞ்சல் செய்து விடுவோம் என்று நினைத்து இஸ்ரேலியத் துருப்பினர் தங்களது துப்பாக்கிகளை எங்களை நோக்கி நீட்டிப் பிடித்த வண்ணமேயிருந்தனர்.

காலை உதயமாகிற்று. இயற்கையின் சீற்றங்களிலிருந்தும் ஆபத்துக்களிலிருந்தும் எங்களைப் பாதுகாப்பதற்காக எங்களது பாட்டனார் தனது சொந்தக் கரங்களால் கட்டிய அந்த வீட்டின் இடிபாடுகளுக்கருகே நானும் எனது குடும்பத்தினரும் நின்று கொண்டிருந்தோம். நான் அதிலிருந்து ஒரு நீல நிற சலவைக் கற்துண்டைப் பொறுக்கி எடுத்தேன். அந்தச் சலவைக் கல் நேற்று வரை எங்கள் சமையலறைத் தரையில் இருந்தது.

அறுபத்து நான்கு வயதான என் பாட்டனாரின் பெயர் சுலைமான். அவர் முறுக்கப்பட்டவாறு கிடந்த கம்பிகளுக்கருகே நிலை குலைந்து போய் நின்றிருந்தார். அந்தக் கம்பிகள்தான் எங்களது வீட்டைத் தாங்கி நின்ற தூண்களுக்கு நேற்று வரை வலுவாக இருந்தன. இது வரை காலமும் எங்களுக்குப் பழங்களைத் தந்த பழ மரங்களும் கோடை வெய்யிலுக்கு நிழல் தந்த ஒலிவ் மரமும் நின்றிருந்த இடங்களைப் பார்த்தேன். அசிங்கமான அடிமரக் கட்டைகளும் பிடுங்கியெறியப்பட்ட மரக்கிளைகளுமே அந்த இடத்தில் கிடந்தன.

எனது பாட்டனார் தனது கண்ணீரைத் துடைக்க முயன்றார். புகைப்படப் பிடிப்பாளர்கள் இடிபாடுகளைப் படம் பிடிக்க வந்த போது அவர் அழுதார். அப்போது சொன்னார், 'உண்மையான பயங்கரவாதிகள் யார் என்று திரு புஷ் இங்கு வந்து பார்க்க வேண்டும்.'

குளிர் காலத்தின் மத்தியில் பிடுங்கியெறியப்பட்ட எங்களது வீட்டையும் எங்களைப் போன்றவர்களது விதியையும் திரு.புஷ் சற்று வந்து பார்க்க வேண்டும் என்று நானும் கூட எண்ணினேன். ஆனால் நான் நினைக்கிறேன்... இவ்வேளை திரு புஷ் ஆப்கானிஸ்தானில் கொலை நிகழ்த்துவதிலும் அடுத்து எந்த அறபு/ முஸ்லிம் தேசத்தை நாசப்படுத்தலாம் என்று தேடியலைவதிலும் மிகச் சுறு சுறுப்பாக இருப்பார்.

சில நாட்களுக்கு முன் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து சிறார்கள் கண்ணி வெடியில் சிக்கிச் சின்னாபின்னமாய்ச் சிதறிப் போனார்கள். அவர்கள் படிக்கும் பாடசாலை அருகே அந்தக் கண்ணி வெடி புதைக்கப் பட்டிருந்தது. எங்களது பூமியையும் நிலத்தையும் ஆக்கிரமித்திருக்கும் எங்களைக் கொடுமைப் படுத்துவோரால் அக்கண்ணி வெடி அங்கு புதைத்து வைக்கப் பட்டிருந்தது.

நேற்று இஸ்ரேலியர்கள் மறைந்திருந்து கபா ஒபைத் என்ற பதின்மூன்று வயதுச் சிறுவனின் நெஞ்சில் சுட்டுக் கொன்றார்கள். ஏனென்றால் அதற்கு முதல் தினம் ஐந்து சிறுவர்கள் கொலை செய்யப்பட்டமைக்கு எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்திய போது அவன் இஸ்ரேலிய வீரர்கள் மீது கல்லெறிந்தான். ஒவ்வொரு நாளும் பலஸ்தீனச் சிறுவர்கள் மிகச் சாதாரணமாகக் கொலை செய்யப்படுகிறார்கள் அல்லது காயப்படுத்தப் படுகிறார்கள். ஏனெனில் பலஸ்தீனியர் வாழும் நிலத்தை அவர்களிடமிருந்து பறித்துக் கொள்ளும் தேவை இஸ்ரேலியருக்கு உண்டு.

எனது பெற்றோரும் எனது பாட்டியும் இப்போது எமது வீட்டின் எரிந்த சிதைவுகளூடே நகர்ந்து கம்பளி ஆடைகளையும் மற்றும் அவசியமான சிலதையும் தேடிக் கொண்டிருக்கிறார்கள். எனது சகோதரி பத்ர் தனது புத்தகங்களைத் தேடுவதை நிறுத்தி விட்டாள். வீட்டின் அறைக்குள் இருந்த அவளது பாடசாலை உடையும் புத்தகங்களும் எரிந்த காரணத்தால் தான் பாடசாலை செல்லப் போவதில்லை என்று சொல்லி விட்டாள். நானும் கூட பாடசாலைக்குச் செல்லப் போவதில்லை. அடுத்த இரவை நானும் எனது குடும்பமும் எங்கு கழிப்பது என்று எனக்கு யோசனையாக இருக்கிறது.

அமைதி வேண்டும் என்று இஸ்ரேலியப் பிரதமர் ஷெரோன் சொல்லுகிறார். பரஸ்பர ஒத்துழைப்பு அடிப்படையில் பலஸ்தீனியர்கள் முதலில் வன்முறையை நிறுத்த வேண்டும் என்றும் அவர் பேசுகிறார். எனக்கு இது புரியவில்லை... எத்தனையோ பேர் இஸ்ரேலிய ஷெல் தாக்குதலாலும் இயந்திரத் துப்பாக்கிகளாலும் யுத்த தாங்கிகளாலும் ஹெலிகொப்டர்களாலும் ஆயுதம் தாங்கிய வாகனங்களாலும் புல்டோசர்களாலும் தாக்கப்பட்டிருக்கிறார்கள்.... எங்களையே நாங்கள் பாதுகாத்துக் கொள்ள முடியாத நிலையில் இன்னும் நாங்களே வன்முறையை நிறுத்த வேண்டும் என்றே கோரப்படுகிறோம்.

உண்மையான பயங்கரவாதம் இஸ்ரேலியர்களால் தினமும் எங்கள் மீது நடத்தப்படுகிறது. நாங்கள் தங்க ஒரு இடமில்லாமல், வாழ்வின் அர்த்தம் இல்லாமல், நாளைக்கான நம்பிக்கையும் இல்லாமல் கைவிடப் பட்டுள்ளோம். இவ்வாறு நடத்தப்படுவதற்கு நாங்கள் செய்ததுதான் என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




முஸ்லிம்குரல் பத்திரிகை நமது மக்களின் இழப்புகளை ஆவணப்படுத்தி, இழப்புகளுக்கு நீதி வேண்டிப் போராடும் பணியை, முஸ்லிம் தேச ஆவணக் காப்பகத் தினூடாக முன்னெடுத்து வருவதை அறிந்திருப்பீர்கள். எமது இந்த முயற்சிக்கு நமது மக்கள் மத்தியிலிருந்து பெருமளவு ஆதரவும், ஆவணங்களும் வந்து சேர்ந்து கொண்டிருக்கின்றன.

இத்தகவல்களை நமது மக்களுக்கு பகிரங்கப்படுத் தும் நோக்கில் மக்கள் பத்திரிகை என்ற வகையில் இத் தொடர் எழுதப்படுகிறது. எமக்கு கிடைத்த விபரங்களின் எண்வரிசைப்படி பட்டியல்படுத்தப்பட்டுள்ளது.

**12**
முகைதீன் பாவா இப்றாஹீம், நெய்தல் நகர், மூதூர் 01.
பிறந்த திகதி : 18.01.1958
சம்பவம் இடம்பெற்ற திகதியும் இடமும் : மல்லிகைத் தீவு சந்தி, மூதூர். 16.03.1986 மரணம் இனந்தெரியாதவர்களால் நிகழ்த்தப்பட்டுள்ளது.
மரண அத்தாட்சிப் பத்திர இலக்கம் : 382.

**13**
அகமது முகைதீன் முகம்மது முஸ்தபா, 14/63, மோதினார் ஒழுங்கை, ஸாவியா வீதி, காத்தான்குடி 01.
பிறந்த திகதி : 09.06.1931
சம்பவம் இடம்பெற்ற திகதியும் இடமும் : மீராஜும்ஆ பள்ளிவாயல், காத்தான்குடி 01. 03.08.1990 மரணம் புலிகளால் நிகழ்த்தப்பட்டுள்ளது.
மரண அத்தாட்சிப் பத்திர இலக்கம் : 5683.

**14**
அப்துல் கரீம் ஹாஜியார் முகம்மது அலாவுதீன், 18, ஜும்மாஆப் பள்ளி வீதி, காங்கேயனோடை 12, ஆரையம்பதி.
பிறந்த திகதி : 31.12.1948
சம்பவம் இடம்பெற்ற திகதியும் இடமும் : ஆரைப்பற்றை காபலாஎல்லையில், 25.09.1990. மரணம் விடுதலைப் புலிகளால் நிகழ்த்தப்பட்டுள்ளது.
மரண அத்தாட்சிப் பத்திர இலக்கம் : 1102

**15**
முஹம்மத் புஹாரி பதூரியா உம்மா, 266/1, கல்லனை, கதுறுவெல, பொலன்நறுவை.
பிறந்த திகதி : 09.12.1983
சம்பவம் இடம்பெற்ற திகதியும் இடமும் : 92/1, பள்ளியகொடல்ல, மெதிரிகிரிய, 15.10.1992 மரணம் புலிகளால் நிகழ்த்தப்பட்டுள்ளது.
மரண அத்தாட்சிப் பத்திர இலக்கம் : 2830

**16**
வாப்புராசா ஜியாத், கேணிக்காடு, மூதூர் 01.
பிறந்த திகதி : 20.05.1966
சம்பவம் இடம்பெற்ற திகதியும் இடமும் : மூதூர் (தக்வாநகர்) 10.11.1990 மரணம் விடுதலைப் புலிகளால் நிகழ்த்தப்பட்டுள்ளது.
மரண அத்தாட்சிப் பத்திர இலக்கம் : 1407

**17**

தாவுது ஜகார்த்தீன், கேணிக்காடு, மூதூர் 01.
பிறந்த திகதி : 01.10.1976
சம்பவம் இடம்பெற்ற திகதியும் இடமும் : சிராஜியா நகர், (வீட்டில்) 08.02.2000 மரணம் பயங்கரவாதிகளால் நிகழ்த்தப்பட்டுள்ளது.
மரண அத்தாட்சிப் பத்திர இலக்கம் : 1526.

**18**
வரிசை முஹம்மது முஹம்மதலியார், 14, மீரா பள்ளி வீதி, காத்தான்குடி 01.
பிறந்த திகதி : 14.06.1930
சம்பவம் இடம்பெற்ற திகதியும் இடமும் : கால் ஊனமுற்றது. மீரா பள்ளிவாசலில் நடைபெற்ற விடுதலைப் புலிகளின் கோரத் தாக்குதலின் போது.
இவர் அண்மையில் காலமானார்.

**19**
ஆதம்போடியார் முகம்மது சராவுதீன், 14, மீரா பள்ளி வீதி, காத்தான்குடி 01.
சம்பவம் இடம்பெற்ற திகதியும் இடமும் : மீராஜும்ஆ பள்ளிவாயல், காத்தான்குடி 01. 03.08.1990 மரணம் புலிகளால் நிகழ்த்தப்பட்டுள்ளது.
மரண அத்தாட்சிப் பத்திர இலக்கம் : 5631.

**20**
முஹம்மது காசிம் முகமட் பரீட், 14, மீரா பள்ளி வீதி, காத்தான்குடி 01.
பிறந்த திகதி : 01.06.1955
சம்பவம் இடம்பெற்ற திகதியும் இடமும் : மீராஜும்ஆ பள்ளிவாயல், காத்தான்குடி 01. 03.08.1990 மரணம் புலிகளால் நிகழ்த்தப்பட்டுள்ளது.
மரண அத்தாட்சிப் பத்திர இலக்கம் : 5661.

# மறக்கப்பட்டு வரும் வடக்கு முஸ்லிம் அகதிகளும் எதிர்காலமும்!

யுத்த நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு பூரணமாக ஒரு வருடமும் கடந்து விட்டது. அரசு-புலிகளுக்கிடையிலான 06 கட்ட சுற்றுப்பேச்சுவார்த்தைகளும் இடம்பெற்று முடிந்து விட்டன. இடைக்கால நிர்வாகத்திற்கான அல்லது சமஷ்டி அமைப்புக்கான சட்ட நகலை அரசு புலிகளிடம் ஒப்படைத்த நிலையில், புலிகள் இதுவரையும் மிகக்கவனமாக மீள்பரிசீலனை செய்து வருகின்றனர். நாட்டில் பூரண அமைதியும், இடைக்கிடையிலான சலனங்களும் ஏற்பட்ட வண்ணமுள்ளன. குறிப்பாக யுத்த நிறுத்தம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இன்றுவரைக்கும் மிகமோசமாக பாதிக்கப்பட்டவர்கள் முஸ்லிம்கள் என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும்

இத் தொடரில் வடமாகாண முஸ்லிம் அகதிகள் கிள்ளுக்கீரையாக்கப்பட்டிருப்பது உண்மையாகும். தமது துயர்தோய்ந்த அகதிவாழ்வு 13 வருடங்களையும் கடந்துவிட்ட நிலையில் உருப்படியான எந்தவித முயற்சிகளும், கவனிப்புக்களும் இன்றி நடுத்தெருவில் விடப்பட்டிருக்கின்றார்கள். இம்மக்களுக்கு சமாதானம் மலர்கையில் ஏற்பட்ட உவகைப்பெருமூச்சு- சொந்தமண் திரும்புவோம் என்ற நம்பிக்கை இப்போது படிப்படியாக இழக்கவாரம்பித்திருக்கின்றது.

பல ஆயிரம் கோடி ரூபாய்கள் பெறுமதியான சொத்துக்களையும், மனித உயிர்களையும் இழந்தநிலையில் . ஆரோக்கியம், கல்வி, கலாசாரம், பொருளாதாரம், பாரம்பரியங்கள் சிதைந்த நிலையிலும் தொடர்ந்தும் நலன்புரிச்சங்கங்களிலும், முகாம்களிலும் ஜீவமரணப்போராட்டத்தை தொடர்வதா? என்ற அச்சம் அனைத்து அகதி முஸ்லிம்களையும் பீடித்துள்ளது. சுட்டெரிக்கும் வெயிலிலும், உப்புத்தரையிலும் எந்தவிதத்தொழிலுமின்றி பச்சரிசியை நம்பி வாழ்வது தலைவிதியோ? என்றும் எண்ணவைத்துள்ளது.

**ஏ.கே.எம். ஸியாத், பள்ளிவாசல் துறை.**

மிகக்கவனமாகப் புலிகளால் வடக்கு முஸ்லிம் அகதிகள் புறக்கணிக்கப்பட்டு வருவது அவர்களது எதிர்காலம் பற்றிய கேள்விக்குறியை எழுப்புகின்றது. " நாங்கள் வரச்சொல்லி இருக்கிறோம்தானே. பிறகு என்ன உறுதிப்பாடு" என்ற சொற்கோர்வைகளுக்குள் வடக்கு முஸ்லிம்களின் கனவுகள் புதைக்கப்படுவதாகத் தெரிகின்றது. ஒரு வருடத்தையும் தாண்டிவிட்ட நிலையில், எமது இருப்பின் உத்தரவாதம் பற்றி இன்னமும் எவ்வித பதிலையும் தராமல் இருப்பது, மீள்குடியேற்றம் பற்றி பொதுமக்களை சிந்திக்க வைக்கின்றது.

வெளிப்படையான பாதுகாப்பு அச்சம் அனைவராலும் உணரப்பட்டு வருகின்றது. எமது பாதுகாப்புக்கு உத்தரவாதம் தருவதாக இல்லை. அண்மையில் வேப்பன்குளப்பிரச்சினையும், முஸ்லிம்களது புதிதாக அறுவடைசெய்யப்பட்ட நெற்கள் இருந்த இரண்டு கூடாரங்கள் எரிக்கப்பட்டமையும், திட்டமிட்டமுறையில் சிறிக்கிலம்பிட்டி கத்தோலிக்க தேவாலயம் அமைக்கப்பட்டு, அவற்றில் ஏற்பட்ட வாய்த்தகராறு மோதலாக வெடித்து பல முஸ்லிம் இளைஞர்கள் தாக்கப்பட்டமை யாவும் எம்மை மனம் வருந்தச் செய்கின்ற விடயங்களாகும். நூற்றுக்கும் குறைவான மக்கள் குடியேறிய நிலையில் இத்தகய சம்பவங்கள் இடம்பெறும் பட்சத்தில் எமது உயிருக்கு என்ன உத்தரவாதம் இருக்கின்றது.

இது தொடர்பில் அரசாங்கமும், கண்காணிப்புக்குழுக்களும் மௌனம் சாதித்து வருகின்றன. கண்காணிப்புக்குழு வடக்கு முஸ்லிம் மீள்குடியேற்றம் தொடர்பாக பேசத்தயக்கம் காட்டி வருகின்றது. தொடராக இடம்பெற்ற அரசின் நடவடிக்கைகளும் இது தொடர்பில் எவ்விதக் கரிசனையும் காட்டுவதாகத் தெரியவில்லை. நடந்து முடிந்த 06 சுற்றுப் பேச்சுவார்த்தைகளிலும் எம்மைப் பற்றி பேசமறுத்துவிட்டனர். எனவே இத்தகய நிலைகளில் வடக்கு முஸ்லிம் அகதிகள் மறக்கப்பட்டு வருகிறார்கள் என்பது உண்மையாகும்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் இடம்பெற்றதைத் தொடர்ந்து வடக்கில் 04 இலட்சம் தமிழர்கள் மீள் குடியேறிவிட்ட நிலையில் நூற்றுக்கும் குறைவான முஸ்லிம் குடும்பங்களே குடியேறியுள்ளனர். தமது உயிர், சொத்துப்பற்றிய அச்சமும், திகைப்பும் மிகப் பரவலாக உணரப்படுவது- மீள் குடியேற்றத்திற்கு தடைக் காரணியாக மட்டுமன்றி எந்தவித அடிப்படைவசதிகளும் இல்லை என்பதும் உண்மையாகும்.

முஸ்லிம் பிரதேசங்களில் புதைக்கப்பட்டிருக்கும் கன்னிவெடிகள் இன்னமும் அகற்றப்படவில்லை. அண்மையில் மன்னார்- சிலாவத்துறையில் ஒருவர் இதற்குச் சிக்கி தனது காலை இழந்ததோடு மாத்திரமின்றி காயங்களுக்கும் உட்பட்டார். எனவே யுத்தம் இடம்பெற்ற பகுதிகளில் கன்னிவெடிகள் புதைக்கப்பட்டிருப்பது வெளிப்படை. அதேபோன்று, இராணுவ நடவடிக்கைகளும், முல்லைத்தீவு யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளில் புலிகளின் கடுமையான கட்டுப்பாடும் எமது மீள் குடியேற்றத்தைப் பாதிப்பதாகவே உள்ளன. ஏன் முஸ்லிம்களின் காணிகளும், வீடுகளும் திரும்பக்கையளிக்கப்படாத நிலையில், தமிழ்மக்கள் உரித்துக் கொண்டாட முனைகின்றமையும், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளில் பெருமளவு வீடுகள் தரைமட்டமாக அழிக்கப்பட்டுள்ளமையும், காடுகள் ஓங்கி வளர்ந்து வனாந்தரமாக காட்சிதருகின்றமையும் எமது மண்ணைத் தரிசிப்பதற்கே துயரத்தையள்ளித்தருகின்றது.



சாதாரண வாழ்வொழுங்குகள் தொடரத்தேவையான பாடசாலை, மருத்துவமனை, வணக்கஸ்தலம்கள், பாதைகள் போன்ற எவ்வித அடிப்படை வசதிகளுமின்றி மீள்குடியேறுவதனை துரிதமாக்குவது வெறும் பகற்கனவே. புனரமைப்பு, புனர்நிர்மாணப்பணிகள் முற்றாகத் தொடரப்படாத நிலையில் அடிப்படைவசதிகளற்று எவ்வாறு குடியேறுவது என்ற திகைப்பு அகதி முஸ்லிம்களிடம் பரவலாக உணரப்பட்டு வருகின்றது.

இவ்வாறு பாதுகாப்பு, தொழில், அபிவிருத்தி, கலாசாரப்பண்பாட்டு, பொருளாதார நடவடிக்கைகள், இயல்புவாழ்க்கை புறக்கணிக்கப்பட்ட நிலையில் வடக்கு முஸ்லிம் அகதிகள் மீள்குடியேற்றம் வெறும் பூஜ்ஜியமாகவே இருக்கும்.

இது தொடர்பில் முஸ்லிம் புத்திஜீவிகளும், இயக்கங்கள், நிறுவனங்களும் எவ்விதப் பிரக்ஞையற்றவர்களாகவே உள்ளனர். இயக்கங்கள் - முஸ்லிம் சமூக அசைவியக்கத்தின் எழுச்சிப்போராட்டம் பற்றி உரக்கப்பேசி நாகிழிந்துள்ளனரே தவிர எந்தவித உருப்படியான வேலைத்திட்டங்களையும் எமது வாழ்க்கை மேம்பாட்டிற்காகச் செய்யவில்லை. போலி அரசியலுடன் கலந்துவிட்ட இயக்கங்களாகவே கரைந்து போய்க்கொண்டிருக்கின்றார்கள்.

வளப்பற்றாக்குறை, வறுமை, வேலையின்மை, இன முரண்பாடு என்பவற்றின் துயரங்களுக்குள்ளால் புத்தளம், குருநாகல், அனுராதபுரம் போன்ற பகுதிகளில் வாழ்ந்து வரும் முஸ்லிம்கள் ஏன் இன்னமும் மீள் குடியேறத் தயங்குகிறார்கள் என்ற புரிதலும், இதற்கான தூண்டல் முயற்சிகளும் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. முஸ்லிம்களின் விடுதலை பெற வந்த முஸ்லிம் காங்கிரஸும் வடக்கு முஸ்லிம்கள் விடயத்தில் புறக்கணிப்புடன், நடந்து கொள்வதாகவே தெரிகின்றது. வெற்றுப்போலி நாடகமாடி பல வாக்குறுதிகளை கொடுத்துவிட்டு எங்களைப் புறந்தள்ளிவிடுபவர்களாகவே, பேசமறுக்கின்றவர்ளாகவே இந்த நொடிப்பொழுதுவரை இருந்து வருகின்றார்கள். இது தொடர்பில் எந்த ஒரு உணர்வுபூர்வமான நடவடிக்கைகளையும் காங்கிரஸ் இன்னமும் செய்வில்லை.

வடக்கு முஸ்லிம்கள் தமது சொந்த மண்ணில் வாழ்கின்றநிலையில் தான் அவர்களது பிரச்சினைகள் பேசப்படும் என்ற யதார்த்தங்களுக்கப்பால், ஆரம்பகட்டமாக அடிப்படைவசதிகளே பெற்றுக்கொடுக்கப்படாத நிலையிலேயே தற்போது அங்கு வசிக்கும் ஒருசில குடும்பங்களும் உள்ளனர் என்பது மறுதலிக்கமுடியாத உண்மையாகும். இது விடயமாக N.M.R.D. தன்னளவில் சுருங்கிய அமைப்பாகவே காணப்படுகின்றது. முசலி முஸ்லிம் பட்டதாரிகள் ஒன்றியம், வடக்கு முஸ்லிம்கள் மாணவர்கள் ஒன்றியம் (N.M.S.O) எடுத்துவரும் சில நடவடிக்கைகளைத் தவிர, மீள்குடியேற்றத்திற்கு ஊக்கமளிக்கும் வேறு எந்தவித செயற்பாடுகளும் இடம்பெறுவதாகத் தெரியவில்லை.

எனவே வடக்கு முஸ்லிம் அகதிகள் இனப்பிரச்சினைத்தீர்வில் மறக்கப்பட்டவர்களாக மாறிவிடுகின்றார்கள். நடைமுறையில் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பற்றி ஊடகங்கள் கதவடைப்புச் செய்கின்றன. தமது தாயகம் செல்வதற்கான உரிமை அவர்களுக்கு இருக்கின்றது. இழந்த தனது தேசத்தின் சுயம், அடையாளம், இருப்பு என்பவற்றை உறுதிப்படுத்திக்கொள்ள, சமாதானம் கனிந்துள்ள இவ்வேளையில் பொருள்ரீதியாகவும், மானசீக ரீதியாகவும் அனைத்து முஸ்லிம் மக்களும், இயக்கங்களும் உதவி செய்தல் வேண்டும்.

கட்டாயமாக இனப்பிரச்சினைத் தீர்வில் வெளியேற்றப்பட்ட முஸ்லிம் அகதிகள் தொடர்பாகவும் பேசப்படுதல் வேண்டும். அவர்கள் தமது சொந்த மண்ணில் குடியமர்த்தப்படல் வேண்டும். இதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முஸ்லிம் அமைப்புக்கள், நிறுவனங்கள் புத்தி ஜீவிகள் செல்வந்தர்கள் அனைவர்களும் கூட்டாகச் செய்தல் வேண்டும். முஸ்லிம் காங்கிரஸ் மௌனம் சாதிக்காமல் பாதிக்கப்பட்ட வடக்கு முஸ்லிம்கள் சார்பாக குரல் கொடுக்க முன்வரவேண்டும். சர்வதேச மட்டத்தில் வடமாகாண முஸ்லிம் அகதிகள் பிரச்சினை பேசப்படல் வேண்டும். புலிகளுக்கும், அரசாங்கத்திற்கும் எமது பிரச்சினை தொடர்பாக கடும் அழுத்தம் கொடுக்கப்படல் வேண்டும். இடிபாடுகளுக்குமுன்னால் காடுகளாகவும், வனாந்தரங்களாகவும் மாறியுள்ள வடக்கை சீரான வாழ்வொழுங்குக்குத் தேவையான வகையில் புனரமைப்பு, புனர்நிர்மாணப் பணிகள் செய்து கொடுக்கப்படல் வேண்டும்.

நாளைய இனப்பிரச்சினைத் தீர்வில் வடக்கு முஸ்லிம் அகதிகள் கவனிக்கப்படாது புறக்கணிக்கப்படுவார்களாக இருந்தால், உரிமைகள் மறுக்கப்படுவார்களாக இருந்தால் நாளைய இனத்துவ வரலாற்றெழுகை இரத்தக்கறைகள் படிந்ததாகவே அமைய முடியும்.

எனவே இக்கணத்திலிருந்து வடமாகாண முஸ்லிம் அகதிகள் தமது சொந்த தாயகத்தில் மீள்குடியேறுவதற்கான அத்தியவசிய நடவடிக்கைகளையாவது மேற்கொள்ளுதல் எமது ஒவ்வொரு முஸ்லிம் மீதும் கடமையாகும்.

**ஒருவர் ஒரு கருத்தை சொல்லிவிட்டார் என்பதற்காக உங்கள் கருத்தை நீங்கள் சொல்லாமல் இருக்கலாமா?**

நாம் எழுதுவதற்கும், நமது மக்களுக்குள் கருத்துக்களை பரிமாறிக் கொள்வதற்கும் விவாதங்களைத் தொடங்கவும், தொடரவும் தயாராகவுள்ளோம்! உங்கள் கருத்துக்களை சுருக்கமாக எமக்கு எழுதி அனுப்புங்கள்!

**முஸ்லிம் குரலில் விளம்பரம் செய்து நமது பத்திரிகை வளர்ச்சிக்கு உதவுங்கள்**
தொடர்புக்கு
விளம்பர முகாமையாளர்
முஸ்லிம் குரல்
181/1 Maligakanda Road (White Park)
Colombo 10 .
Phone : 0777 389127

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சாரம்

## புலமைத்துவப் போராளியின் மரணம்!

எழுதுவது... லைலா அஷ்ரவி

புலமைத்துவ பேராதிக்கத்திற்கெதிராக குரல் கொடுத்து வந்த ஓர் புலமைத்துவப் போராளியான எட்வர்ட் செய்ட் செப்டம்பர் 24ம் திகதி தனது 67 வயதில் காலமானார். அமெரிக்கக் குடியுரிமை பெற்ற பலஸ்தீன அரபுக் கிறிஸ்தவரான எட்வர்ட் செய்ட் நியுயோர்க் கொலம்பிய பல்கலைக்கழகத்தில் ஆங்கில மற்றும் ஒப்புவமை இலக்கியப் பேராசிரியராகப் பணியாற்றி வந்தவர். புலமைத்துவ உலகில் இவரது Orientalism மற்றும் Culture and Imperialism என்ற நூல்கள் அதிர்வுகளை ஏற்படுத்தி இவரைப்பிரசித்தமாக்கியது. இவ்விரு நூல்களும். மேற்கத்தேய மேலாதிக்க அடையாளங்களை விமர்சனத்திற்குள்ளாக்கியது. பலஸ்தீனப் போராட்டத்தினை நியாயப்படுத்தி ஆதரவளித்த ஓர் அமெரிக்கப் புத்திஜீவியாக உலகளவில் அறியப்பட்டவர் செய்ட்.

மேற்கு ஜெருசலத்தில் கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்த எட்வர்ட் செய்ட் ஆரம்பக்கல்வியினை கெய்ரோவில் பெற்றார். 1951ல் பிரச்சினைக்குரியவராக இனங்காணப்பட்டு அங்கிருந்து வெளியேற்றப்பட்டு அமெரிக்காவில் புரட்டஸ்தாந்து பாடசாலையொன்றில் கல்வி புகட்டப்படுகின்றார். இந்த 1951ன் புலப்பெயர்வுக்கு சுமார் 40 ஆண்டுகளுக்குப் பின்னரே (1992ல்) அவரால் மீண்டும் ஜெருசலம் வரமுடிந்தது.

பிரின்ஸ்டனில் பட்டதாரியாகி, ஹார்வாட்டில் கலாநிதிப் பட்டம் பெற்று கொலம்பியாவில் பேரசிரியராகக் கடமையாற்றிய செய்ட், 1991ல் லுக்மேனியா நோயினால் பீடிக்கப்பட்டார். 1977ல் இருந்து 1991 வரை பலஸ்தீன தேசிய கவுன்சிலின் அங்கத்தவராயிருந்தார். 1988ல் பலஸ்தீன சுதந்திரப் பிரகடனத்தை ஆங்கிலத்திற்கு மொழிபெயர்த்தார். ஒஸ்லோ உடன்படிக்கைகள், யாசிர் அறபாத்தின் சமரசங்கள், விட்டுக்கொடுப்புக்கள் என்பவற்றை விமர்சித்த எட்வர்ட் செய்டின் எழுத்துக்களை அறபாத் தடை செய்துமிருந்தார்.

புலப்பெயர்வு வாழ்க்கை ஒருவனின் சிந்தனை வியாபகத்தை ஏற்படுத்துகிறதென்று கூறிய எட்வர்ட் செய்ட், அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கையை மிகக் காரசாரமாக எதிர்த்து வந்தவர். குறிப்பாக வளைகுடாப்போர், அமெரிக்கா அரபுலகுடன் மேற்கொண்ட கலாசார முரண்பாட்டின் விளைவென்றே கருதினார்.

அதிகாரத்தின் முன் உண்மையைப் பேசுதல், எல்லாப்புத்திஜீவிகளாலும் முடிவதில்லை. அதுவும், அமெரிக்க புத்திஜீவிகள் என்றால் சொல்லவேண்டியதில்லை. உலகில், நியாயத்திற்காய் குரல் கொடுத்த மிக அரிதான புத்திஜீவிகளில் ஒருவராய் இருந்த செய்ட் 1999ல் "Out of Place" என்ற தன் இளமைக்கால நினைவுகளைச் சொல்லும் நூலொன்றை வெளியிட்டார். இதை அமெரிக்க புத்திஜீவி வட்டாரம், தன்னை பலஸ்தீன அகதியாக இனங்காட்ட செய்ட் பொய்யாக புனைந்துரைத்த கதை என்று விமர்சித்திருந்தது.

1962ல் Maire Jaanus என்பவரை மணந்தார். எனினும் 1967ல்5 திருமண உறவு முறிந்தது. பின்னர் 1970ல் Mairiam Cortas என்பவரை மணந்து இரு பிள்ளைகளு க்கு தந்தையானார். பலதடவை நோபல் பரிசுக்காக இவரது பெயர் சிபார்சு செய்யப்பட்டிருந்தும், அரசியல் காரணங்களுக்காக புறக்கணிக்கப் பட்டிருந்தார். தமிழிலும், புலமைத்துவ வட்டாரத்தில் நன்கு அறியப்பட்ட இவரது மரணம் ஈடு செய்யப்பட முடியாதெனினும், ஈடு செய்யப்பட வேண்டியது காலத்தின் அவசியம்.

*காற்றுச் சுமந்து வந்த......*

"காற்றுச் சுமந்து வரும் கனவுகள்" பற்றிய எனது குறிப்புக்கு எம்.என். இக்ரம் எதிர்வினையாற்றியிருந்தார். அவர் 'வரவேற்ற' எனது விசனமும், அவரின் சித்தாந்த விளங்கங்களும் எங்கோ ஒரு புள்ளிக்கு அழைத்துச் செல்கிறது. அது வரவேற்கத்தக்கது. எனது குறிப்பின் விசனம் என்னுடையது மட்டுமல்ல; அந்த முயற்சியில் ஆத்மார்த்தமாக ஈடுபட்டவர்களினதும் கூட என்பது இங்கு சொல்லவேண்டியது. இஸ்லாத்தின் செல்வம் பற்றிய ஆழ அகலமான கணிப்பீடு எனக்குத் தெரியாது. ஆனால், எனது விசனத்தை விமர்சித்து விளக்கிய விதம், நோக்கம் எதையும் நியாயப்படுத்தும் போலல்லவா இருக்கிறது. அத்துடன் இதுதான் இஸ்லாமியக் கணிப்பீடு என்றால், இஸ்லாமிய இயக்கவாதிகள் ஏன் தங்கள் தஃவாப் பணிகளுக்கு சில பரிசுத்தக் கோட்பாடுகளை முன்வைக்கிறார்கள்? அத்துடன், ஏன் வெளியீட்டு விழாவுக்கு மட்டும் ஹாஷிம் உமரை பிரதானப்படுத்துகிறோம்? அவரின் பத்தாயிரம் ரூபாவிற்காய் மறைமுக முகஸ்துதியில் ஈடுபட்டு, உலக சாதனைப் பெருமைகளை அவரில் ஏற்படுத்துகிறோம். கலைஞர்கள் போக, அந்த வெளியீட்டின் முழுமைக்கும் பணமுள்ளவர்கள் தான் பின்னணியில் இருந்தார் என்பது உண்மை. எனினும் எனது குறிப்பில் சுட்டுகிற ஹக்கீம், ஹாஷிம் உமர் போன்ற "பிரதிநிதிகள்" எனது சிறிய விமர்சனத்தின் மிகச் சாதாரண கருத்தியலை/அரசியலை விளங்கிக் கொள்ளப் போதுமானவர்கள்!

ஜெயமோகனின் "பின் தொடரும் நிழலின் குரல்" கொம்யூனிசத்தை கேள்விக்குட்படுத்துவதால் சாதகமாய் விளங்கப்படுவதை விடுத்து, பிரதியாளரின் இந்துத்துவக் கருத்தாக்கம் பார்க்கப்படுவதுதான் நமது கவனத்திற்குரியதாக இருக்கவேண்டும் என்பது எனது கவனயீர்ப்பு!

மிகக் கனதியான இக்ரமின் மாற்றுக்குரல், மிகச் சாதாரண என் விமர்சனத்தை உள்ளிழுத்திருக்கிறது. அவருக்கு என் நன்றிகள்!

## பேச்சுவார்த்தைக்கு முஸ்லிம் பிரதிநிதிகள் வேண்டாம்!

தமிழர் கூட்டு முன்னணி

அரசாங்கத்திற்கும் புலிகளுக்குமிடையில் நடைபெறவுள்ள இடைக்கால நிர்வாக அலகு பற்றிய பேச்சுவார்த்தையில் முஸ்லிம் பிரதிநிதிகள் கலந்து கொள்வதை தடுத்து நிறுத்துமாறு பிரதமரிடம் வேண்டுகோள் விடுக்க தமிழர் தேசிய கூட்டு முன்னணியின் மத்திய செயற் குழு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம் பிரதிநிதிகள் கலந்து கொண்டால், இடையூறுகள் காரணமாக பேச்சுவார்த்தையை இடைநடுவில் நிறுத்த வேண்டிய நிலை உருவாகுமென்றும், பேச்சுவார்த்தை நல்லதொரு நிலையை எட்டிய பின் புலிகளும் முஸ்லிம் பிரதிநிதிகளும் அதுபற்றி பேச்சுவார்த்தை நடத்திக் கொள்ளலாம் என்றும் தமிழர் கூட்டு முன்னணியின் மத்திய செயல்குழு ஆலோசனை வழங்கப்போவதாகவும் கூறப்படுகிறது.

*காலங்கடந்த பின்னால்....*

தனி ஈழத்தை பெற்றுத்தருவதாக பாராளுமன்ற அங்கீகாரம் பெற்று சென்ற அமிர்தலிங்கம்-அந்த முடிவை செயற்படுத்த: அதற்காக தீவிரமாக உழைக்க மறுத்ததன் விளைவை வரலாற்றில் நாம் கண்டுவந்துள்ளோம்.

இது வெறும் தீர்மானம்தான் என நமது அரசியல் தலைமைகள் இனிவரும் காலங்களில் செயற்படாது இருப்பர் என நாம் நம்புவோமாக! இந்த நம்பிக்கைக்கு உரித்துடையவர்களாக நமது அரசியல் தலைமைகள் எதிர்காலத்தில் நடக்க வேண்டியுள்ளது. மிகக் குறிப்பாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரஊப் ஹக்கீம் இந்த விடயத்தில் அதிக பொறுப்பிற்குரியவராக உள்ளார். மீளவும் ஹக்கீம் மீதான அரசியல் கடமைப்பாடு நமது அரசியலில் இத் தீர்மானத்தின்படி அதிகரித்துள்ளது.

முஸ்லிம்களின் அரசியல் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான ஆளுமையும் உறுதியும் ஹக்கீமுக்கு உள்ளதா என்பதை அவர் இனிவரும் காலத்தில் நிரூபிக்க வேண்டியுள்ளது. கடந்த காலத்தைப் போல் முஸ்லிம்களின் அரசியலை கொச்சைப்படுத்துவதை ஹக்கீம் இத்தீர்மானத்தின் ஊடாக கைவிட வேண்டிய அரசியல் நிர்ப்பந்தத்திற்குள் தள்ளப்பட்டுள்ளார்.

---

இல்லறத்தில் நுழையும் நம்மவர்கள் எல்லோரும் அது பற்றிய எல்லா வகையான அறிவுகளுடனும் இருப்பதில்லை. இதனால் சிற்சில இடறல்கள் தலைகாட்டவே செய்யும். அவ்வாறானவற்றைக் களைந்து நல்லறமாக மாற்றுவதற்கும் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து இணைபிரியாத் தம்பதிகளாகத் திகழ்வதற்கும் ஆலோசனைகளை பன்னூல் ஆசிரியர் 'கையேடு கலைஞர்' டாக்டர் அப்துல் பாரி 'புதுமணத் தம்பதிகள் கையேடு' என்ற தலைப்பிலான நூலில் முன்வைத்துள்ளார். அவற்றிலிருந்து சில பகுதிகள் இங்கு இடம்பெறுகின்றன. நமது மக்களும் இவ்வாறான இடறல்களை சந்திக்கும் போது அவற்றிலிருந்து விடுதலை பெறுவதற்கு இத்தொடர் வழிகாட்டும் என்று நம்புகின்றோம்.

## கற்றுக் கொடுங்கள் 3

"மாமியார்" என்றாலே, "அதிகாரம் பண்ணுகிறவள்" என்று பொருள் ஆகிவிட்டது! அப்படி அதிகாரம் பண்ணும் போதுதான் மாமியார் மருமகள் சண்டை தொடங்குகிறது!

அன்பு செலுத்தினால், சண்டை வராது. மாமியாரும் மருமகளும் தாய் - மகளைப் போல அன்புடன் பழக வேண்டும்.



சண்டை வர சில காரணங்கள் இருக்கின்றன. மருமகளை வேலை வாங்குவது ஒரு காரணம். மருமகள் என்பவள் வேலைக்காரி அல்ல; அடிமையும் அல்ல; மாமியார் - மருமகள் இருவரும் வேலைகளைப் பகிர்ந்து கொண்டு செய்ய வேண்டும். சும்மா கிடைக்கும் பொருள் துருப்பிடித்துப் போகும். உட்கார்ந்தே இருக்கும் உடலில் ஊரிலுள்ள நோயெல்லாம் வந்து ஒட்டிக் கொள்ளும். பிறகு கால் வலிக்கிறதே, கைவலிக்கிறதே, முதுகு பிடித்துக் கொண்டதே, காலை நீட்ட முடியவில்லையே என்று வேதனைப்பட வேண்டியிருக்கும். மருமகளுடன் சேர்ந்து மாமியாரும் வீட்டு வேலை செய்தால், இந்த வேதனை ஏற்படாது.

### மனைவிக்கு உதவி

எங்கள் குடும்பம் பெரிய குடும்பம். என் அப்பாவுக்கு இருக்கும் வசதிக்கு வீட்டு வேலைக்கு ஆட்கள் வைத்துக் கொள்ள முடியும். ஆனால், அம்மாதான் எல்லா வேலைகளையும் செய்ய வேண்டும் என்று அப்பா சொல்லுவார். "வயதான காலத்தில் பெண்கள் கட்டாயம் வீட்டு வேலை செய்ய வேண்டும். இல்லாவிட்டால், கால், கை முடங்கிப் போகும்" என்று கூறுவார். உண்மைதான். கொள்ளுப் பேரன் பேத்திகள் எடுத்தும் இன்றைக்கும் வீட்டு வேலைகளை என் அம்மா செய்து வருகிறார்.

நல்ல மாமியார் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கும் என் அம்மா எடுத்துக் காட்டாக விளங்குகிறார். எங்கள் குடும்பத்தில் ஏதாவது தவறு நடந்தால் தவறு செய்தவர்கள் தவறை ஒப்புக் கொண்டு மன்னிப்புக் கேட்டுக் கொள்ளத் தயங்கமாட்டார்கள். இதனால்தான் ஏழு மருமகள்கள் இருந்தும் மருமகள் மெச்சும் மாமியாராக என் அம்மா சிறந்து விளங்குகிறார்கள். மருமகள்களும் மாமியாரை சொந்தத் தாய் போல நினைக்கிறார்கள்.

ஆண்களும் வீட்டு வேலையில் மனைவிக்கு ஒத்தாசையாக இருக்க வேண்டும். அது குடும்ப உறவைப் பலப்படுத்தும். எனக்கு எவ்வளவு வேலைகள் இருந்த போதும், நான் வீட்டு வேலைகளில் என் மனைவிக்கு உதவியாக இருக்கிறேன்.

### பொறுமை வேண்டும்!

மாமியார் ஏன் தன் மீது இவ்வளவு கோபமாக இருக்கிறார் என்று மருமகள் சிந்திக்க வேண்டும். தான் பெற்ற மகனை பங்கு கோட்டுக் கொள்ள ஒருத்தி வந்து விட்டாளே என்று மாமியார் நினைக்கக் கூடும்.

மருமகள் வரும் போது மாமியாருக்கு 45 - 50 வயது ஆகிவிடும். அந்த வயது, பெண்களுக்கு வீட்டு விலக்கு நிற்கும் நேரம். அப்போது பெண்களின் மனதில் ஒரு பதட்டம் இருக்கும்; ஒருவித பயம் இருக்கும். யாரைப் பார்த்தாலும் எரிந்து விழுவார்கள். இதை மருமகள் புரிந்து கொள்ள வேண்டும். சில மாமியார்களின் குணமே அப்படித்தான் இருக்கும். எதற்கெடுத்தாலும் சதா குற்றம் சொல்லிக் கொண்டே இருப்பார்கள். அவர்கள் போக்கிலே போய்த்தான் மருமகள் வெல்ல வேண்டும்.

### ரசிக்கக் கற்றுக் கொள்ளுங்கள்

நாம் எவ்வளவு போராடினாலும் அவர்களை மாற்றவே முடியாது என்கிறீர்களா? கவலைப்படாதீர்கள். அதற்கும் வழி இருக்கிறது. அவர்களின் ஏச்சை ரசிக்கக் கற்றுக் கொள்ளுங்கள். சிலரை மாற்ற முடியவில்லை என்றால் அவர்களின் போக்கை ஏற்றுக் கொள்ள நீங்கள் பழகிக் கொள்ள வேண்டும்.

பொறுமை மிகமிக முக்கியம். சட்டென்று வாய்ச் சொல்லை சிந்திவிடக் கூடாது. என்னிடத்தில் உள்ள பெருங்குறையே தவறைக் கண்டதும் சட்டென்று கோபப்பட்டு ஏசி விடுவதுதான். பொறுமை வெற்றிதரும் என்பதை என் மனைவி என்னிடத்தில் காட்டிய பொறுமையைப் பார்த்துத் தெரிந்து கொண்டவன், நான்.

சிறந்த உழைப்பால்தான் மருமகள் நல்ல பெயர் எடுக்க முடியும். எனவே, வீட்டு வேலைகள் செய்யத் தயங்கக் கூடாது. வீட்டு வேலைகளை முகமலர்ச்சியுடன் செய்ய வேண்டும்.

கல்லூரிகளில் புதிதாகச் சேரும் மாணவர்களிடம் பழைய மாணவர்கள் கிண்டல் செய்வது உண்டு. அதுபோல புதிதாக வீட்டுக்கு வந்த மருமகளிடம் நெருங்கிய உறவினர்கள் சீண்டிவிட்டு விளையாடுவது உண்டு. இதை "சீரியஸ்" ஆக எடுத்துக் கொள்ளக் கூடாது. விளையாட்டு என்று எடுத்துக் கொள்ளுங்கள். பெரிதுபடுத்தாதீர்கள்.

### பிறந்த வீட்டுப் பெருமை

மருமகள் புகுந்த வீட்டில் பிறந்த வீட்டுப் பெருமை பேசக் கூடாது. புகுந்த வீட்டைத் தன் வீடாக மனதில் ஏற்றிக் கொள்ள வேண்டும். புகுந்த வீட்டைப் புகழ்ந்து கொண்டிருக்க வேண்டும்.

மாமன், மாமியாரைப் பெற்றோராக எண்ண வேண்டும். அவர்களும் மருமகளைப் பெற்ற மகளாக நினைக்க வேண்டும்.

மூத்தவர்களை மதிக்க வேண்டும். அவர்களின் சொற்படி நடக்க வேண்டும். மூத்தவர்களுக்கு விட்டுக் கொடுக்கப் பழகிவிட்டால், எந்தச் சண்டையும் வராது.

### பயம் வேண்டாம்

புதுமணப் பெண் பயப்படாமல் இருக்க வேண்டும். குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரையும் புரிந்து கொள்ள வேண்டும். தெரியாத வேலையைத் தெரிந்தது போலக் காட்டிக் கொள்ளாதீர்கள். "எனக்குத் தெரியாது. சொல்லிக் கொடுங்கள். கற்றுக் கொள்ளுகிறேன்" என்று மாமியாரிடம் கேளுங்கள். தினமும் புதிது புதிதாகக் கற்றுக் கொள்ள ஆவலுடன் இருங்கள்.

இன்றைக்கு வீட்டில் என்ன வேலை இருக்கிறது என்று ஒரு தாளில் எழுதி வைத்துக் கொள்ளுங்கள். வேலை முடிய முடிய ✓ செய்து கொள்ளுங்கள். நாளைக்கு என்று எந்த வேலையையும் தள்ளிப் போடாதீர்கள். பிறகு மறந்து விடும்.

நீங்கள் "கஷ்டமானது" என்று நினைக்கும் வேலைகளைத் தொடர்ந்து செய்து கொண்டே வந்தால், நிச்சயம் "இவ்வளவு எளிதானதா!" என்று நீங்களே வியப்படைவீர்கள்.

வீட்டில் எந்த சாமானையும் எடுத்த இடத்தில் வைக்கப் பழகுங்கள். நிறையக் குடும்பங்களில் தினமும் நடக்கும் சண்டை "வைத்த இடத்தில் சாமான்களைக் காணோமே" என்பது தான்.

### அறிவைப் பெருக்குங்கள்!

பெண்கள் தினசரிப் பத்திரிகை, வாரப் பத்திரிகைகளைப் படித்து தங்கள் அறிவைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். சில வீடுகளில் பெண்களின் படிப்பை நிறுத்தித் திருமணம் செய்து கொடுப்பார்கள். இப்படிப்பட்ட பெண்களுக்கு அஞ்சல் வழிக் கல்வி நல்ல வாய்ப்பு ஆகும். தமிழ் நாட்டில் சென்னை, அண்ணாமலை, மதுரை முதலிய பல்கலைக்கழகங்கள் அஞ்சல் வழிக் கல்வி நடத்துகின்றன. இந்தப் பெண்கள் அதில் சேர்ந்து, படித்து, பட்டதாரி ஆகலாம். ஒரு பெண் படித்தால் அந்தக் குடும்பமே ஒளி பெறும்.



### ஆடம்பரம்

இந்தக் கால இளைஞர்கள் மனைவியிடம் நாகரிகத்தை எதிர்பார்க்கிறார்கள். அவனது விருப்பப்படி மனைவி நடந்து கொள்ள வேண்டும். ஆனால், சில பெண்கள் ஆடம்பரமாக நடக்க ஆசைப் படுகிறார்கள். அது ஆபத்து. நமது குடும்பத்துக்கு ஒத்துவராது என்பதை மெல்ல மெல்ல அவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். அடக்கமும், எளிமையுமே நம்மை உயர்த்திக் காட்டும்.

வீண் செலவுகள் செய்யாதீர்கள். "சிக்கனக்காரி" என்று பெயர் எடுங்கள். அதற்காகக் கஞ்சத்தனம் வேண்டாம். .

### தாய்வீட்டுக்கு

சில பெண்கள் அடிக்கடி தாய் வீட்டுக்குப் போகிறார்கள். இது நல்ல பழக்கமில்லை. புகுந்த வீட்டைத் தன் வீடாகவும், மாமன் மாமியைத் தன் பெற்றோராகவும் நினைத்தால், இந்த எண்ணமே ஏற்படாது.

எந்த முடிவையும் சொந்தமாக யோசித்து எடுங்கள். அதே நேரம் பெரியவர்களிடமும் ஆலோசனை கேளுங்கள். இல்லையென்றால், எங்களை மதிப்பதேயில்லை என்று குறை ஏற்படும்.

### மனம் கவர வேண்டும்

மனதுக்குப் பிடித்து விட்டால், தவறு கூட சரியாகத் தோன்றும். ஆகாத மாமியாருக்கு மருமகள் கால் பட்டாலும் குற்றம், கைபட்டாலும் குற்றம்! எனவே, மாமியாரின் மனதைக் கவரும்படி நடந்து கொள்ளுங்கள்.

மாமியார் தவறு செய்தால், அதைக் கண்டு கொள்ளக் கூடாது. மாமியார் உடைத்தால் மண்குடம், மருமகள் உடைத்தால் பொன்குடம்! இது பற்றிப் பேசினால், குத்திக் காட்டுகிறாள் என்று மாமியார் கோபப்படுவார்!

எதையும் நேரப்படி செய்து பழக வேண்டும். வேலைகளை விரைவில் முடிக்க இது உதவும்.

தவறு ஏற்படும் போது நம்மை நாமே திருத்திக் கொள்ள வேண்டும். அப்போது மாமியாரோ, கணவனோ நம்மைக் குறை கூற இடமில்லாமல் போய்விடும்.

### சுத்தமான வீடு

மருமகள் எவ்வளவு கெட்டிக்காரி என்பதை வீட்டைப் பார்த்தே சொல்லிவிடலாம். வீடு சுத்தமாக இருக்க வேண்டும். மாதம் ஒருமுறை ஒட்டடை அடித்து, வீடு முழுக்க சுத்தம் செய்ய வேண்டும். வீட்டை அலங்காரப்படுத்தலாம்.

அடுப்படியில் ஒரு நோட்டு வைத்துக் கொண்டு, என்ன சாமான் வாங்க வேண்டும் என்பதை அவ்வப்போது அதில் குறித்துக் கொள்ள வேண்டும். வாரம் ஒருமுறை கணவன் மனைவி இருவருமாகக் கடைக்குச் சென்று, சாமான்கள் வாங்கி வரவேண்டும்.

எந்த சாமான் எந்தக் கடையில் சுத்தமாக, மலிவாகக் கிடைக்கும் என்பதைப் பெண்களும் தெரிந்து கொள்ள வேண்டும். அப்போது தான் ஒரு அவசரத்துக்குப் பெண்கள் தாங்களே போய்க் கடைகளில் சாமான் வாங்கி வரமுடியும்.

## சீதனத்தில் எளிமை

அறிவிப்பவர்:- அலி (ரலி)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஃபாத்திமாவை தனக்கு திருமணம் செய்து வைத்த போது கீழ்வரும் பொருள்களை தம் மகளுக்கு சீதனமாக அளித்தார்கள்.

1. வெள்ளை வெல்வெட் துப்பட்டி
2. தோல் தலையணை (பேரீத்த நாரினால் நிரப்பப்பட்டது)
3. திருகை
4. நீர் நிரப்பும் தோல்பை
5. இரு மண்பாண்டங்கள்

**விளக்கம்:**
பாலினக் கவர்ச்சி என்பது ஓர் இயற்கையான வேட்கையாகும். இந்த நோக்கத்திற்காக பெண்ணுக்கு ஆணும் ஆணுக்குப் பெண்ணும் தேவைப்படுகிறார்கள். அல்லாஹ் மனித இனத்தின் தொடக்கத்திலிருந்தே திருமணத்திற்கான விதியை வகுத்துத் தந்து விட்டான்.

ஆணும் பெண்ணும் தமக்கிடையில் ஒருவருக்கொருவர் ஒத்துழைக்கவும் பரஸ்பரம் உரிமைகளை நிறைவேற்றவும் குடும்ப பொறுப்புக்களைப் பேணவுமான ஒப்பந்தம் சாட்சிகளின் முன்னிலையில் மக்கள் திரண்டிருக்கும் அவையில் நிகழ்வுருகிறது. புதிதாக இணைசேரப்போகும் தம்பதிகள் தம்முடைய இன்பமான தாம்பத்தியத்துக்கு சமூக அங்கீகாரம் பெறுகிறார்கள். பிறக்கப்போகும் குழந்தைகளுக்கு ஒழுக்கப்பயிற்சி கல்வி, பண்பாடு ஆகியவற்றை கற்றுத்தர வேண்டிய சட்டரீதியான பொறுப்பும் அவர்கள் மீது சுமத்தப்படுகிறது.

இது ஒரு தூய ஒப்பந்தம் இதனை அதிகபட்சம் இலகுவாக்கிட இஸ்லாம் விரும்புகிறது. அதனால்தான் பெரிய அளவில் மஹர் தந்து மணம் முடிப்பதை பெரும்பாலோர் விரும்புவதில்லை. மிக எளிதில் நிறைவேற்றும் வகையில் அமையும் மஹரே சிறப்பு வாய்ந்ததாகும்.

சீதனம் தொடர்பாக பெருமானார் (ஸல்) அவர்கள் எளிமைக்கு ஒரு முன்னுதாரணமாய்த் திகழ்ந்தார்கள். சீதனத்தில் எளிமை கடைப்பிடிக்கப்படுமானால் திருமணத்திற்கு இன்று பெரும் முட்டுக் கட்டைகளாய் விளங்கும் அனைத்துமே இல்லாதொழிந்து போகும்.

-அபூஸயீத் பாகவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறந்த மடல்

கௌரவ ஜனாப். றவூஃப் ஹக்கீம் அவர்கள்,
தேசியத் தலைவர்
கௌரவ ஜனாப். ஏ.எல்.எம். அதாவுல்லா அவர்கள்,
முன்னாள் தவிசாளர்,
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்.


"அஸ்ஸலாமு அலைக்கும்"

'அல்ஹம்துலில்லாஹ்' நான் உங்களில் வயதில் முதிர்ந்தவன்; முஸ்லிம் காங்கிரசில் மூத்தவன்; போராளிகளில் மூத்தவன்; அதன் இலட்சிய நட்சத்திரம் என நாமம் சூட்டப்பட்டவன். இவற்றையெல்லாம் நீங்கள் நன்கு அறிவீர்கள். இந்த அடிப்படையில் இக்கடிதத்தினை இன்று வெளிப்படையாக எழுதுவது எனது கடமையென உணர்ந்தேன். நமது சமூகத்தின் இன்றைய அரசியல் சூழ்நிலை சமூகத்தின் மீது உண்மையான விருப்பமுள்ள எந்த இஸ்லாமியனையும் கைகட்டி, வாய்பொத்தி பார்த்துக் கொண்டிருக்க விடுமா? இவ்வாறான உணர்வின் உந்துதலினாலேயே எனது பேனா எழுதிக் கொண்டிருக்கின்றது. நமது மாபெரும் தலைவர் மர்ஹூம் அஷ்ரஃப் அவர்கள் எங்கே? அவரை நாம் எவ்வாறு இழந்தோம்? நீங்கள்தான் நிலைத்துவிடுவீர்களா? நான்தான் நிலைத்து விடுவேனா? நாம் எப்போ? எங்கே? எவ்வாறு இறப்போம்? இதனை யாரால்தான் கூறமுடியும்? இந்தக் கசப்பான உண்மையினை யதார்த்தத்தினை சற்று உணர்ந்து பாருங்கள்.

நமது வாழ்வு எவ்வளவு அற்பமானது? இந்த அற்ப வாழ்வை நம்பி மோசம் போனோர் எத்தனை கோடானுகோடி? இந்த உண்மையினை உணர்ந்தவர்கள் மிகச்சிலரே. இவர்களுள் நீங்களும் நானும் இருக்க வேண்டுமென இச்சந்தர்ப்பத்தில் ஏகனை பிரார்த்திக்கின்றேன்.

நீங்கள் இருவரும் முஸ்லிம் காங்கிரசுக்குள் அடி எடுத்து வைக்கும் போது அன்று இருந்த முஸ்லிம் காங்கிரஸின் நிலைமையினைச் சற்று பின்நோக்கிப் பாருங்கள். அமைச்சர் அதாவுல்லா அவர்கள் இதனால் ஈர்க்கப்படும் போது தமக்கு அமைச்சர் பதவி கிடைத்துவிடுமெனக் கருதி வந்தவரா? அன்றைய இளஞ் சட்டத்தரணி றவூஃப் ஹக்கீம் தாம் இக்கட்சியின் தலைவராகிவிடலாம் என்னும் கற்பனையுடன் இதற்குள் குதித்தவரா? இல்லவே இல்லை. நீங்கள் ஒருவேளை இவ்வாறுதான் நினைத்து இக்கட்சிக்குள் வந்துதான் இருந்தாலும் இவை உங்களின் முயற்சிகளினால்தான் உங்களை வந்தடைந்துவிட்டன எனக் கருதுகின்றீர்களா? அதுவும் இல்லை, இவை எல்லாம் ஏகன் வகுத்த வழி. இன்றிருப்போர் நாளை இங்கு இருப்பதென்ன உண்மை? இதனை உற்று நோக்கி ஒரு முடிவுக்கு வாருங்கள். மாற்றாரின் ஊடுருவலுக்கு இடமளிக்கலாமா?

நாமெல்லாம் ஆறு விடயங்களில் பூரண நம்பிக்கை கொண்ட முஸ்லிம்களாவோம். இதனால்தான் நம்மை ஈமான்கொண்ட முஸ்லிம்கள் என்று உலகமழைக்கின்றது. நமது ஈமானின் கடைசி வார்த்தையாகிய "வல்கத்றி கைறிஹி வஷற்றிஹி மினல்லாஹித்தஆலா"



## நமது அடிப்படை உரிமையினை இழக்க சமுதாயம் இன்று ஆயத்தமாகவில்லை!

என்னும் அரபி வாக்கியத்தை சற்று உற்று உணர்ந்து விளங்கிப் பாருங்கள். இதனை விளங்கிக் கொண்ட எந்த முஸ்லிமிடத்திலும் எதிலும் பிடிவாதம் இருக்கலாமா? இந்த அர்ப்ப உலகினை நம்பி மோசம் போகலாமா? நாம் இந்த உலகில் செய்கின்ற ஒவ்வொரு கருமமும் நமது மறுமை நிரந்தர வாழ்வுக்காக ஆற்றுகின்ற சேவை அல்லவா? நாம் ஆற்றுகின்ற எந்தச் சேவையினையும் இறைவன் அவதானித்துக் கொண்டே இருக்கின்றான் என்பதை நம்மால் மறுக்கவோ, மறைக்கவோ முடியுமா? நாம் நினைப்பதைக்கூட அவன் அறிந்தவனாகவே இருக்கின்றான். நமது ஆட்சி, அதிகாரம், பெருமை, வறுமை, செல்வம் அனைத்துமே அவனது நாட்டத்தின் பாற்பட்டவையே!இவற்றுள் எதுவும் நிரந்தரமானவை அல்ல. இவ்வுலகில் இறைவனால் படைக்கப்பட்டவை அனைத்திற்கும் இறப்புண்டே! இதனை மனதில் நிறுத்தி பின்வருமாறு ஒரு முடிவுக்கு வருமாறு உங்களின் உடன் பிறவா மூத்த இஸ்லாமிய சகோதரன் என்ற வகையில் உங்களிடம் கனிவாகக் கேட்டுக் கொள்கிறேன்.

மனிதன் பிழைவிடுவதும் திருந்துவதும், மேலும் பிழை விடுவதும் திருந்துவதும் இயல்பே. இது இறைவனின் படைப்பாற்றலின் பாற்பட்டதொரு நிகழ்வு. இதிலிருந்து நாம் ஓரளவேனும் விடுபட வேண்டுமெனில் முதற்கண் நம்மிடையே உள்ள தற்பெருமை, செருக்கு, பிடிவாதம் போன்றவற்றிலிருந்து விடுபடல் வேண்டும். இதற்கு ஒரு முன்மாதிரியாகவே நமது மறைந்த தலைவரின் சிந்தனைத் தொடரும் அதன் வழிமுறைகளும் அமைந்திருந்தன. இது தனி மனிதனுக்கு மாத்திரம் அவசியமானதாகக் கொள்ள முடியாது. இது ஒரு கட்சிக்கும் அவசியமானதாகும். இவ்வாறான நிலமை நமது கட்சியிலிருந்தும் விடுபடல் வேண்டும். இதற்காக நீங்கள் இருவரும் முதற்கண் ஒற்றுமைப்படல் வேண்டும். உங்கள் ஒற்றுமையினை இன்று இந்நாட்டின் மூலை முடுக்குகளெங்கும் சிதறிப் பரவிவாழும் நமது முஸ்லிம் சமுதாயம் - மக்கள் ஒவ்வொருவரும் அவாவி நிற்கின்றனர்.

இம்மக்கள் இவ்வுலகின் அழிவுக்குட்படவிருக்கும் அற்ப அபிவிருத்தி எனும் மாயைக்குள் மீண்டும் சிக்கி விடுபட்டு வருகின்றனர். இப்பொழுது சுய மரியாதை சமூக ஒற்றுமை இதன் மூலம் கிடைக்கப் பெறவிருக்கின்ற அரசியல் சுதந்திரத்தினையே எதிர்பார்த்து நிற்கின்றனர். ஊடகங்களூடாகச் செய்கின்ற பிரச்சாரங்கள் அனைத்தையும் நம்பி நமது அடிப்படை உரிமையினை இழக்க நமது சமுதாயம் இன்று ஆயத்தமாகவில்லை. இந்த உண்மையினை தேர்தல் வரும்போது தெரிந்து கொள்வீர்கள். உங்கள் இருவரிடையேயும் ஏற்பட்ட ஒரு சிறு தவறினால் நமது சமுதாயமே இன்று நீதிமன்றின் முன்பு கைகட்டி, வாய்பொத்தி நிற்பதாக உணர்கின்றது. முதற்கண் நீங்கள் இருவரும் ஒற்றுமைப்பட்டே ஆகவேண்டும். இந்த ஒற்றுமையினால் மாத்திரம் நமது சமூகத்திற்கு ஏற்படவிருக்கின்ற அரசியல் அழிவினைத் தடுத்து நிறுத்த முடியும். என்பதில் நமது சமூகம் தெளிவாக இருக்கின்றது.

இதற்காக "பூனைக்கு மணி கட்டுபவர் யார்?" என்ற கேள்வியினைக் கேட்டுக் கொண்டு மௌனிகளாகிவிடாதீர்கள். உங்கள் உள்ளங்களில் பிடித்துக் கிடக்கின்ற மாயைகளை ஒருபுறம் அகற்றிவிட்டு ஒற்றுமையினை நோக்கி இறங்கி வாருங்கள். நிச்சயமாக பொறுமைக்கு, பணிவுக்கு, மன்னிப்புக்கு இறைவனிடத்தில் சிறந்த இடமுண்டு. உங்களோடு சேர்ந்து இருக்கின்ற சகோதரர்களுக்கும் இதனை உணர்த்துங்கள். இன்றைய சூழலில் நீங்கள் இருவரும் கீழே இறங்கிவரல் வேண்டும். இது தலைவர்களுக்குரிய பண்பு என்பதனை நபி (ஸல்) அவர்கள் கூட பல சந்தர்ப்பங்களில் நமக்கு அவர்களின் செய்கைகள் மூலமாகத் தெளிவுப்படுத்தி உள்ளார்கள். இதில் முந்திக் கொள்பவரையே சமூகம் உண்மையான தலைவராக ஏற்றுக் கொள்ளும்.

நீங்கள் இருவரும் முதற்கண் ஒற்றுமைப்படுங்கள். இதற்காக உங்களில் ஒருவனாக நான் எப்பணியினையும் ஆற்ற அவாவாயிருக்கின்றேன். தொடர்ந்து நீதிமன்று முன்பு இருக்கின்ற வழக்கினை வாபஸ் பெறுங்கள். நமது கட்சியின் தலைவருக்கிருக்கின்ற தற்றுணிவு அதிகாரம் பற்றி நாம் ஒரு மேல்சபையினை அமைத்துக் கொள்வோம். அதற்காக நமது நாட்டின் உலமாப் பெருமக்களின் உதவியினையும் நமது சமூக நலனில் அக்கறை உள்ள நம் அறிஞர்களின் உதவியையும் பெற்று ஒரு "செனற்"றினை அமைத்துக் கொள்வோம். எனது கடந்த வேறு பல கடிதங்களையும் உதாசீனம் செய்தது போல இதனையும் உதாசீனம் செய்யாதீர்கள். உங்களின் சாதகமான பதிலை எதிர்பார்க்கிறேன்.

இ:.து.
உங்களில் மூத்த இஸ்லாமிய சகோதரன்

**எம்.ஏ.ஆதம்லெவ்வை**
(குணம் மாஸ்டர்)
அக்கரைப்பற்று.
10.09.2003



# காட்டு வளம்

இயற்கையின் பரிசான காட்டு வளம் உண்மையிலேயே மிகவும் பெறுமதி வாய்ந்ததாகும். காட்டு வளம் என்று கூறும்போது மரம், செடி, கொடிகள் நிறைந்த, உள்ளத்தை கொள்ளை கொள்ளும் அமைதி நிறைந்த இடமாகும். நாம் பிறந்த இந்த பூமிக்கு அழகையும், அலங்காரத்தையும் வழங்குபவள் இந்தக் காட்டு ராணியே. இந்தக் காட்டு ராணியை நாம் தரிசிக்க செல்வோமானால், அங்கே வசிக்கும் பிராணிகளையும், பறவைகளையும், மரம், செடி, கொடிகளையும் கண்டு ஆனந்தம் அடையலாம். மேலும், உலகத்தார் அனைவருக்கும் நிழலையும், குளிர்ச்சியையும் இந்தக் காட்டு ராணி வழங்குகிறாள். அவளுடனான உறவைப் பேண நாம் மிகவும் அதிஷ்டம் செய்திருக்க வேண்டும்.

நோய்களுக்கான மூலிகைகளையும் வழங்கி அவள் எமதுயிரை காப்பாற்றுகிறாள். உண்ணாமல் இருப்பினும், நீர் பருகாமல் ஒரு நாளைக் கடத்த எம்மால் முடியுமா? இந்தக் காட்டு ராணியினால்தான் நீர் நிலைகள் பாதுகாக்கப்படுகின்றன. இவளால்தான் போதிய மழை வீழ்ச்சியை உலகம் பெறுகிறது. ஆனால், நன்றி கெட்ட மனிதர்களாகிய நாம் பெறுமதி மிக்க காடுகளை தீயிட்டும், வெட்டியும் அழிவுக் குள்ளாக்குகிறோம். மரங்களை வெட்டுவதால் மழைவீழ்ச்சி குறைவடைகிறது. எமது விரல்களால் எம் கண்களையே குத்திக் கொள்வது போல் காட்டை அழித்து வறட்சியை உண்டாக்குகிறோம்.

எல்லோரும் சிந்திக்க வேண்டும். நாம் காட்டை அழிக்கும்போது பல பிராணிகளின் வதிவிடங்களும் அழிவுக்குள்ளாகின்றன. இதன் மூலமாக நாம் கெட்டதையே சம்பாதிக்கிறோம், ஒருபோதும் நல்லவை நடக்காது. ஆகவே, நாம் உடனடியாக காட்டு வளத்தை பெருக்கும் நோக்குடன், புதிய உலகை அமைத்திட திடசங்கற் பத்துடன் முன்வந்து செடிகளை வளர்ப்போம். ஒரு மரத்தை தேவை கருதி வெட்டிச் சாய்த்தவுடன் பத்து மரங்களை நடுவோம். உங்கள் வீணாகிப் போகும் காலத்தை மரம் நடுவதில் ஈடுபடுத்துங்கள். இதன் காரணமாக செளிப்பான பூமியும், பிராணிகளுக்கு வதிவிடங்களும் கிடைக்கும். அதுமட்டுமல்ல, உங்களுக்கும், எதிர்கால சந்ததியினருக்கும் நன்மையே உண்டாகும்.

## அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்கு அருளிய உபதேசங்கள்

01. ஏ அலியே! நீர் காலையிலும், மாலையிலும் இஷாத் தொழுகைக்கு முன்பும், இருள் சூழ்ந்த இல்லத்திலும் தூங்காதீர்.
02. உலோபிகளின் மத்தியில் உட்காராதீர்.
03. இடது கரத்தால் உண்ணவும், குடிக்கவும் செய்யாதீர்.
04. கன்னத்தில் கை வைத்து உட்காராதீர்.
05. உட்கார்ந்திருப்போருக்கிடையில் உறங்காதீர்.
06. பற்களை குத்தி அதிலுள்ளவற்றை உட்கொள்ளாதீர்.
07. விரல்களை நெட்டி (சொடக்கு) விடாதீர்.
08. இரவில் கண்ணாடி பார்க்காதீர்.
09. மல, ஜலத்தில் எச்சில் உமிழாதீர்.
10. தொழுகையில் இருக்கும் போது வானத்தை நோக்காதீர்.
11. உணவுப் பொருள், எலும்பு, அடுப்புக்கரி, கண்ணாடித் துண்டு முதலியவைகளால் துப்பரவு செய்யாதீர்.
12. உட்கார்ந்து கொண்டு தலைப்பாகை அணியாதீர்.
13. நின்ற வண்ணம் கால்சட்டையை அணியாதீர்.
14. கடினமான பொருட்களை பல்லால் கடிக்காதீர்.
15. உணவு உண்டு கை அலம்பாமல் உறங்காதீர்.
16. சூடான ஆகாரத்திலும், சுடு தண்ணீரிலும் சுஜூதின் இடத்திலும் ஊதாதீர்.
17. பிறரின் குற்றங்குறைகளைத் தேடித்திரியாதீர்.
18. பாங்கு, இகாமத்துக்கிடையில் பேசாதீர்.
19. மல, ஜலம் கழிக்கும் போது பேசாதீர்.
20. உமது நேயர்களை வெறுக்கவும், அவர்களைப் பற்றி கோள் சொல்லவும் செய்யாதீர்.
21. அண்டை வீட்டாரைத் துன்புறுத்தாதீர்.
22. எவரையும் இழிவாகவோ, தாழ்வாகவோ பேசாதீர்.
23. நடக்கும் போது திரும்பித் திரும்பி பாராதீர்.
24. பூமி அதிரும் படி நடவாதீர்.
25. நண்பர்களின் மீது சந்தேகம் கொள்ளாதீர்.
26. எந்நிலையிலும் உண்மையை தவிர்த்துப் பேசாதீர்.
27. ஆகாரத்தை நுகர்ந்து பார்க்காதீர்.
28. எதையும் பேசும் போது பிறர் புரியும்படி விளக்கிப் பேசுவீராக.
29. விலக்கானவற்றை நோக்காதிருப்பீராக.
30. பிறரின் அழைப்பிற்கு பதில் கொடுப்பீராக.
31. தனித்துப் பிரயாணம் செய்யாதீர்.
32. அநாதைகளுக்கு அநீதம் செய்யாதீர்.
33. அகம்பாவம், ஆணவம் கொள்ளாதிருப்பீராக.
34. உமது அறிவையே நம்பி எதையும் செய்யாமல் உம்மைக் காட்டிலும் சிறந்தோரிடம் ஆலோசனை பெற்றுச் செல்வீராக.
35. அகம்பாவம் ஆணவம் கொள்ளாதிருப்பீராக.
36. பகைவர்களை எளிதில் நம்பி விடாதீர்.
37. பெருமை பாராட்டாதீர்.
38. யாசிப்போரை விரட்டாதீர்.
39. பேராசைப்படாதீர்.
40. விருந்தினரை உள்ள ன்புடன் உபசரிப்பீராக.
41. கஷ்டம் வந்தபின் பொறுமை கொள்வீராக.
42. நன்மைகளை புரிவதன் பக்கம் பிறரை தூண்டுவீராக.
43. நன்மைகளை ஏவித் தீமைகளைத் தடுப்பீராக.
44. உமது குற்றங்குறைகளை நினைத்து வருந்துவீராக.
45. உமக்கு தீங்கு செய்தோருக்கும் நன்மையே செய்வீராக.
46. உள்ளதைக் கொண்டு திருப்தி அடைவீராக.
47. அதிகமாக நித்திரை செய்யாதீர்.
48. அனுதினமும் நூறு முறை பாவமன்னிப்பு செய்வீராக.
49. இருளான இடத்தில் உட்கார்ந்து உணவு உட்கொள்ளாதீர்.
50. ஆகாரத்தை வாய்நிறைய வைத்து உண்ணாதீர்.

## கற்பதன் பெறுமதி

கற்பது முட்கள் நிறைந்த ஒரு கிளையாகவே தோன்றும். ஆனால், அதன் பெறுபேறு பூங்கொத்தைப்போன்று அழகானது; இனிமையானது. உலகில் உயர்பதவிகளை வகிப்பவர்கள் அப்பதவிகளில் நியமிக்கப்படக் காரணம் அவர்கள் பெற்ற கல்வியே. அது அவர்கள் கல்வியால் பெற்ற பெறுபேறே.

வறியவர்கள் உருவாக அவர்களின் சோம்பேறித்தனமே காரணமாகிறது. சோம்பலுக்குக் காரணம் போதிய கல்வியின்மையே. கல்வி என்ற பாதாளத்தை கடக்க வேண்டுமானால் சோம்பேறித்தனத்தை உதறித்தள்ளிவிட்டு ஊக்கம் என்ற மகுடத்தை அணிந்து கொள்ள வேண்டும்.

இன்றைய காலகட்டத்தில் பாடசாலையில் கால் பதிக்காத பிள்ளைகள் நிறையவே உள்ளனர். அவர்கள் பிச்சை கேட்டுத் திரிகிறார்கள். இந்தப் பிள்ளைகளின், இந் நிலைமைக்கு காரணம் பெற்றோரின் கல்வியறிவு அற்ற தன்மையே. கற்பது என்பது மிகவும் பெறுமதியானது. ஒரு நாட்டின் பிரஜைகளின் கல்வியறிவே அந்நாட்டின் அபிவிருத்திக்கு ஊன்றுகோலாகிறது. ஆகவே, நன்கு கற்றால் வெற்றி என்ற பூமாலையை அணிந்து கொள்ள முடியும்.

## கற்பக விருட்சம்



முகவரியில்லாத சமூகத்தை
உன் முகவசீகரத்தால்
ஒன்று திரட்டி
உவகையுடன்
உருவாக்கிய
காரியஸ்தன் - நீ!

அரசியல் சாதனைகள்
பல படைத்து
அமைச்சுப் பணிதனை
பக்தியோடு,
இன வேறுபாடின்றி இரக்கத் தோடும்
செய்தவன் - நீ!

வாஞ்சையுடன்
சமூகம் வாழ - நீ!
விதைத்த விருட்சம்,
விழுதுகள் பல விட்டன,
விருட்சத்தின் முட்டாக இருந்தவை
மிதப்பால் உழுத்து வருவதை
அறிவாயா - நீ!

மலை முகட்டோடு
மறைந்தவுன் உரு
மறுபடியும் காணோமா?
என்றழுங்கால்
பதவிக்காய்த்தாவும்
நன்றி கெட்ட பாதகர்களின்
செய்வினை கண்டாயா? - நீ!

பெருமரம்
கட்சியின் சின்னமாம்
பெருமகிழ்வுடன்
ஆட்சியில் பங்கு
பெரு விருட்சக்கிளைகளில்
கொழுத்த
கொழும்புக்காகம் பல
கரையோரக் காகம்சில
இதை அறிவாயா? - நீ!

சே.... எனும் தனிச் சமூக
கருமுகிலால்
சோ.... எனப்பெய்யும்
அமில மழை
கருகிக் கொண்டிருக்கும்
(கற்பக) விருட்சக்கிளைகள்
கலங்கும் போராளிகளின்
விழிகள் காண
வருவாயா - நீ!

ஒற்றுமையாய்
இருங்களென
ஓங்கி அறைகூவி

கண்டாய் பல சாதனைகள்
உன்
மறைவால்
கெட்டுக்குட்டிச் சுவரானது
விருட்சத்தின் தனித்துவம்
வியாபித்தது தன்னலம்
அறிவாயா? - நீ!

மக்களுக்காய் வாழ்ந்தாய்
பணிவோடு பணி செய்தாய்
சொற்களால்
வீரமூட்டினாய்
எல்லோரும்
சேர்ந்தே வாழ்வோமென
அரவணைத்து
அன்பு காட்டினாய் - நீ!

அன்னியன் கண்பட்டதோ!
அன்புடன் வாழ்ந்த
குடும்பம்
சிதறிச் சீரழிந்தது போல்
சின்னாபின்னமானது - நீ
உருவாக்கிய
ஒற்றுமை,
மீண்டும்
சீர் செய்யப்
பிறப்பாயா? - நீ

மருதமுனை ஹாஜிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கிராமத்தை விரட்டிய ஆடு

சின்னத்தம்பி அப்படிச் சொல்வானென்று யாரும் எதிர்பார்த்திருக்கவில்லை. யாராலுமே ஜீரணித்துக் கொள்ள முடியாதபடி, சின்னத்தம்பியின் வார்த்தைகள் ஓய்ந்திருந்தன. அந்த ஒற்றைக் கிராமத்துக்குள் ஏககாலத்துக்கும் ஒன்றாகவே மக்கள் கூடி மகிழ்ந்த மண்ணில் இப்படியொரு அவலத்தை நிகழ்த்த சின்னத்தம்பிக்கு எப்படி மனது வந்தது? கிராமப்பரிபாலனம் மீராசாய்வும் யோசித்தபடி நின்றிருந்தார்.

"யோசிக்கிறதுக்கு இதுல ஒண்டுமில்ல... இதுபெரிய இடத்து ஓடரு. உடன எல்லாரும் ஊரவுட்டுப் பெய்த்திடனும்..."

சின்னத் தம்பி சிறவல் வீதியில் கம்பீரமாகக் கால்பதித்து நின்றிருந்தான். தோளில் துப்பாக்கியும், கழுத்தில் சயனைட்டுமாய் அவனைச் சூழ்ந்தபடி சகாக்கள் நின்றிருந்தனர்.

தலைவர் மீராசாய்வுக்கு சின்னத்தம்பியின் பேச்சுக்கள் ஏமாற்றத்தையளித்தன. சின்னத்தம்பி ஏரியாப் பொறுப்பாளனாகவிருந்தாலும், அதே மண்ணில் பிறந்து, வளர்ந்து ஆளாகியவன் என்ற வகையில் எல்லோருக்கும் அவனோடு ஒரு பரகசியமான பிணைப்பு இருந்தது. இன்று சின்னத்தம்பி அந்தப் பிணைப்புகளை எல்லாம் தகர்த்தெறியும் தீர்மானத்தோடு வந்தவனைப் போல பேசிக் கொண்டிருக்கிறான்.

"சின்னத்தம்பியண்ண, நாமெல்லாரும் ஒண்டாத் திண்டு குடிச்ச ஆக்களண்ண... ஆதங்குட்டி மெதுவாகத்தான் கூறினான்."

"பொத்துடா சோனி நாயே... கொள்ளையா விசருக் கதகதைக்காம ஒழும்பிட்டு ஓடுங்கடா..." தோளில் கிடந்த துப்பாக்கியை ஒருகணம் சின்னத்தம்பியின் கைகள் கடுமையாகப் பற்றிக் கொண்டன.

மீராசாய்வால் சின்னத்தம்பியைப் புரிந்து கொள்ள முடியவில்லை. சின்னத்தம்பியின் சின்னப்பருவ வரலாறு மீராசாய்வுக்கு நல்ல மனப்பாடம். அவனது அப்பாவை இந்திய இராணுவம் சுட்டுக் கொண்டிருந்த நாட்களின் பின்னிருந்து - சின்னத்தம்பி முஸ்லிம்களோடு ஐக்கியமாகியிருந்தான். இன்று என்னவெனில், நிலைமை முற்றிலும் மாறிவிட்டது. "காபிரின் உறவு கரண்டிக்காலுக்குக் கீழ்" என்ற முஸ்லிம் முதுமொழி மீராசாய்வுக்குள் அதிர்வுகளை உசுத்தது.

"சின்னத்தம்பி, நாங்க ஏண்டா மனெ எழும்பிப் போகனும்...?"

மீராசாய்வு இப்போது ஒரு சிறு பிள்ளையாக மாறியிருந்தார். கருத்து நீண்டிருந்த அவரின் உடல்வாகு கூனிக்குறுகியிருந்தது. அவரின் தீட்சண்ய விழிகளிலிருந்து நீர்த்திவலைகள் எகிறப் பார்த்தன.

பாலை நகர் ஜிஃப்ரி



"அது காக்கா, உங்கட ஆக்கள் எங்கட ஆடொண்ட களவெடுத்து வித்திருக்கானுகள்.... எங்களுக்கு ஆக்களையும் தெரியும்..."

"ஒரு ஆடுதானடா மனே... ஆக்களும் தெரியுமெண்டா புடிச்சி விசாரிச்சி காசவாங்குங்களம்..." மீராசாய்வு வினயமாகக் கேட்டுக் கொண்டிருந்தார்.

சின்னத்தம்பியின் பதில் கூட்டத்தில் நின்றிருந்த முஅத்தினாருக்கு ஆத்திரத்தை மூட்டியது. எதிர்த்துப் பேசுவதற்கென்று அவரிடம் நிறைய விசயங்களும் வார்த்தைகளுமிருந்தன. மாற்றுக் கருத்துக்களை மருந்துக்கும் மதிக்காதவர்களிடம் இதுவெல்லாம் எடுபடாது என்ற உணர்வு எழுந்திருக்க வேண்டும். பேசாமலேயே நின்று விட்டார். இருந்த போதும், போன மாதம் அவரின் பத்து ஆடுகளையும், ஒரு சைக்கிளையும் வந்து அவர்கள் பறித்துக் கொண்டு போனது இப்போது அவருக்கு நினைவுக்கு வந்து பெரும் சிரமத்தைக் கொடுத்தது.

"சின்னத்தம்பி இப்ப இருட்டுப்பட்டுட்டுது. சத்தியமா நாங்க நாளைக்கு விடிய பெயித்திர்ரம். ஆண்டவனுக்காக ராவைக்கு மட்டும் எங்கள இஞ்ச இரிக்கவுடு...." தங்களின் பூர்வீக மண்ணில் ஓர் இரவைக் கழிப்பதற்கு சின்னத் தம்பியிடம் மன்றாடியது மீராசாய்வுக்கு அவமானமாகத்தானிருந்தது. இந்த அவமானங்களும், அவலங்களும் நமக்கென்ன புதுசா? என்பது போல, மீராசாய்வு நகர்ந்துவிட்டார்.

"வாப்பா, பொடியமாரு வந்து எல்லாரையும் எழும்பிட்டுப் போகட்டாமெண்டு சொல்லிட்டுப் போறானுகள் வாப்பா..." சவுறுவான் குடிசைக்குள் திராணியற்றுக் கிடந்த உசன்வட்ட விதானையிடம் கெக்கரித்துக் கொண்டு நுழைந்தாள்.
உசன்வட்ட விதானைக்கு உடல் முழுக்க வலியெடுத்தது. மகளின் வார்த்தைகளை அவரால் ஜீரணிக்க முடியவில்லை. சூம்பிக் கிடந்த கரங்களை திண்ணையில் குத்தி மெல்ல எழுந்திருக்க எத்தனித்தார்.

"அப்ப நம்மட ஆடெல்லாம் என்ன புள்ள செயற...."

"சும்மா கிடங்க வாப்பா உங்களுக்கொரு ஆடு... நாளைக்குப் போகாட்டி வெட்டிப் போடுவானுகளாம் எல்லாரையும். "

"எண்ட அல்லாவே, காபிர்ர அதாவ பொறுக்க முடியலையடா ரப்பு...." உசன்காக்கா வயிற்றிலும், தலையிலுமாக மாறி மாறி அடித்துக் கொண்டார்.

"சமாதானமெண்டு சொன்னலுவா மனெ... அப்ப ஏன் துரத்திறானுகள்...."

"அது சமாதானம் நமக்கும் அவங்களுக்குமில்லையாம்.... இராணுவத்துக்கும், அவங்களுக்குந்தானாம்...."

"இதென்னடா இழவு காத்த சமாதானம்" உசன் காக்கா வேதனையில் வாய்க்கு வந்தபடியெல்லாம் அரற்றிக் கொண்டிருந்தார். தள்ளாடும் வயதிலும், தமது உழைப்பாலும் வியர்வையாலும் வளர்த்தெடுத்த ஆடுகளும் பயிர்களும் வீணாகப் போகவிருக்கும் சோகத்தில், அவரின் மனம் முழுக்க ஒருவித அரிப்புப் பரவுவதை கடுமையாக உணர்ந்தார்.

"நாம என்ன செஞ்சயாம் அவனுகளுக்கு...?" உசன் காக்கா விடாப் பிடியாகவிருந்தார்.

"நம்மட ஆக்கள் அவங்கட ஆட்டொண்ட களவெடுத்தயாம்..."
உசன்காக்காவுக்கு சிரிப்பை அடக்க முடியவில்லை. சோகத்தையும் மறந்து அவரின் சிரிப்பு வெளிப்பட்டு விட்டது. ஆயினும் அந்தச் சிரிப்பு அதிகம் நீடிக்கவில்லை.

"அப்ப அவனுகள் நம்மட ஆக்கள்ற எத்தின ஆடு மாட்டக் களவெடுத்திருக்கானுகள்.... சைக்கிள, மெஷினெல்லாம் பறிக்கானுகள்... அப்ப இதுக்கெல்லாம் ஒரு நியாயமுமில்லையா... பார்க்கப் போனா அவனுகள நாடுதான் கடத்தனும்..."

உசன் காக்கா தெளிவாகப் பேசிக் கொண்டிருந்தார். ஆயினும் அவரின் பேச்சுக்களும், அதில் தொனித்த நியாயங்களும் அந்தக் குடிசைக்குள்ளேயே அடங்கிவிட்டன.

இப்போது, பாலை நகர்க் கிராமம் முழுக்க அமைதி இழந்து விட்டது. ஓர் இரவுக்குள்ளேயே தங்களின் குடியிருப்புகளையும் அகற்றிவிட வேண்டுமென்ற ஆதுரம் இருந்தாலும், ஒருபுறம் அவைகளை எங்கு கொண்டு போய்ச் சேர்ப்பது என்ற அச்சமும் ஒருசேர அந்தமக்களை அழுத்தியது. குடிசைகளைப் பிரிப்பதும், வண்டில்களில் ஏற்றுவதுமாக கிராமம் முழுக்க கபளீகரம் நிகழ்ந்திற்று.

உசன் காக்கா ஈசிச்சேரில் குந்தி ஆடுகளை மட்டுமே வேதனையோடு பார்த்துக் கொண்டிருந்தார்.

தகவலறிந்த ஆட்டு வியாபாரிகளும் உடன் ஸ்தலத்திற்கு விஜயமாகி இருந்தனர். ஆடுகளைக் குறைந்த விலையில் தட்டிச் செல்வதற்கு அன்று அவர்களுக்கு வாய்ப்பான சூழல் அமைந்திருந்தது. கொள்ளை இலாபத்தில் ஆடுகளை அமுக்கினர்.

"எண்ட ஆட்டுக்குட்டியக் குடுக்கவானா வாப்பா..." முஅத்தினாரின் "கடைக்குட்டி" அடம்பிடித்தழுதான். அவன் செல்லமாய் வளர்த்த ஆட்டுக்குட்டியின் பிரிவு அவனின் கதறலை மேலும் அதிகப்படுத்திற்று.

"இந்தக் குழந்தப் புள்ளட முகத்துக்காலும் அவனுகள் அழிஞ்சி போகனும்..." முஅத்தினார் மேலேகைகளை ஆவேசத்துடன் உயர்த்திக் கூறினார்.

இப்போது, மக்களின் துயரங்கள் பெருத்தன. இனிப்படவிருக்கும் அகதி வாழ்க்கையின் அவஸ்த்தைகள் அவர்களின் முன்னால் விசுவரூபமெடுக்கத் தொடங்கிற்று. வைகறைப் பனி காட்டுப் புகையென ஊரை அடர்ந்திருந்தது.

வண்டில்கள் தயாராகிவிட்டன. எங்கே போவது? என்ற கேள்விக்குறி அனைவரின் முகத்திலும் மெல்லத் தலைநீட்டியது. அடக்கு முறையும், அதிகாரமும் இருக்கும் மட்டும் இந்த திசையற்ற பயணங்களும் இருந்து கொண்டே இருக்கும் என்பதை அந்த ஒட்டுமொத்தக் கிராமம் ஏக கணத்தில் உணர்ந்தது.

இப்போது, இன்னொரு அகதி வாழ்வின்

## சிறுகதை

அவஸ்த்தைகள் அவர்களின் முன்னால் சடாரென விரிந்திற்று. போரின் நாட்களில் அவர்களால் அனுபவிக்க நிர்ப்பந்திக்கப்பட்ட அதே வலியை இந்த அமைதியின் நாட்களிலும் துரதிஸ்டவசமாக அனுபவிக்க வேண்டியதாயிற்று.

அவர்களைச் சூழவும் வசித்திருந்த தமிழ் முகங்கள் இப்போது அவர்களை முழுமையாகச் சூழ்ந்து கொண்டன. அனைத்து முகங்களும் "உம்"மென்றிருந்தன. யாரும் யாருடனும் பேச முடியவில்லை. பேசவும் அவர்கள் முயலவில்லை.

துப்பாக்கிகளைச் சுமந்து நிற்கும் போராளிகள் இவர்களின் பிரிகோடாக குறுக்கே நின்றிருந்தனர்.

இப்போது வண்டில்கள் வரிசைக்கிரமமாக வாழைச்சேனை நோக்கி நகரத் தொடங்கி விட்டன. வண்டில்களை இழுத்துச் செல்லும் காளைகளின் கால்களிலும் திணவுகுன்றி உற்சாகமற்ற நடை. தளர்வு ஆயினும் அந்தத் தர்பாரில் போராளிகளையும் மீறி அந்த மக்களிடமிருந்து இவர்களால் விடை பெற முடியவில்லையே. காலாகாலத்துக்கும் ஒன்றாகக் கூடி வாழ்ந்திருந்த மக்களிடம் "போகிறோம்" என்ற ஒருவார்த்தையேனும் பகரக்கிடைக்காமல் போய்விட்ட சுதந்திரம் பற்றிய கவலையே அக்கணத்தில் அனைத்து வண்டில்களையும் ஆட்கொண்டிருந்தது.

ஒரு கணநேர நடைக்குப் பிறகு கிராமம் அவர்களுக்கு, இப்போது தூரத்தே ஒரு சிறு புள்ளியாகத் தெரிகிறது. வைகறைப் பனி முழுமையாகத் திரை விலகாத அந்த மெல்லிய பொழுதில் ஊரத் தொழவாரம் வழியாக போராளிகளும் மங்கலாகத் தெரிந்து கொண்டிருந்தனர்.

# வாரமொரு உரைகல் - மருதூர் மெய்யொளி

## பொருள், பதவி வெறிகளினால் வெற்றி இல்லை!

*"இறைவன் உங்களில் சிலருக்கு சிலரைவிட எதனைக் கொண்டு சிறப்பளித்திருக்கிறானோ அதனை அடைய சிலர் பேராசை கொள்கிறார்கள்..." (குர்ஆன் 4:32)*

மனிதனைப் பொறுத்தவரை ஆசை என்பது இயல்பான பண்பு. வேட்கை இல்லாத மனிதனே உலகில் இல்லை என்பதே உண்மை. ஆனால் ஆசை எனும் வாகனம் பேராசை எனும்வழியில் பயணிக்க ஆரம்பிக்கும் போதுதான் கேடுகள் வந்தடைகின்றன.

ஆசைகளை துறக்க வேண்டும் என்ற பண்பு நமக்கு அவசியமில்லை. அதனை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் கடிவாளம் இட்டு பூட்டி வைக்கும் பக்குவத்தைப் பெற்றிருக்க வேண்டும் என்பதே இஸ்லாத்தின் எதிர்பார்ப்பாகும். ஆனால், எம்மிற்பலர் பொருள் சேர்ப்பதிலும், அதிகாரப் பதவிகளை அடைந்து கொள்வதிலும் அதிகரித்த மனோவிச்சைக்குள் உட்பட்டுக் கொள்பவர்களாகவே காணப்படுகின்றனர். இந்நிலையானது நமது ஈருலக வாழ்விலும் மோட்சத்தை தருவதற்குப் பதிலாக கைசேதத்தையே தரவல்லதாகும்.

போதும் என்ற மனோ நிலையினை ஏற்படுத்திக் கொண்டவர்களே பேராசைத் தீயில் வெந்து மடிவதிலிருந்து விடுபட்டு உயர் வாழ்வில் பங்கு பெறுவதோடு, இல்லார்க்கு உதவும் பக்குவத்தில் தன்னை இணைத்துக் கொண்டும், அடுத்தவர் வாழ்வு சிறப்புற்று விளங்க வழிசமைப்பவராகவும் திகழமுடியும். இதனாற்தான் நபியுல்லாஹ் (ஸல்) அவர்கள் இப்படிச் சுட்டிக்காட்டினார்கள்.

*"இருப்பதைக் கொண்டு திருப்திகொள். அதுவே என்றும் அழியாத செல்வமாகும்" (ஆதாரம்: தப்ரானி)*

போதுமென்ற பண்பினை நமது பக்குவமாகக் கொள்ளப்படல் வேண்டும் எனும்போது அது நமது வளர்ச்சி, முன்னேற்றம் போன்றவற்றுக்குத் தடையாக அமைந்துவிடும் என்று புரிந்துகொள்ளலாகாது. மாறாக எதையும் விருப்போடு ஏற்கும் மனோ இயல்பையே அது குறித்துரைப்பதாக பொருள் கொள்ளல் வேண்டும்.

பொருள்வெறி நம்மீது ஆதிக்கம் செலுத்துவதற்கு முக்கிய காரணிகள் ஒன்று நமது நிலையினை பிறரோடு ஒப்பிட்டுப் பார்ப்பது. அண்டை வீட்டினரோடு, உறவினரோடு, அலுவலகத்தில் பணிபுரிபவரோடு நேர்நோக்கி தாழ்வு மனப்பான்மைக்கு உட்பட்டும், மறு புறம் எப்படியேனும் பொருளைப் பெருக்கிட வேண்டும், தானும், தன் வீட்டினர் மட்டும் அனுபவிக்க சேகரித்திட வேண்டும் என்கின்ற எண்ணம் பொருள் வெறி உணர்விற்குள் தள்ளிவிடுகின்றது.

இதனைத் தவிர்ப்பதற்காகவே தன்னிலும் வசதி குறைந்தவர்களை நோக்கி, அவர்களைப் பார்க்கிலும் நமக்கு இவ்வசதிகள் உள்ளன என திருப்தியுற வேண்டும். அவ்வாறான தன்மையே அமைதிக்கும், இறை நெருக்கத்திற்கும் வசதிவகுக்கத்தக்கது. இதனை பின்வரும் நபிமொழி நமக்கு தெளிவூட்டுகின்றன.

*"இறைநெறியைப் பின்பற்றுவதில் தன்னைவிட மேலான வரைப் பார்த்தல், உலக வழிகளைப் பொறுத்தவரையில் தன்னை விட கீழானவரைப்பார்த்து இறைவனுக்கு நன்றி செலுத்துதல்" (ஆதாரம் : திர்மிதி)*

பொருள் வெறியில் எப்படி அகப்பட்டு அவதியுறுகின்றோமோ அதற்கு சற்றும் குறைவின்றி அதிகாரம் பதவிகளின் மீது ஆர்வத்தினையும், பேராசையையும் அகல விரித்து அதனை எந்த வழியிலும் அடைந்து விட வேண்டும் என்கிற உணர்விற்குள் இறுகி, வேண்டத்தகாத முறைகேட்டினால் கூட அதிகாரப் பதவிகளை அடைந்து கொள்ளத் துணிகின்றோம்.

பொய், ஏமாற்று, மோசடி, நயவஞ்சகம், ஊழல், கொடுமை, அநீதி போன்ற அனைத்து தீமைகள் மூலமும் அதிகார பதவியை அடைந்துகொள்ள எத்தனிக்கின்றோம். இத்தகைய உணர்வினாலும், உணர்ச்சியினாலும் அடைந்து கொள்கின்ற பதவிகள் மூலம் தானும் அமைதியிழந்து, தமது சமூகத்தையும் அமைதியிழக்கவே வழிவிடுகின்றது.

உண்மையில் பதவிகள் என்பது அதனைத் தேடி அலைபவர்களிடம் அகப்பட்டுவிட்டால் அதன் மூலம் மக்களின் நல்வாழ்வு சீரழிக்கப்பட்டு விடும். மாறாக பதவியைத் தேடாத நிலையில் கிடைத்துவிடும்போது அதனால் அவனும், சமூகமும் உயர்ச்சி பெற்றுவிட வழிகோரும். உண்மையில் மனித இனத்திற்கு சேவை செய்ய பதவி ஒரு மகத்தான ஊன்றுகோலாகும். இறைதூதர்களில் சிலர் ஆட்சியாளர்களாகவும் பணிபுரிந்திருக்கின்றனர். ஆட்சி புரிவதும் ஓர் அறம் என்பதே இஸ்லாத்தின் கருத்து. பொருள் வெறியும், பதவி மோகமும் ஒருவனது ஒழுக்கத்தையும், நற்செயல்களையும் சீரிய பண்பாடுகளையும் அழித்து விடும். இதன் அகோரத்தன்மையினை பின்வரும் நபிமொழி தெளிவூட்டுகின்றது.

*"பசியுள்ள இரண்டு ஓநாய்களை ஆட்டுமந்தையில் விட்டுவிடின் அவை (அந்த ஆட்டுமந்தையில்) எத்தனைக் குழப்பத்தை உண்டு பண்ணிவிடுமோ அத்தனை குழப்பத்தை ஒரு மனிதனுடைய பொருளாசையும், பதவி மோகமும் அவனுடைய மார்க்கத்திற்கு (நற்செயல்களுக்கு) உண்டு பண்ணிவிடும்." (ஆதாரம்: திர்மிதி)*

ஆகவே, பொருள், பதவி ஆகிய இரண்டு விடயங்களிலும் நாம் மிகவும் நிதானமான மனோநிலையினைப் பேண வேண்டும். அதுவே ஈருலக உயர்வுக்கும் மன அமைதிக்கும் துணையாக அமையும்.

## மருந்தகம்

### ஆரோக்கியமாக வாழ்வதற்கு சில ஆலோசனைகள்

- நேரகாலத்தோடு தூக்கத்தை விட்டு எழும்புதல்.
- குளிர்ந்த நீரை (குளிரூட்டப்படாத) காலை எழுந்ததும் வெறும் வயிற்றில் அருந்துதல்.
- கிரமமாக மலங்கழித்தல்.
- மலப்பிரச்சினை உள்ளவர்கள் நாளாந்தம் அதிக நீர் அருந்துதல். நார்ச்சத்துள்ள மரக்கறி, இலைக்கறி போன்றவற்றை நாளாந்த உணவோடு சேர்த்தல்.



- மாமிச உணவுகளை (ஆடு, மாடு, கோழி) ஐஸ் கிறீம், வெண்ணெய், உப்பு, இனிப்பு போன்றவற்றை குறைத்துக் கொள்ளல். மாமிச உணவுகள், வெண்ணெய், ஐஸ் கிறீம் என்பன உடல் எடையை அதிகரிக்கச் செய்யவல்லன. அதேபோல உப்பு இரத்த அழுத்தத்தையும் கூடுதலான இனிப்பு நீரழிவு நோயினையும் உருவாக்க வல்லன.
- வயிறு முட்டச் சாப்பிடாது இலேசாக இருக்கும் படியாக பார்த்துக் கொள்ளல்.
- இயற்கை உணவு வகைகளையே அதிகமாகத் தெரிவு செய்தல்.
- மாலை நேரங்களில் உடற்பயிற்சிகளில் ஈடுபடல், பின்னர் குளிர்ந்த நீரால் உடல் முழுவதையும் கழுவுதல்.
- பெரிய இன மீன் வகைகளைக் குறைத்து சிறிய ரக மீன்களை அதிகமாகத் தெரிவு செய்தல். காரணம் அவற்றிலேயே கனியுப்புகள் அதிகம்.
- கொதித்தாறிய நீரை எப்போதும் அருந்துவதோடு, போதியளவு நீரை அருந்துதல் வேண்டும். இதனால் சிறு நீர் இலகுவாக வெளியேறுவதோடு, அநேகமான உடல் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு நீர் ஒரு சிறந்த நிவாரணி.
- மென்மையான பற்தூரிகைகளைக் கொண்டு பல் துலக்கல், குறிப்பாக ஒரு நாளைக்கு இரண்டு வேளைகள் பல் துலக்குவது சிறந்த பயனைத்தரும்.
- கோபம், மன உளைச்சல், சோம்பல் போன்றவைகளிலிருந்து விடுபடல்.
- மேற்சொன்னவைகள் மனிதனை சிறுகச் சிறுக ஆரோக்கியமுள்ளவர்களாக மாற்றவல்லன.

-முஹம்மட் இய்தி.

## நம்ரூதின் கொசுக்கள்

எல்லாக்கிளைகளும் ஒடிந்து விட்டன
இலைகளுதிர்ந்த அறுதலி மரத்தின்
அபயக்குரல்
கல்பில் கரைகிறது.

மூதூரின் முதுகெலும்பை
பேய்கள் தின்றன.
வாழையூரிலும் பிசாசுகளின் தர்பார்.
எழுவான் நெடுகவும்
ஜனாஸாக்களின் கதறல்.

மரங்களோவெனில்
செவிகளை இறுகப்பொத்தியபடி
சிம்மாசனத்தில் துயின்றன.

அவர்களின் காகித அறிக்கைகளில்
உமரின் வாளிருந்தது
வலீதின் வில்லுமிருந்தது.
என்ன செய்ய
நைல் நதியில் மூழ்கிற்றெம்
அமீர்களின் குரல்கள்.

இனி
வேர்களிலிருந்து
விதைகள் வெடிக்கும்.
நிழல் முகிழா மரங்களை விஞ்சி
தளிர்கள் துளிர்க்கும்.

மூஸாவின் தடியை
சுமந்தபடி
பிர்அவ்ன்களை மூழ்கடிக்க
நதி பிளக்கும்.

அமீர்களுக்கு இனி நாம்
நம்ரூதின் மூளையைக்குடைந்த
கொசுக்களாவது திண்ணம்.
இன்ஷா அல்லாஹ்.

ஓட்டமாவடி - அறபாத்.
12-09-2002.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரங்கு பாஞ்சான் முஸ்லிம்களின் பூமி நமது அரசியல் தலைமைகளே இவ் உண்மையை நீங்கள் பேசமாட்டீர்களா?

அதிக சர்ச்சைக்குள்ளானதாகவுள்ள குரங்குபாஞ்சான் பூமி விடயம் இருதரப்பினருக்குமிடையிலான உரிமைக்குரலாக மாறியிருக்கிறது. ஆனால் இப்பூமி முஸ்லிம்களுடையது என்பது அண்மைக்காலமாக பரவலாக நிரூபிக்கப்பட்டுவரும் உண்மையாக உள்ளது. ஆனால், இந்த விடயத்தில் சிங்கள உறுமய காட்டும் அக்கறையைக்கூட நமது முஸ்லிம் அரசியல் தலைமைகள் காட்டவில்லை. கிண்ணியா முஸ்லிம்கள் இவ்விடயத்தில் கொதித்துப் போயுள்ளனர்.

## மஜீட் புரத்தில் இருந்து தமிழ் செல்வனுக்கு திறந்த மடல்.

திரு. தமிழ்ச்செல்வன் அவர்களுக்கு,

கடந்த 27.09.2003 அன்று சக்தி எவ்.எம். இல் ஒலிபரப்பான எரிமலை என்ற நிகழ்ச்சியில் நீங்கள் வழங்கிய பேட்டி தொடர்பாக சில விடயங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன். அப்பேட்டியில் நான் பிறந்து வளர்ந்து வாழ்ந்த மஜீட் நகரத்தை (குரங்குபாஞ்சான்) 'புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம்' எனக் கூறினீர்கள். தமிழ்ச்செல்வன் அவர்களே அது உங்கள் பிரதேசமல்ல. முஸ்லிம்களாகிய எங்களின் பிரதேசம். ஏனெனில்,

- (குரங்குபாஞ்சான்) மஜீட் புரத்தில் 1947ஆம் ஆண்டு முதல் (அரை நூற்றாண்டாக) முஸ்லிம்கள் வாழ்ந்து வருகின்றனர்.

- 1970ல் பரகத் நகர் முஸ்லிம் வித்தியாலயம் தோற்றுவிக்கப்பட்டது. நீங்கள் வெளியேற்றியதைத் தொடர்ந்து கிண்ணியா அண்ணல் வீதி என்ற முகவரியில் இப்பாடசாலை இன்றும் இயங்குகிறது.

- 1972இல் முன்னாள் மூதூர் முதல்வர் ஏ.எல். அப்துல் மஜீட் இப்பிரதேசத்தைப் புனரமைத்தார். இதனால் இது மஜீட் புரம் எனப்பெயர் பெற்றது.

- மஜீட் புரத்தின் அனைத்து காணியினது உறுதிகளும் எமது மக்களிடம் உள்ளன.

- 1990இல் யாழ்ப்பாணப் பாணியில் (முஸ்லிம்கள் என்பதற்காக) நாங்கள் உங்களால் மஜீட் புரத்தில் இருந்து வெளியேற்றப்பட்டோம். இதற்காக இன்னும் நிவாரணம் பெற்று வாழும் 220. குடும்பங்களுள் எனது குடும்பமும் ஒன்று.



- விவசாயத் தேவைக்காக எமது பாரம்பரிய பூமிக்குச் சென்ற போது உங்களது புலி உறுப்பினர்கள் எம்மை தடுத்து நிறுத்தினர். வீதிப்புனரமைப்புக்காக தருவிக்கப்பட்ட கொங்கிரீட் குழாய்களை டெக்டரில் ஏற்றுமாறு கேட்டபோது (துப்பாக்கியை நீட்டியதால்) டெக்டரில் ஏற்றி இறக்கியவர்களுள் நானுமொருவன்.

அங்கு கண்ட காட்சிகள் எல்லாம் என் கண்முன்னே இன்றும் நிற்கின்றன. அல்லாஹ்வைத் தொழும் ஜும்மாப்பள்ளியை முகாமாக்கியுள்ளீர்கள். மத அனுஷ்டானத்துக்குப் பயன்படுத்தும் நீர்த்தடாகத்தில் (ஹவுல்) உங்கள் புலிகள் நீச்சலடிக்கிறார்கள். என் கண்கள் குளமாகின்றன. தமிழ்ச்செல்வன் அவர்களே இது நியாயமா? எமது மத உணர்வுகளை உங்கள் பாதத்தின்கீழ் போட்டு மிதிக்கலாமா? தர்மமாகுமா?

<u>பள்ளிவாசலைச் சூழ மரங்களைப் பிடுங்கிவந்து நடுகிறீர்கள். பழைமை வாய்ந்ததைபோல காட்சி தரக்கூடியதாக (பிணம் இல்லாமலே) பல கல்லறைகளை உருவாக்குகிறீர்கள். உங்களது இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கைக்கும், புத்தர் சிலையை அடுத்தவரின் காணிக்குள் புதைத்துவிட்டு பின் பொலிசாரோடு வந்து தோண்டி எடுத்து அது தங்களது பூமி என்று கதை சொல்லும் குழந்தைத் தனத்திற்கும் ஏதும் வித்தியாசம் இருக்கிறது என நினைக்கிறீர்களா?</u>

1990ல் உங்களால் வெளியேற்றப்பட்ட நாங்கள், சமாதான உடன்படிக்கை கைச்சாத்தானதன் பின்பு எங்கள் காணிகளில் பயிரிட்டோம். விளைந்து வந்தபோது எங்கள் பிரதேசத்தில் முகாமமைத்து அறுவடையைத் தடுக்கிறீர்கள். அதேநேரம் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் பறித்தெடுத்த முஸ்லிம்களின் காணிகளை முஸ்லிம்களிடமே ஒப்படைப்பதாகக் கூறுகிறீர்கள். அதேவேளை திருமலை மாவட்டத்தில் எமது மஜீட் புரத்தை ஆக்கிரமிக்கிறீர்கள். அதனால்தான் அம்பாரை மட்டக்களப்பு காணி கையளிப்பையும் சந்தேகத்துடன் நோக்கத் தோன்றுகிறது. ஏனெனில், <u>எத்தனையோ வாக்குறுதிகளையும், உடன்படிக்கைகளையும் சர்வசாதாரணமாக அர்த்தமில்லாமலாக்கிய நீங்கள், இன்று காணியை தருவதாகக் கூறுகிற நீங்கள் நாளையே பறிக்கலாம். இப்படியான பாடங்களைப் பலமுறை முஸ்லிம்களுக்குப் படிப்பித்திருக்கிறீர்கள்.</u>

அப்பேட்டியில் ரங்கா என்பவரின் முஸ்லிம்கள் பற்றிய வழமையான சம்பிரதாயக் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் "தற்காலிகமாக இணைக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்கள் முஸ்லிம்களினதும் தாயகமாகும். அங்கு உருவாகப்போகும் புலிகளின் இடைக்கால நிருவாகத்தினுள் முஸ்லிம்களின் பாதுகாப்பு, தனித்துவம் என்பன உறுதிப்படுத்தப்படும். ஏனெனில் அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களின் மன உணர்வு எப்படிப்பட்டது என்பதை நாம் அறிவோம்" என்று கூறினீர்கள். இந்தப் பதிலுக்காக நான் எனது மனமார்ந்த நன்றிகளைத் தங்களுக்குத் தெரிவிக்கின்றேன். ஏனெனில், புலிகளால் முஸ்லிம்கள் அடக்கப்படுகிறார்கள், ஒடுக்கப்படுகிறார்கள் என்பதைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளராகிய நீங்கள் ஒரு ஊடகத்தின் (சக்தி டி.வி. - மின்னல் 28.09.2003, சக்தி எவ்.எம் - எரிமலை 27.09.2003) ஊடாக பகிரங்கமாக ஒப்புக் கொண்டமைக்காக மீண்டுமொருமுறை எனது நன்றிகளைக் கூறிக் கொள்கின்றேன்.

இவ்வாறு முஸ்லிம்களுக்கு புலிகளால் இழைக்கப்பட்ட கொடுமைகளை ஊடகத்தின் ஊடாக பகிரங்கமாக ஒப்புக்கொண்ட நீங்கள் கடந்த மாதம் கிழக்கு மாகாணத்துக்கு விஜயம் செய்தீர்கள். அப்போது மஜீட் புரத்தை (குரங்குபாஞ்சான்)ப் போய்ப்பார்க்காமலே "நான் பார்க்கத் தேவையில்லை. அது எமது பிரதேசம் தான்" என முழுப்பூசணிக்காயை சோற்றில் மறைக்கப் பார்க்கின்றீர்களே!

இவ்வாறு முன்னுக்குப்பின் முரணாகக் கருத்து வெளியிட முற்படும் நீங்கள் அரசுக்கும், புலிகளுக்கும் இடையிலான சமாதான ஒப்பந்தத்தை மீண்டுமொருமுறை படித்துப் பாருங்கள் அதிலே 'சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தாகி 2002.02.22 முதல் 21.03.2002 வரையிலான 30 நாட்களுக்குள் நிறைவேற்ற வேண்டிய முக்கிய பிரிவுகளுள் 6.1 பிரிவின்படி இருதரப்பும் தங்களுடைய முகாம்கள் அமைந்துள்ள பகுதிகள் குறித்து இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு (SLMM) தெரிவிக்க வேண்டும்' எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒப்பந்தம் இவ்வாறு கூறும் போது, எமது மஜீட் புரத்தில் இருந்து எம்மை வெளியேற்றிவிட்டு எம் பள்ளிவாசலினுள்ளே முகாமமைத்துள்ளீர்கள். இதனை தேசிய, சர்வதேசிய மட்டம் வரை முஸ்லிம்கள் கொண்டு சென்றபோது புலிகளால் தம் முகாம்கள் பற்றி அறிக்கையிட்டு போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு வழங்கப்பட்ட அறிக்கையிலே மேற்படி மஜீட்புர (குரங்குபாஞ்சான்) முகாம் இல்லை என்பதை அறிந்த கண்காணிப்புக் குழு, உங்களால் புதிதாக முஸ்லிம்களின் பள்ளிவாயிலில் அமைக்கப்பட்ட முகாமை நேரிலும் சென்று பார்வையிட்டனர். இதன்பின் சமாதான ஒப்பந்தத்தை உடைத்தெறியும் பாங்கில் அமைக்கப்பட்டிருக்கும் மஜீட்புர (குரங்குபாஞ்சான்) முகாமை 2003.08.06ஆம் திகதிக்கு முன்னர் புலிகள் அகற்றி விட வேண்டும் என போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு அறிவித்தது. ஆனால் இற்றை (இக்கடிதம் அச்சேறும்) வரையில் புலிகள் (தம்மால் ஏற்படுத்தப்பட்ட சமாதான ஒப்பந்தத்தை மதிக்கும் முகமாக) அம்முகாமை அகற்றவில்லை.

விதித்தகாலக்கெடுவுக்குள் புலிகள் முகாமை அகற்றாததினால் விசனமுற்ற கண்காணிப்புக்குழுத் தலைவர் பி.பி.சிக்கு வழங்கிய பேட்டியில் 'புலிகள் சமாதான ஒப்பந்தத்தை உருவாக்கினார்கள். எம்மைக் கண்காணிக்கச் சொன்னார்கள். நாம் எமது கண்காணிப்புக் கடமையை மேற்கொண்டு, மேற்கொள்ளும் நடவடிக்கையை புலிகள் மதிக்கவில்லை. இவ்வாறிருக்கையில் இனிமேலும் எமது பணியை நாம் தொடரத்தான் வேண்டுமா' எனக் கூறினார்.

உண்மையில் மேற்படி முகாம் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள முகாமென்றால், கண்காணிப்புக்குழு தம் கூற்றை வாபஸ் பெற்றிருக்க வேண்டும். ஆனால் அவர்கள் வாபஸ் பெறவில்லை. மேலும் புலிகளின் அட்டூழியங்களை மூடி மறைக்கப் படாதபாடுபடும் அமைச்சர் பீரிஸ் 'திருமலை மாவட்டத்தில் புலிகள் குரங்குபாஞ்சான் முகாமைத் தவிர வேறு முகாம்களை அமைக்கவில்லை என்கிறார்.

கண்காணிப்புக் குழுவின் கூற்றும் உங்கள் பீரிஸின் கூற்றும் பிழை. அது முஸ்லிம்களின் பிரதேசமல்ல சமாதான ஒப்பந்தத்தின் 30 நாட்பிரிவில் 6.1 உபபிரிவின் பிரகாரம் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேச முகாம்தான் அது என்றால், அதனை நிரூபிப்பீர்களா? மாறாக நீங்கள் செய்வதென்ன? மீண்டும் மீண்டும் புதிய முகாம்களை அமைப்பதிலும் முஸ்லிம்களின் காணிகளை ஆக்கிரமிப்பதிலும் கவனஞ் செலுத்துகிறீர்கள். சிங்களக் குடியேற்றங்களை எதிர்த்துக்கொண்டு முஸ்லிம்களின் காணிகளை ஆக்கிரமிக்கிறீர்களே! ஏன் இந்த முரண்பாடு? நாங்கள் முஸ்லிம்கள் என்பதாலா? உங்களது நிருவாகத்தின் கீழ் முஸ்லிம்கள் சுகப்படுவார்கள் என்பது ஆசைவார்த்தைதானே!? உங்களது இத்தகைய போக்கு எலிவளையானாலும் எங்களுக்கு தனிவளை வேண்டும் என்பதை உணர்த்துகிறதல்லவா?

எமது பக்கத்துக் கிராமமான மூதூரின் எல்லைக் கிராமங்களான அரபா நகர், ஜபல் நகர் போன்ற பிரதேசங்களையும் கபளீகரம் செய்கிறீர்களே. அண்மையில் எமது மஜீட் புரத்துக்கு தென்னிலங்கை பத்திரிகையாளர்களை அழைத்துச் சென்று இதுதான் எமது முகாம் என்று வேறு ஒரு இடத்தை காண்பித்துள்ளீர்கள். அவர்களின் கேள்விகளுக்கு திலக் மழுப்பலாக பதிலளித்துள்ளார். ஜும்ஆப் பள்ளியில் இருந்து 50 மீட்டருக்கு அப்பாலில் இருந்து விவசாயஞ் செய்யலாம் என அனுமதியளித்துள்ளீர்கள். அப்படியானால் மஜீட் புரம் எமது பிரதேசம் தான் என்பதை ஏற்றுக் கொள்கிறீர்கள்தானே?

தமிழ் செல்வன் அவர்களே சும்மா இருக்கிற முஸ்லிம்களின் காணிகளை கபளீகரம் செய்வதும் இப்பவரலாம், அப்பவரலாம், விதைக்கலாம், அறுக்கலாம் என்றெல்லாம் ஏன் நாட்டாண்மை புரியப் பிரியப்படுகிறீர்கள். ஒரு வாதத்துக்காகக் கேட்கிறேன். இப்படி ஒரு செயலை முஸ்லிம்கள் செய்தால் உங்களுக்கு எப்படி இருக்கும். சிந்தித்துப் பாருங்கள். இன்று உங்கள் கைகளில் துப்பாக்கி இருக்கிறது என்பதற்காக நீதி, நியாயம், தர்மம் என்பனவற்றை செல்லாக் காசாக்கலாமா? இறைவனென்று ஒருவன் அனைத்தையும் அவதானித்துக் கொண்டு இருக்கிறான் என்பதை நிச்சயம் உங்கள் மனச்சாட்சி ஏற்றுக் கொள்ளும் என்பதை நான் உறுதியாக நம்புகிறேன்.

இவ்வாறு உங்களால் உருவாக்கப்பட்ட சமாதான ஒப்பந்தத்திற்கு முற்றிலும் முரணாக நீங்கள் நடந்து கொள்ளும்போது கண்காணிப்புக் குழுவினர் தடையாய் இருப்பர் என்பதால் 'கண்காணிப்புக் குழுவின் பணிகள் பற்றி பரிசீலித்து புதிய சிபார்சுகள் மேற்கொள்ளப்படும்' என அறிக்கையிட்டீர்கள். இதன்மூலம் விளங்கக்கூடியதென்ன? புலிகள் மேலும் முகாம்களை அமைப்பதுடன் முஸ்லிம்களின் காணிகளை மென்மேலும் விழுங்கி ஏப்பம் விடப்போகின்றனர் என்பதையே. இப்படி எமது காணியை அபகரித்தும், கப்பம் கேட்பதும், கொலை

→ 14

## குரங்குபாஞ்சானும், மணியரசங்குளமும் ஒன்றல்ல

### மணிராசங்குளம் என்ற ஒன்று கிண்ணியாவில் இல்லை.

திருகோணமலை மாவட்டத்தில் கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள குரங்கு பாஞ்சான் குளமும், மணியரசன் குளமும் வெவ்வேறு பகுதிகளில் அமைந்துள்ளன. அதனால் குரங்குபாஞ்சான் பகுதிக்குத் தனியான (மஜீத் நகர்-31) கிராம சேவகர் பிரிவும், மணியரசன் குளப்பகுதிக்குத் தனியான (29) கிராம சேவகர் பிரிவும் வகுக்கப்பட்டுள்ளன. இந்த இரு பிரிவுகளுக்குமிடையில் எல்லைகளாக குரங்கல் (26) ஆயிலியடி (30) ஆகிய கிராம சேவகர் பிரிவுகள் அமைந்துள்ளன. (வரைபடத்தை நோக்கவும்)



குரங்குபாஞ்சான் குளம் (மஜீத் நகர்) மணியரசன்குளத்திலிருந்து சுமார் 4 கிலோ மீற்றர்களுக்கப்பால் அமைந்துள்ளது. பாதை வழியாகச் சென்றால் 9 கி.மீ. தூரமுள்ளது. அத்துடன் மணிராசன்குளம் கிண்ணியா-வானாறு பாதையில் அமைந்துள்ளது. குரங்குபாஞ்சான் குளம் (மஜீத் நகர்) மகாவலி கங்கைக் கிளை நதி நோக்கிச் செல்லும் கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவை எல்லையாகக் கொண்டு கல்லரப்புப் பகுதிக்குச் செல்லும் பாதையில் அமைந்துள்ளது. வரை படத்தை அவதானித்தால் புரியும்.

இந் நிலையில் சில ஊடகங்கள் குரங்குபாஞ்சானை மணிராசன் குளம் எனக் குறிப்பிடுகின்றனர். இவ்வாறு குறிப்பிடுதல் திட்டமிட்ட நோக்கமாக இருக்கலாம். அல்லது உண்மை தெரியாமலும் இருக்கலாம். மணியரசன் குளம் என்பதை மணிராசன் குளம் என மாற்றிக் கூறுவது ஊடகங்களின் திட்டமிட்ட சதி நடவடிக்கை எனக்கருத வேண்டியுள்ளது.

மணி போன்ற இலைகளுடன் அரச மரங்கள் குளத்தைச் சூழ்ந்திருந்தமையாலேயே அக் குளத்தையும், அதனை அண்டிய பிரதேசங்களையும் மணியரசன் குளம் எனப் பெயரிட்டு அழைத்தனர். இப்போதும் குளத்தை அண்டிய பகுதிகளில் அரச மரங்கள் பல காணப்படுகின்றன. இப் பெயர் வந்த உண்மையை இங்கு வாழும் விவசாயிகளின் முதியவர்களிடம் அறியக் கூடியதாகவுள்ளது.

-கிண்ணியா ஞானி-

**தி**ருமலை மாவட்டத்தில் கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவில் 31 கிராம சேவகர்பிரிவுகள் உண்டு. அவற்றுள் குரங்குபாஞ்சான் என அழைக்கப் படும் மஜீத் நகரும் ஒன்று. அப்பகுதியில் குளத்தை அண்டிய பிரதேசத்தில் விடுதலைப் புலிகள் ஒரு முகாமை அமைத்துள்ளனர்.



அந்த முகாம் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அமைக்கப்பட்டுள்ளது என அரசும், கண்காணிப்புக் குழுவினரும் கூறுகின்றனர். அதனாலேயே அம்முகாமை 2003 ஆகஸ்ட் 06ஆம் திகதிக்கு முன்னர் அகற்ற வேண்டும் எனக் காலக்கெடு விதித்தனர். ஆனால், இது வரை-அம்முகாம் அகற்றப்படவில்லை. அதனால் பெரும் சர்ச்சைக்குள்ளாகி இற்றைவரை தீர்வு காணப்படாமலேயே தொடர்கிறது.

இந்நிலையில் கடந்த 2003 ஒக்டோபர் 8ஆம் திகதி-திருமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. என்.எஸ். திலக்கும், கண்காணிப்புக்குழு பிரதித்தலைவர் கேர்ட்ஸ்பரும் ஊடகவியலாளர்களை அங்கு அழைத்துச் சென்றனர். அங்கு சென்ற ஊடகவியலாளர்களிடம் திரு திலக் நடுநிலையாக எழுதுங்கள் எனக் கேட்டுக் கொண்டார்.

அதனைப் பார்வையிட்டுத் திரும்பிய ஊடகவியலாளர் ஒருவர் ரெட்ணா, கடந்த 12.10.2003ஆம் திகதிய வீரகேசரியில் 08ஏ பக்கத்தில் ஒரு பந்தி வரைந்துள்ளார். அதில் பின்வரும் தகவலும் இடம்பெற்றுள்ளது.

"அங்கிருந்த உடைந்த கட்டடம் ஒன்றைக் காட்டி ஊடகவியலாளர் ஒருவர் பள்ளிவாசல் ஒன்றை நீங்கள் ஆக்கிரமித்திருப்பதாகக் கூறப்படுகிறதே " எனக் கேட்டபோது,

"அது பள்ளிவாசல் அல்ல எமது சமயலறை' எனப் பதில் அளித்தார் திலக். ஒரு பகுதி ஊடகவியலாளர்கள் மாவீரர் காப்பகத்தைப் பார்க்கத் திலக்குடன் செல்ல....."

இத்துடன் அவர் தமது பந்தியை வேறு சம்பவத்துடன் தொடர்புபட்டதாக எழுதியுள்ளார். அதனைத் தொடர்ந்து எழுந்த கேள்விகளையும் பள்ளிவாசல் சம்பந்தமான விவரங்களையும் மறைத்து விட்டார்.

## ஊடகவியலாளர்கள் கண்ட குரங்குபாஞ்சான்

ஏன் அந்த ஊடகவியலாளர் உண்மையை மறைத்தார்? திலக் முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக் கும் போது அதை அம்பலப் படுத்த அவர் தயங்கினாரா?

அதே வேளை மற்றொரு ஊடகவியலாளரான சதா சிவம் ஜீவா என்பவர் 12.10. 2003 தினகரனின் 5ஆம் பக்கத்தில் தாமும் குரங்கு பாஞ்சானுக்குச் சென்ற அனுபவத்தை எழுதியுள்ளார்.

"முகாமுக்குச் சற்றுத் தொலைவில் இரு சமாதிகள் அருகருகில் இருந்தன. அவ்வாறே முகாமிற்குப் பக்கத்தில் இடிந்த கட்டடம் இருந்தது. திலக் 'அது எமது குசினியாக (சமயலறை) இருந்தது' என்றார். ஆனால், அங்கு ஒரு குசினிக்கான எந்த அடையாளங்களும் காணப்படவில்லை. அதனுள் ஒரு தாட்சியும், ஒரு பகட்டும் இருந்தது.

அதில் இமாம் ஏறிப் பிரசங்கம் செய்யும் 'மிம்பர்' என்பதும், வுழுச் செய்யும் தடாகமும் காணப்பட்டன. எனவே, அது ஒரு முஸ்லிம் பள்ளியாக இருந்திருக்கிறது. 'பரகத்' முஸ்லிம் பள்ளியாக இருந்திருக்கலாம். ஏனெனில் இரு நூறு முன்னூறு யார் தூரத்துக்கப்பால் பறகத் நகர் முஸ்லிம் வித்தியாலயம் இருந்ததற்கான அடையாளமாக பற்றைகள் மூடிய இடிந்த கட்டடத்தைக் கண்டோம். அதிலுள்ள மேற்படிப் பாடசாலையின் பெயர் துப்பாக்கிச் சூட்டின் மூலம் சிதைக்கப்பட்டிருந்தது.

குரங்குபாஞ்சான் பகுதியில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான காணிகள் இருந்தன என்பதைப் புலிகள் ஏற்றுக் கொள்கிறார்கள். ஆனால், யுத்தம் நடைபெற்ற 90களின் ஆரம்பத்தில் அவ்விடத்தை விட்டு முஸ்லிம்கள் வெளியேறிவிட்டனர். இவ்விடத்தில் எமக்கும் இந்தியப் படைக்கும் சண்டை இடம்பெற்றது. எனவே, அன்று தொடக்கம் இவ்விடத்தில் எமது முகாம் இருந்தது என்பதைப் புரிந்துகொள்ளுங்கள் என திலக் பத்திரிகையாளரிடம் கேட்டுக் கொண்டார்!!

இந்த ஊடகவியலாளர் தனது கட்டுரையில் ஓரளவுக்கு உண்மைகளைத் தெளிவுபடுத்தியுள்ளார். எனினும், திரு. திலக் கூறியது போல 90களில் குரங்குபாஞ்சானிலிருந்து வெளியேறிய பின்னர் 93.94களில் தமது விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக அப்பிரதேசத்திற்கு முஸ்லிம்கள் சென்று வந்துள்ளனர். தற்காலிக வீடுகளமைத்து வசித்தும் வந்துள்ளனர். இதற்கு ஆதாரமாக அங்கு காணப்படும் குடிசைகளின் எச்சங்களையும், தாவரங்களையும் காணலாம்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் தமக்கு இனிமேல் அச்சுறுத்தல் இருக்காது என்ற எண்ணத்துடன் மீள்குடியேறி தமது விவசாயம், காட்டுத்தொழில், செங்கல்தொழில், நன்னீர் மீன் கருவாடு போடல் முதலியவற்றில் மும்முரமாக ஈடுபட்டு வந்தனர். சிலர் பரந்தளவிலான பயிர்ச் செய்கையிலும், தோட்டப்பயிர்ச் செய்கையிலும் ஈடுபட்டனர்.

2002 ஜுன் 13ல் அங்கு பிரவேசித்த புலிகள் ஆயுத முனையில் அங்கு வாழ்ந்த விவசாயிகளை விரட்டியடித்து விட்டு பரக்கத் நகர் பள்ளிவாசலை மத்தியாக வைத்து தமது முகாமை அமைத்தனர். பல இலட்சம் ரூபாய்கள் பெறுமதியான அறுவடைக்கு ஆயத்தமான தோட்டங்களையும், கால் நடைகளையும் கைவிட்டவர்களாக வெறுங் கையோடும், வேதனையோடும் வெளியேறினர்.

அங்கு கைப்பற்றப்பட்ட விவசாயப் பொருட்களும், கால் நடைகளும் தரகர்கள் மூலமாக விற்பனை செய்யப்பட்டு பணமாக்கப்பட்டன. இந்த உண்மைகள் யாவும் ஊடகவியலாளர்களுக்கு மூடிமறைக்கப்பட்டுள்ளது. அங்கிருந்து விரட்டியடிக்கப்பட்ட முஸ்லிம் மக்கள் இன்றும் அகதிகளாகச் சின்னக் கிண்ணியா, பைசல் நகர், கட்டையாறு முதலிய கிராம சேவகர் பிரிவுகளில் வாழ்ந்து உலர் உணவு நிவாரணம் பெறுகின்றனர்.

அன்று கிண்ணியாவுக்கு-வந்த ஊடகவியலாளர்கள் குரங்கு பாஞ்சானிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட அகதிகளையும் சந்தித்துத் தகவல்களைப் பெற்றிருந்தால் யதார்த்தம் இன்னும் புலப்பட்டிருக்கும். கண்காணிப்புக் குழுவினர் நேரில் கேட்டறிந்தவற்றை அடிப்படையாகக் கொண்டே குரங்குபாஞ்சான் முகாம் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்த மீறல் என அடித்துக் கூறிவருகின்றனர்.

பரகத் நகர் பள்ளிவாசல் தலைவராக இருந்தவரும் அண்மையில் அங்கிருந்து விரட்டியடிக்கப்பட்டவருமான ஒருவர் தாம் கைவிட்டு விட்டு வந்த மரக்கறித் தோட்டத்திலிருந்து 10 இலட்சம் ரூபாய் வருமானத்தை எதிர் பார்த்ததாகக் கூறினார்.

எனவே, ஊடகவியலாளர்களும் தம்மைச் சந்தித்து உண்மைகளை உணர்த்துவார்களா என அங்கிருந்து விரட்டியக்கப்பட்ட அகதிகள் அங்கலாய்க்கின்றனர்.

-கிண்ணியா ஞானி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டு மக்களின் இறைமையைக் காப்பதற்கு
## அரசாங்கத்தினால் செலவழிக்கப்படுகின்ற நிதியின் அளவு
## (பாராளுமன்றத்தில் வீண்விரயம்)

தற்போதுள்ள பா.உ. தொகை 225 ஆகும். வடக்கு கிழக்கு உள்ளிட்ட மாகாண சபை உறுப்பினர்களின் தொகை 455 ஆகும். 18 மாநகரசபை உறுப்பினர்களின் தொகை 372 ஆகும். பிரதேச சபையின் உறுப்பினர்கள் 3090 ஆகும். இவர்கள் அனைவருமே நாட்டு மக்களின் வாக்கினாலேயே தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

இந்த அரசாங்கத்தின் கீழ் பா.உ. கள் பெறுகின்ற சம்பளத்தையே அமைச்சர்களும் பெறுகின்றனர். அதன்படி பா.உ. ஒருவரின் மாதாந்த சம்பளம் ரூபாய் 22,100/- ஆகும். எரிபொருள் கொடுப்பனவு ரூபாய் 7500/- ஆகும். விருந்தோம்பல் கொடுப்பனவு ரூபாய் 1000/- ஆகும். நடமாடும் தொலைபேசிக் கட்டணம் ரூபாய் 2000/- ஆகும்.

இவையனைத்தும் சம்பளத்திற்கு புறம்பாக கிடைப்பவையே. பா. உறுப்பினருக்கான சொந்தப் பாவனைக்குரிய 2 தொலைபேசிக் கட்டணங்களும் அரசாங்கத்தினாலேயே செலுத்தப்படுகின்றது. சில பா.உ. களின் தொ.பேசிக் கட்டணம் ரூபாய் 50000/- ஆகும். இதற்குப் புறம்பாக பாராளுமன்ற கூட்டத் தொடரில் கலந்து கொள்ளும்பட்சத்தில் ஒரு நாளைக்கு ரூபாய் 500/- வழங்கப்படுகின்றது. பொதுவாக ஒரு மாதத்தில் 8 நாட்கள் பாராளுமன்றம் கூடுகின்றது. இதற்குப் புறம்பாக மேலும் 10 நாட்கள் வேறு விசயங்களுக்காக பாராளுமன்றம் கூடுகின்றது. ரூபாய் 500/- வீதம் 18 நாட்களுக்கும் ரூபாய் 6000/- வழங்கப்படுகின்றது.

மிகவும் குறைந்த சலுகைக் கட்டணத்தில் பாராளுமன்றத்தில் உணவு வழங்கப்படுகின்றது. காலை வேளை உணவாக கீழ் வருபவை வழங்கப்படுகின்றன.

இடியப்பம், நூடுல்ஸ், பாண், சிவப்பரிசிச் சோறு, பாற்சோறு, மீன், கோழியிறைச்சி, கிழங்கு, பருப்பு, தேங்காய்ச் சம்பல், மிளகாய்ச் சம்பல், வெங்காயச் சம்பல், அவித்த முட்டை, ஒம்லட், முட்டை ஸ்க்ரம்பல், முட்டை அரை அவியல், முட்டை முழு அவியல், பெகன், சொசேஜ், 3 வகை ஜேம், பட்டர், மாமைட், தேனீர், கோப்பி மற்றும் பால். இத்தனைக்கும் இதன் கட்டணம் ரூபாய் 6/- சில பா. உ. கள் சுகயீனம் காரணமாக 6 முட்டை வெண்கருவை உண்பார்கள்.

இத்தகைய ஒருவேளை காலை உணவுக்கு சாதாரண 5 நட்சத்திர ஹோட்டலில் ரூபாய் 500/- குறையாமல் அறவிடப்படும்.

இதேபோன்று பகலுணவும் வழங்கப்படுகின்றது. கட்டணம் ரூபாய் 15/- தான். பகல் உணவாக கீழ் வருபவை வழங்கப்படுகின்றது.

சம்பா, பாஸ்மதி மற்றும் பச்சையரிசிச் சோறு, மீன், மாட்டிறைச்சி, கோழி இறைச்சி, 5 வகை மரக்கறிகள், பொரித்த மீன் ஆகியன.

பா. உறுப்பினர்கள் உணவு எடுக்கும் மண்டபத்திலுள்ள மேசையிலிருந்து இறைச்சி, மீன், சூப், பாண், பட்டர், காளான் கறி, பேபி கோண் ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

சாப்பாட்டின் பின் வாழைப்பழம், அன்னாசி, பப்பாசி வழப்பாகு, புடிங், ஐஸ்கிறீம், கோப்பி போன்றவற்றை உண்ண முடியும்.

பாராளுமன்றம் கூடுகின்றபோது ஒரு நாளைக்கு அரிசி 250 கிலோ, பாஸ்மதி 20 கிலோ, அருக்குளா மீன் 50 கிலோ, பாறை மீன் 200 கிலோ, இறால் 20 கிலோ, கோழி இறைச்சி 150 கிலோ, ஆட்டிறைச்சி (02 நாட்களுக்கு ஒரு தடவை) 100 கிலோ, பாண் 110, பிரவுன் பாண் 10, ரூபாய் 13500/- பெறுமதியான மரக்கறிகள், ரூபாய் 21200/- பெறுமதியான பழவகைகள், சொசேஜ் 3 கிலோ, போன் 2 கிலோ, சீலா மீன் 25 கிலோ ஆகியன சமையலறையில் பாவனைக்கு வாங்கப்படுகின்றன.

இறைச்சி மற்றும் மீன் வகைகளுக்கு மட்டுமே ஒரு நாளைக்கு ரூபா 1 இலட்சம் செலவழிக்கப்படுகின்றது.

அவர்கள் தங்குகின்ற விடுதியில் கொண்டாடப்படுகின்ற பிறந்தநாள் வைபவங்களும் பாராளுமன்ற நிதியிலேயே மேற்கொள்ளப்படுகின்றன. பொதுவாக பாராளுமன்ற கட்டிடத்தின் மாதாந்த மின் கட்டணம் ரூபாய் 30 இலட்சத்திற்கும் 40 இலட்சத்திற்கும் இடைப்பட்டதாகும். பாராளுமன்ற மற்றும் பா. உறுப்பினர் குழுவின் தொலைபேசிக் கட்டணம் ரூபாய் 60 இலட்சத்திற்கும் 65 இலட்சத்திற்கும் இடைப்பட்டதாகும்.



அமைச்சர் ஒருவரின் சொந்த ஊழியர் குழுமத்தில் 6 பேர் அடங்குவர். பிரத்தியேக செயலாளர், பாராளுமன்ற விவகாரங்களுக்கான செயலாளர், உதவிச் செயலாளர் (ஊடகம்), மக்கள் இணைப்பதிகாரி, எழுதுவினைஞர் மற்றும் சாரதி ஆகியோர் அதில் அடங்குவர்.

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் சொந்த ஊழியர் குழுமத்தில் 4 பேர் அடங்குவர்.

இவர்கள் அனைவரினதும் சம்பளமும் கொடுப்பனவுகளும் ரூபாய் 10000/- தாண்டும். ஒரு அமைச்சரின் கொடுப்பனவுகள் உள்ளிட்ட சம்பளம் ரூபாய் 29845/- தாண்டும். மாகாண சபை அமைச்சர் ஒருவரின் மாதாந்த சம்பளம் ரூபா 28750/- ஆகும்.

இவ்வருட வரவு செலவு எஸ்டிமேட் மூலம் பாராளுமன்றம், சபாநாயகர் அலுவலகம், ஆளும் கட்சி அலுவலகம், எதிர்க்கட்சித்தலைவரின் அலுவலகம் பா.வி. அமைச்சு ஆகியவற்றுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி ரூபாய் 4,42,48,000/- ஆகும். இந்தத் தொகை போதாது என்பதால் வேண்டிய நேரத்தில் தேவையான தொகையை திறைசேரியிலிருந்து கேட்டுப் பெற்றுக் கொள்வதற்கும் பாராளுமன்ற அதிகாரிகளுக்குப் போதிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.




**சஞ்சிகை** : யாத்ரா (11)
**ஆசிரியர்** : அஷ்ரஃப் சிஹாப்தீன்
**தொடர்புகள்** : தென்கனத்த வீதி, மாபோலை, வத்தளை.
**பக்கங்கள்** : 64
**விலை** : ரூபா: 40/=



காலங்களை விழுங்கிக் கொண்டாலும் யாத்ராவின் வரவு உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது. சிற்றேடுகள் என்றாலே அது காலம் தாழ்த்தி வரக்கூடிய ஒன்றென்று ஆசிரியரே சுட்டிக் காட்டியுள்ளார். பல சிற்றேடுகள் காலதாமதங்களை சொந்தமாக்கிக் கொண்டே இருக்கின்றன.

யாத்ராவில் இடம்பெறும் கவிதைகளில் பெரும் பாலானவை கவித்துவம் சோரம் போகாத நிலையில் இடம் பெற்றிருப்பது கவிதா நெஞ்சங்களையும், இலக்கிய ஆர்வலர்களையும் நம்பிக்கையிழக்காது நேசிக்க வைக்கும்.

கவிஞர் டாக்டர், ஜின்னாஹ் ஷரிபுத்தீனின் பேட்டி தொகுக்கப்பட்டிருக்கும் விதம் வாசிக்கத்தூண்டுகிறது. அதே நேரம் மரபுக் கவிதைகள் மீதும், வெண்பாக்களிலும் அவருக்கிருக்கும் புலமையும், பிடிமானமும் துலங்குகின்றது. அவரது மானிட நேசத்தின் பண்புகளும், இலக்கிய பங்களிப்புக்களும் ஒரே இடத்தில் வெளிச்சமாக்கி வைக்கப்பட்டிருக்கிறது.

கண்ணதாசனின் கவிதை ஆளுமைக்கு யாத்ரா அஞ்சலி செலுத்தியிருக்கிறது. மகாகவி அல்லாமா இக்பால் பற்றிய கட்டுரையும், யாத்ரா நடாத்திய கவிதைப்போட்டி-2002 பற்றிய சில குறிப்புகளும் இடம்பெற்றிருக்கின்றன.

கற்பனை என்ற பெயரில் என்.ஏ. தீரன் (ஓரங்கப்) பேட்டியொன்றினை இவ்விதழில் படைத்திருக்கின்றார். வாசிப்போரை வசப்படுத்தக்கூடிய வகையில் எழுதப்பட்டிருப்பது அவரது கற்பனை வளத்தையும், சொல்லாடல்களையும் தரிசிக்க முடிகின்ற அதே வேளை யாத்ரா ஆசிரியர் மீதுள்ள பற்றினால் எழுந்த நன்றிக்கடன் செலுத்தப்பட்டிருப்பதும் இழையோடுகிறது. இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் கௌரவிக்கப்பட வேண்டிய பலர் தவிர்க்கப்பட்டிருந்தது ஒரு யதார்த்தமான நிகழ்வென்பதையும் மறுக்க முடியாது.

யாத்ரா இலக்கிய உலகில் தாக்கத்தினைச் செலுத்தும் ஒரு சஞ்சிகையாக வெளிவந்து கொண்டிருக்கின்றது. அதன் பணி தொடர்ந்தும் நிலைபெறுவதற்கு பக்கபலமாக இருப்போம்.

**நூல்** : கிராமிய தூறல்கள்
**ஆசிரியர்** : அல்-மருதமுனை ஆசிரியர் குழு
**வெளியீடு** : அல்-மருதமுனை வெளியீட்டகம், 392, மக்காமடி வீதி மருதமுனை-03.
**பக்கங்கள்** : 1-xiv + 68
**விலை** : ரூபா 150/=



கடந்த 1998 களிலிருந்து "அல்-மருதமுனை" எனும் சஞ்சிகை "மருதமுனை மண்ணின் கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், பழங்கால மறந்த விடயங்கள், எழுதப்பட்ட நூல்களின் விபரங்கள், முதல் மரியாதைக்குரியவர்கள்" போன்ற விடயங்களை முதன்மைப்படுத்தி வெளிவந்து கொண்டிருக்கின்றது.

அல்-மருதமுனை தனது முதன்மைப்படுத்திய இலக்குகளை தனித்தனியாகப் பதிவாக்கும் எண்ணத்தின் முதல் வெளிப்பாடாக "கிராமிய தூறல்கள்" எனும் மகுடத்தில் கவிதைகளின் தொகுப்பு வெளிவந்திருக்கின்றது.

இத்தொகுப்பில் இடம் பெற்றிருக்கும் கவிதைகள் மூலம் மருதமுனை பிரதேசத்தின் கலை, இலக்கிய, சமூக பங்களிப்பு போன்றவற்றினை கூட்டு மொத்தமாக நோக்கவும், அதன் தரச்சிறப்புக்களை எடைபோடவும் வழி வகுத்திருக்கின்றது. மறுபுறத்தில், கடந்தகால படைப்பிலக்கிய பங்களிப்புக்களை சமகாலத்தவர்களுக்கும், இவ்விரு கால படைப்பிலக்கிய ஆற்றல்களை நமது எதிர்காலத்தவர்களுக்கும் எடுத்துக் காட்டும் முயற்சியாகவும் இத்தொகுப்பு நூல் அமைகின்றது.

இன்னொரு கோணத்தில், ஒவ்வொரு பிரதேசத்திலும் நம்மவர்களின் ஆளுமைகளை பதிவாக்கும் சிந்தனையை விதைத்து, செயலுருவாக்கம் பெறுவதற்கான உந்துதல்களை ஊட்டுவதிலும் இத் தொகுப்பாக்கம் பணியாற்றுகின்றது.

இத்தொகுப்பில் இடம் பெற்றிருக்கும் பெரும்பாலான கவிதைகள் மருதமுனை மண்ணின் ஆற்றல்களையும், அவர்தம் உணர்வுகளையும், வாழ்வு முறைமைகளையும் பரஸ்பர உறவு பேணல்களையும் எடுத்துக் காட்டுகின்றன. இவ்வாறான முயற்சிகள் நமது பிரதேசங்களிலிருந்து அதிகமதிகம் வெளியிட வேண்டும். அப்போதுதான் நமது கலை, இலக்கிய பங்களிப்புக்கள் வரலாற்றுப் பதிவாகி, நின்று நிலைக்க வழியாகும்.

-அபூ பாத்திமா பர்வின்-

# சிதையும் கலாசாரமும் தொடர் சீரழிவுகளும்

இஸ்லாம் எனும் புனிதமார்க்கத்தின் பால் இருந்து கொண்டு நவீனத்துவத்தின் மேல் சவாரி செய்பவர்களும் எம்மில் உள்ளனர். எமது அன்றாட வாழ்வில் அஸ்ஸுஹ்த் எனும் பற்றற்ற வாழ்க்கை எனும் அடிப்படையில் நமது கடமைகள், செயற்பாடுகள், எண்ணங்கள் வடிவமைக்கப்படல் வேண்டும் என்பது இருக்க, முரண்பாடுகளும் புதுமைகளும் என்ற கோட்பாட்டுக்குள் நமது பாதங்கள் வந்து கொண்டிருப்பதை சில நேரம் நாணப்பட்டே நாம் சொல்ல வேண்டியிருக்கின்றது.

தொடர் நெருக்கீடுகளுக்கு மத்தியில் பாதுகாக்கப்பட வேண்டிய நமது கலாசாரம், பண்பாடு, மொழி என்பவைகள் மேற்கத்தய மயமாக்கல், மாற்றுக்கலாசார உள்வாங்கல்கள் என்பவற்றினூடாக மிகக்கடுமையான பாதிப்புக்குள்ளாகுவதை சிந்திக்கத் தவறுகிறோம். அன்றேல் இக்காலத்தில் அவை பற்றிய தெளிவுகளற்று மௌனமாக இருப்பதில் அங்கீகரிக்கும் செயற்பாட்டில் நாம் அகப்பட்டுக் கிடக்கின்றோம்.

எமது சூழல் பிணைப்புகள் பெறுமதியற்ற செயற்பாடுகளையும் வீண் செலவுகளையும் சுமந்து வாழ்தல்நிலைக்கு கட்டமைக்கப்பட்டிருக்கிறது. எமக்கான பிரச்சினைகள் உருவாகும்போது அவற்றினைச் சரியாகத் தீர்க்கும் தளங்களை எம்மால் இன்னுமே இனங்காண முடியவில்லை. எமது ஆன்மாக்களில் புகுத்தப்பட்டவைகள் வெறுமை கலந்த செயற்பாடுகளே. இஸ்லாமிய ஷரீஆத்சட்ட விதிகள் கடமைகள் இருக்க, இலக்குத் தெரியாத இயந்திர மோகத்துள் எம்மை வரித்துக் கொண்டிருக்கிறோம்.

ஒவ்வொருவரும் தனிப்பட்ட சிந்தனைக்குள் நோக்கிப் பார்த்தால் எமது சட்ட வரையறைக்கப்பாற்பட்டு ஒரு பிரம்மையின் துடிப்பிலே எமது நிழல்கள் தொடர்வதை காணத்தவறோம். கலாசாரத்தின் மேல் முளைக்கும் ஒவ்வொரு பித்அத்களும் அடக்குமுறைமேல் கொண்டு வரப்படும் பண்புகளாகவே இனங்காணமுடிகிறது. மாற்றுக் கலாசார நுகர்வுகள் எம்மை நாம் இனங்காணாத வட்டத்தினுள் வடிவமைத்துக் கொண்டேயிருக்கிறது.

இஸ்லாம் எனும் தூய்மையான வாழ்வினைத் துரிதமாக இழந்து தங்கி வாழ்தல் அன்றேல் நம்மை நாம் இழத்தல் எனும்நிலைக்கு முன்னர் ஆழமான, அழகான வாழ்வுப் பெறுமானங்களை உணரும் நிலை நோக்கிடவும் ஒற்றைக் கலாசாரத்தாக்கத்தை வீழ்த்திடவும் எம்மை நாம் சரியாக இனங்காணல் வேண்டும்.

எம்மீதான சுய ஆளுமைகள் விலைக்கு விற்கப்பட்டு வெகு காலம் ஆகிவிட்டது போலும். எமது வாழ்வு எமது கலாசாரப் பண்பாடுகள் தூக்கி வீசப்பட்டு உருவம் தெரியாத வடிவத்திலே எம்மிடம் தவழ்ந்து கொண்டிருக்கிறது.

மிகப்புனிதமான எமது வாழ்வுக் கலாசாரம் சீரழிந்து போவதை மீள உயிர்ப்பித்தல் நிலை முதன்மைப்படல் வேண்டும். எம்மை பாதித்துள்ள பாரதூரமான முரண்பாடுகள் எம்மை விட்டும் விலகிச் செல்ல வேண்டும்.

அவற்றுக்கான கச்சிதமான தீர்வுகளைப்பற்றி சிந்திக்க முற்படும்போது எமது கூர்மைகள் தெளிவடைய வேண்டும்.



எமது நடைமுறையின் மேல் தோய்ந்துள்ள புது அனுஸ்டானங்களைக்களைய வேண்டும். இலட்சியத்தாகம்மிக்க இஸ்லாமியத்தை நமது செயற்பாடுகள் இனம்காட்ட வேண்டும். எமக்கான சட்டவரையறைகள் இருக்க மாற்றுக் கலாசார பண்புகளை உள்வாங்குவதை கூடியவரை தடுக்க வேண்டும். எமது அறிவியல் உலகம் விரிந்து நிற்க வேண்டும். குறுகிய வட்டத்தின் மீது இருக்குமாக இருந்தால் நம்மை நெருக்கும் சவால்கள் பற்றிச் சற்றும் அறியாமல் இருந்தவர்களாய்ப் பிரச்சினைகளைச் சூழ்வோம்.

இவற்றினடிப்படைகளை ஒட்டுமொத்தமாக்கிப் பார்க்கின்றபோது எம்மில் தொற்றியுள்ள கலாசாரத் தாக்கத்திற்கு ஒவ்வொருவரும் காரணமில்லாமல் காரணமாகிருக்கிறோம் என்பதை முதலாக உணர வேண்டும்.

எமது ஷரீஆத் காட்டாத விடயங்களைக் களைவதனூடாகவும் எமது சிந்தனைகள், மனிதாபிமானங்கள் விரிவதனூடாகவும், இயல்பு வாழ்வு மீது நமது உரிமைகள் கடமைகளை சரியாக்குவதனூடாகவும் ஓரளவேனும் சீரமைக்கலாம் என்பதைக் கூறவும் முடிகிறது.

முஹம்மட் இஸ்மாயீல் சித்தி றபீக்கா
சம்மாந்துறை.

# முஸ்லிம் தேச ஆவணக் காப்பகம்

முஸ்லிம் தேச ஆவணப்படுத்தலுக்கும், பாதிக்கப்பட்டவர்களின் நட்ட ஈட்டுக் கோரிக்கைக்குமான ஆவணக் காப்பகம் செயற்படத் தொடங்கி உள்ளது. 1983ம் ஆண்டுக்குப் பின்னர் அரச, தமிழ் இயக்கப் பயங்கரவாதத்தால் மௌத்தான, காணாமல் போன, அங்கவீனமுற்ற இலங்கை முஸ்லிம்களின் தகவல்களை ஆவணப்படுத்தவும், ஆவணக்காப்பகமையம் ஊடாக நட்ட ஈட்டுக் கோரிக்கையை வென்றெடுக்கவுமான செயற்திட்டம் ஒன்றிற்காக நமது மக்களிடமிருந்து தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன.

தற்போதைய தேசிய இனப் பிரச்சினைச் சூழ்நிலையில் முஸ்லிம்களின் இழப்பு எவ்வித பெறுமதியற்ற ஒன்றாகவும் கவனிப்பாரற்ற நிலையிலும் காணப்படுவதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். இதுவரையில் 1983ம் ஆண்டில் இருந்து "முஸ்லிம்கள்" என்பதற்காக 5000 க்கு மேற்பட்ட முஸ்லிம்கள் கொல்லப்பட்டிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆகவே எமது இழப்பை பெறுமதியுள்ளதாக மாற்றுவதற்கு எமது இழப்பின் விபரத்தை ஆவணப்படுத்த வேண்டிய அவசியமுள்ளது. இந்த பெரும் சமூக வேலைத்திட்டத்தில் தங்களை இணைத்து கொள்வீர்கள் என்று நம்புகிறோம்.

எமது சகோதரர்களின் இழப்புக்களில் அக்கறையுள்ள சகல இயக்கங்களும், சமூக சக்திகளும் இப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்தை தயார் செய்து எமக்கு அனுப்பி வைக்குமாறு தங்களை சமூகத்தின் சார்பாக அழைக்கின்றோம்.

பாதிக்கப்பட்ட சகல மக்களினதும் குடும்பங்களுக்கு மாதிரி விண்ணப்பப்படிவம் கிடைப்பதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். சமூக இயக்கங்கள் தனிமனித சக்திகள் இது தொடர்பாக எம்முடன் இணைந்து செயற்பட முன்வருமாறு வேண்டுகின்றோம்!

தகவல்களை அனுப்ப வேண்டிய முகவரி

முஸ்லிம் தேச
ஆவணக் காப்பகம்
181/1 மாளிகாகந்த வீதி, (வைற்பாக்)
கொழும்பு 10.

### குரங்கு பாஞ்சான் முஸ்லிம்......

கொள்ளை, தீவைப்பு, காசு கேட்டுக் கடத்தல் போன்ற நடவடிக்கைகளை நீங்கள் மேற்கொள்வதால், 'வீரபாண்டிய கட்ட பொம்மன்' படத்தில் சிவாஜி பேசும் "வயலுக்கு வந்தாயா... என்ற வசனங்கள்தான் எனக்கு ஞாபகம் வருகின்றன.

உண்மையில் மஜீட்புர விடயத்தில் கவனஞ்செலுத்த வேண்டியவர்கள், நாங்கள் ரத்தம் சிந்தி உருவாக்கிய அரசியல்வாதிகள்தான். ஆனால் அவர்கள் கொழும்பில் பிஸி ஆனபடியால்தான் பொதுமக்களாகிய நாங்கள் அங்குமிங்கும் அலைகிறோம். இன்னுமொரு தேர்தல் வரும்பட்சத்தில்தான் அவர்களுக்கு நாம் படிப்பிக்கலாம். அதுவரையில் எமது பிரச்சினையை நாம்தான் சுமக்க வேண்டும்.

அன்றைய எரிமலைப் பேட்டியில் மீள் குடியேற்றம் பற்றிக் கூறும்போது 'இங்கிலாந்தில் இருந்து ஒருவர் தனது யாழ்ப்பாண வீட்டைப்பார்க்க வந்ததாகவும் அவரை, இராணுவம் தடுத்துவிட்டதாகவும் மிகவும் உருக்கமாகக் கூறினீர்கள். அதனைக் கேட்டு நானும் உருகிவிட்டேன். ஏனெனில் நான் எனது மஜீட்புர வீட்டைக் கண்ணால் கண்டு தொட்டுத்தடவிப் பார்த்து முத்தமிட ஆவலாய்த் துடிக்கிறேன். ஆனால் புலிகளே, நீங்கள் தடுக்கிறீர்களே. இங்கிலாந்தில் இருந்து வந்தவரை இராணுவம் தடுக்கிறது எனக்கூடிந்து கொள்ளும் நீங்கள் எனது மஜீட்புர வீட்டுக்குச் செல்ல எனக்குத் தடை விதிக்கிறீர்களே! ஏன்? நான் முஸ்லிம் என்பதாலா? இப்போதே இப்படியென்றால் உங்களது இடைக்கால நிர்வாகத்தில் என் சமூகத்தின் நிலை என்னாகுமோ?

ஐயா,

எங்களை எங்கள் பூமியில் இருந்து வெளியேற்றிவிட்டு எங்களைக் கொண்டே எங்கள் பள்ளிவாசலில் முகாமமைத்துக் கொண்டு 'நாங்கள் எங்கள் வீட்டுக்குப் போவதற்காக நீங்கள் உங்கள் வீட்டுக்குப் போங்கள்' என இராணுவத்தைப் பார்த்துக் கேட்கும் நீங்கள், அக்கூற்றுக்கு முன்னுதாரணமாக, நாங்கள் எங்கள் வீட்டுக்குப் போவதற்காக நீங்கள் உங்கள் வீட்டுக்குப் போவீர்களா?

நன்றிகள்,

இப்படிக்கு
சினேகங்களுடன்,
மஜீட் புரம் முகம்மது அஸ்கர்,
தற்போது பெரிய கிண்ணியாவில்.

**வாசகர் கவனத்திற்கு**

முஸ்லிம் குரலின்
1-15 இதழ்கள் தேவைப்படுவோர் ரூபா. 200/- க்கான
காசுக்கட்டளை/காசோலை அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்வரும் ரமழான் நோன்பை — நாம் எவ்வாறு எதிர்கொள்ளப் போகிறோம்?

புனித ரமழான் நோன்பு ஒவ்வொரு வருடமும் நம்மை சந்தித்து, சன்மார்க்க மணங்கமழ்ந்தே செல்கின்றது. வழமைபோல வருடாந்த வாழ்க்கை நிகழ்வுகளாக சஹர் நேரத்தில் விழிப்பதும், நோன்பு நோற்பதும்-ஐவேளை தொழுகையை விடாமல் தொழுவதும், பகல் முழுதும் சிலர் தூங்கி கழிப்பதும், வேலைக்கு செல்வோர் செல்வதும், மஃரிப் ஆனதும் நோன்பு திறப்பதும், இரவில் தராவீஹ் தொழுவதும், ஹிஸ்பு ஓதுவதும், பிறகு தூங்கி சஹருக்கு விழிப்பதும், இளைஞர்களில் ஒருசாரார் இரவு முழுக்க தெருவில் கிரிகெட், சோப் போன்ற ஆட்டங்களை ஆடுவதும், இன்னொரு சாரார் "பிங்கோ" போன்ற சூதாட்டங்களில் ஈடுபடுவதும், மறுசாரார் டிவி முன் சங்கமமாவதும், மறுநாளில் இதே நிகழ்வுகள் தொடர்வதும், மாத இறுதியில் பிறை பார்க்கும் பிரச்சினையில் முட்டி மோதுவதும், அப்புறம் ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாளை கொண்டாடி மகிழ்வதும், அதன்பின் "ரமழான் பிறையே விடை பெறுகிறாயா?" எனக் கவிதை எழுதி, ரமழானுக்கு விடை கொடுத்து அனுப்புவதோடு, நம் கடமை முடிந்து விடுகிறதா?

"நம் முன்னோர்க்கு அருளப்பட்டதுபோலவே, உங்களுக்கும் நோன்பு கடமையாக்கப்பட்டிருக்கிறது...." என அல்குர்ஆன் கூறுகிறது. இந்த வரிகளின் உள்ளார்ந்த கருத்தென்ன? என்பதை நாம் புரிந்து கொண்டோமா? வெறுமனே பசி-தாகம் பொறுத்து, மாலை மயங்கிய மஃரிப் வேளையில் நோன்பு திறந்து-அதன்பின் விதவிதமாக உண்டு மகிழ்ந்து ஏப்பம் விடுவது மட்டும்தான் நோன்பா? நோன்பு நோற்பதால், உணர்வுகள் பக்குவப்பட்டு, ஆசாபாசங்கள் வடிகட்டப்பட்டு, மனசு இதப்படுத்தப்பட்டு, பதப்படுத்தப்பட்டு சிந்தனைகள் சீராவதை, நாம் தொடர்ந்து வரும் வாழ்வில் பயன்படுத்தியிருக்கின்றோமா? நோன்பு மாதம் முடிந்தபின், நம்மில் ஏதும் மாற்றம் ஏற்படுகின்றதா?




இவ்வாறு முல்லா கேள்விகளை அடுக்கிக்கொண்டு போவது ஏன்? என எண்ணிப் பாருங்கள். நம் நாட்டின் சமகால நிலைமைகளையும், நம் சமுதாயத்தின் அவல நிலைமையையும் சீர்தூக்கிப் பாருங்கள். அருள் சுமந்து வரும் ரமழான் முழுதும் நாம் பசியோடும்-பட்டினியோடும் இருந்து, குர்ஆன் ஓதி, வணக்க வழிபாடுகளில் அளவுக்கதிகமாக ஈடுபட்டு, நன்மையை கொள்ளையடிக்கும் நம்மில் இதயக்கசிவு ஏற்பட்டு, பக்கத்து வீட்டுக்காரனின் பசியை போக்கவும், தேவையை நிறைவேற்றவும் ஸக்காத் மூலம் முனையும் நாம், நம் சமுதாயத்தின் கூட்டு மொத்தமான பசியைப் போக்கவும், தேவைகளை நிறைவேற்றவும் முனைகிறோமா? முனைப்போடும் செயல்பட விரும்புகிறோமா?

சன்மார்க்க இதயங்களே-நாடு, சமகாலத்தில் "போரா? சமாதானமா? எனப் பட்டிமன்றம் நடத்தியவாறு தன் எதிர்காலத் தலைவிதியை நிர்ணயிக்கத் தடுமாறிக் கொண்டிருக்கும் இன்றைய சூழலில் "ஒற்றுமை என்னும் கயிற்றை பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்" எனக் கூறியுள்ள மார்க்கத்தின் மைந்தர்களான நாம், ஒற்றுமைப் படாத தலைமைத்துவங்களின் அரசியல் அந்தர் 'பல்டி' களால் வேற்றுமையுற்றுக் கிடக்கும் வேடிக்கைகளை வேதனைகளை பார்த்து ரசிக்கும் 'நஸீபு' கொண்டவர்களாக இருக்கிறோமே.... இந்நிலை மாறாதா? வருடாந்தம் வந்துபோகும் ரமழானின் அறுவடையினால் ஏதும் மாற்றங்கள் உண்டாக வாய்ப்புண்டா?

வாணாளில் ஒருமுறைதான் ஹஜ் கடமை (பர்ழு) "என்றிருப்பதுபோல்" ஒருவர் தன் வாழ்வில் இரண்டு வருடம் அல்லது ஐந்து வருடம் நோன்பு நோற்றால் போதுமானது; அத்தோடு நோன்பு நோற்கும் கடமை நிறைவேறி விட்டது" என, மார்க்கத்தில் சொல்லப்படவில்லை. இதிலிருந்து தெரிவதென்ன? வாழ்நாள் முழுதும்-வபாத் என ஒன்று வரும்வரை புனித ரமழான் நோன்பை நோற்க வேண்டும்; அதுதான் கடமை என்பதன்றோ?

வாழ்நாள் முழுமையும் வருடாந்தம் நோன்பு நோற்க வேண்டும் என சரீஆ விரும்புகிறது என்றால், ஒவ்வொரு காலப்பிரிவிலும் எழும் தனிநபர் பிரச்சினைகளையும், சமுதாய ரீதியிலான பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கு, அவ்வக்காலத்தின் நோன்பின் அறுவடைகளை உரைகல்லாகக் கொண்டு, அதன் வழி முயற்சிக்க வேண்டும் என்பதன்றோ, வாழ்நாள் பூராவுமான நோன்பின் அடிநாத எதிர்பார்ப்பாகும்.

இந்த அடிப்படையில் இவ்வருடத்திய நோன்பை எடைபோடுவோம். இவ்வருட ரமழான் நோன்பு, எத்தகைய கால கட்டத்தில் நம்மை சந்திக்க வருகிறது என சிந்தித்துப் பார்ப்போமா?

சமாதானப் பேச்சுவார்த்தை இடைநடுவே தடைப்பட்டுள்ளது. மீண்டும் பேச்சுவார்த்தை தொடர வேண்டுமென்றே பல தரப்பினரும் விரும்புகின்றனர். இடைக்கால நிர்வாக அலகு பற்றிய கருத்துக்கள் இன்னுமே பூரணமாக ஆராயப்படவில்லை. இதற்கிடையில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை மையப்படுத்திய பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஜே.வி.பியும், சிஹல உறுமய இயக்கமும், பிக்குமார் சங்கமும் அரசின் சமாதான முயற்சிகளை தீவிரமாகவும், வன்மையாகவும் எதிர்த்துவருகிறது மட்டுமல்ல, அப்பாவி சிங்கள மக்களிடையே நச்சுவிதைகளை தூவி வருகின்றன.

இந்த எதிரும் புதிருமான கோணங்களிடையே அகப்பட்டு, அலைக்கழிக்கப்படுகிறது. நம் முஸ்லிம் சமூகம் "சமுதாய எழுச்சிக்காக சேவையாற்றுவோம்" என வாக்குத் தந்து, சமூகத்தின் வாக்குகளை பெற்று பாராளுமன்றம் சென்ற முஸ்லிம் சமூகத்தின் தலைமைத்துவங்கள், கோணங்களில் கோடுகீறி நொண்டியடிக்கின்றனவே தவிர, சமுதாய விடியலுக்கான அடித்தளமிடும் ஆக்க முயற்சிகளில் ஆரோக்கிய பணிகள் செய்ததாக இல்லை.

முஸ்லிம் தலைமைத்துவ பங்காளிகளால் ஆரோக்கிய பணிகள் ஒன்றும் செய்ய முடியாதிருப்பதற்கு காரணம், அவர்களிடையே ஒற்றுமையில்லை! ஒத்தோடும் ஒருமைப்பாட்டுணர்வில்லை; பொது விவகாரங்களில் ஒத்துப் போகும் மனசில்லை. தலைமைத்துவ போராட்டம் ஊமைத்தனமாக அரசியல் நடவடிக்கைகளில் இழையோடுகிறது. *இதனால் சன்மார்க்க சமுதாயம் நட்டாற்றில் விடப்படும் அபாயம் தூரத்து காட்சியாய் தெரிகிறது.*

இந்த சூழ்நிலையில்தான் நம்மை நோக்கி நோன்பு வருகிறது. பிறரின் பசித்துயரை உணர்த்தி, அதன் மூலம் பிறரின் உணர்வுகளையும், உரிமைகளையும், தேவைகளையும் மதிக்கும் மனநிலையை வளர்க்கும் வளமார்ந்த நோன்பு, நம் முஸ்லிம் தலைவர்கள், அமைச்சர்கள், எம்.பிமார்கள், கட்சி அபிமானிகள் உட்பட்ட சமுதாயம் நோக்கி வருகிறது. இன்றைய சமாதான முயற்சிகளில் முஸ்லிம் சமுதாயத்தின் இருப்பையும், உரிமையையும், விடுதலையையும் உறுதி செய்வதற்கு, ஏகோபித்த குரல் அரசியல் அரங்கில் ஒலிக்க வேண்டும் . ஒன்றுபட்டாலே உண்டு வாழ்வு என்பது நாமெல்லோரும் கற்றுள்ள பாலர் பாடம்.

ஆம்... முஸ்லிம் தலைவர்கள் பதவிமோகம், சுயலாபம், கட்சிநலன் போன்ற குறுகிய எல்லைகளை கடந்து, சமுதாய நன்மை-அதன் எழுச்சி-எதிர்காலம் என்ற வட்டத்திற்கு வரவேண்டும். பிறரின் பசி-தேவைகளை உணரும் பக்குவத்தை நோன்பு பரிசாகத் தருகிறது எனில்; தலைவர்களுக்கு சமுதாயத்தின் பசியும்-தேவைகளும் புரியும் நிலைதானே வரவேண்டும். அந்த உணரும் வழியில் ஒன்றுபடுவது சாத்தியமாகும்; ஒரே குரலில் முன்வைப்பது சரித்திரமாகும்.

இந்த ரமழான் நோன்பின் மூலம் சாத்தியமாக்கி, சுதந்திரம் படைக்கும் பக்குவத்தை நம் தலைவர்களும்-மற்றவர்களும் பெறவில்லை என்றால், எத்தனை வருடம் நோன்பு நோற்றும் பயனில்லை.

*சரி இப்போது சொல்லுங்கள்... இவ்வருடம் நீங்கள் பிடிக்கப் போவது பயனுள்ள நோன்பா? பயனற்ற நோன்பா?*

## முஸ்லிம் குரல்

**புதிர்ப் போட்டி இல - 03**

அகழ்வு : நிஷாத் கரீம்

இந்தப் பகுதியின் மாதிரி விடைத்தாளில் புதிர் எண்களும் அதற்கான விடை எழுதும் பகுதியும் தரப்பட்டுள்ளன. (காண்க விடைத்தாள் - 03)

**மாதிரி விடைத்தாள் 3**

**முஸ்லிம் குரல்**
**புதிர்ப் போட்டி இல- 03**

| புதிர் இல | விடை எழுதும் பகுதி |
|---|---|
| 1 | |
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |
| 6 | |
| 7 | |
| 8 | |
| 9 | |
| 10 | |

பெயர் :............................................

முகவரி :............................................

கையொப்பம் :............................................

### போட்டி நிபந்தனைகள்

✔ உங்கள் விடைகள் தெளிவான எழுத்துக்களில் எழுதி அனுப்பப்படல் வேண்டும். (விடைத்தாளை நீங்கள் தயாரித்துக் கொள்ளவும்)

✔ சகல வினாக்களுக்கும் சரியான விடையை எழுதி அனுப்பிய அதிஷ்டசாலிக்கு பெறுமதியானதும், அறிவு ரீதியானதுமான நூல்கள் பரிசாக வழங்கப்படும்.

✔ ஒன்றுக்கு மேலானவர்கள் சரியான விடையை எழுதி அனுப்பும் பட்சத்தில் குலுக்கல் முறையில் அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார்.

✔ ஏனைய 10 முதல் தர விடைதாரர்களின் பெயர் பிரசுரிக்கப்பட்டு பாராட்டுப் பெறுவர்.

✔ நிரப்பப்பட்ட விடைத்தாள் 08.11.2003 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாய் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

✔ விடைகள் அனுப்ப வேண்டிய முகவரி

முஸ்லிம் குரல்,
புதிர்ப் போட்டி இல - 03
181/1 மாளிகாகந்த வீதி,
(வைட் பார்க்)
கொழும்பு - 10

*புதிர்கள் :-*

*01. ஸஹீஹ் முஸ்லிம் நபிமொழித் தொகுப்பு நூலை எழுதியவர் யார்?*

*02. இலங்கையின் முதன் முஸ்லிம் சபாநாயகர் யார்? எங்கு பிறந்தார்?*

*03. அமெரிக்காவின் வேண்டுதலுக்கிணங்கி தமது படைகளை அனுப்ப முடிவுசெய்த ஐரோப்பாவில் அமைந்துள்ள முஸ்லிம் நாடு எது?*

*04. இரண்டாவது உமர் என வரலாற்றில் புகழ்பெற்றவர் யார்?*

*05. போர்த்துக்கேயர் காலத்தில் தென்பகுதியில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களை மட்டக்களப்பில் குடியேற்றிய கண்டி மன்னன் யார்?*

*06. பெரும்பான்மை முஸ்லிம்களைக் கொண்ட இந்திய மாநிலம் ஒன்று இந்து மன்னனால் ஆட்சி செய்யப்பட்டு பின்னர் இந்தியாவுடன் இணைக்கப்பட்டது. அது எந்த மாநிலம்?*

*07. இஸ்லாத்திற்காய் முதன் முதலில் உயிர்நீத்த (ஸஹீ தான) சஹாபாப் பெண்மணி யார்?*

*08. புலிகளினால் கொடூரமாக நிகழ்த்தப்பட்ட காத்தான்குடி பள்ளிவாயல் படு கொலைகளில் ஸஹீதான முஸ்லிம்களின் எண்ணிக்கை எத்தனை?*

*09. இலங்கையில் முதல் முஸ்லிம் குடியேற்றம் இடம்பெற்ற இடம் எது?*

*10. தமிழக முஸ்லிம் முன்னேற்றக் கழகக் கட்சியின் தலைவர் யார்?*

# இப்படி ஒரு கொடுமை இனி ஒருவருக்கும் வரக்கூடாது!

## நடந்த கதையின் நகல்

சுமார் பத்.. ..ந்து வயதுடைய சல்மான் வபாஃத்தாகிவிட்ட சோக செய்தி, அந்தப் பகுதியையே கலங்கச் செய்து விட்டது. "இந்த வயதிலா இப்படியொரு முடிவு வரவேண்டும்?" என்றே பலரும் கேட்கலாயினர்.

சல்மான் என்ற அந்த ஒன்பதாம் ஆண்டு படிக்கும் மாணவன், ஜனாஸாவாக கட்டிலில் கிடக்கிறான். அறைக்கதவு மூடப்பட்டு, குளிப்பாட்டி கபஃன் செய்யும் கைங்கரியம் நடந்து கொண்டிருக்கிறது. வாய்ப்பேச்சு ஏதுமின்றி மௌனமாக விழிகளில் கண்ணீர் வடிய, தந்தையாகிய சலீம் ஜனாஸாவாகி விட்ட மகன் சல்மானையே வைத்த விழி வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தார்....

இரண்டு பொலிஸ்காரர்கள் தந்தை சலீமின் இரு மருங்கிலும் நிற்கின்றனர். ஒரு ஜனாஸா குளிப்பாட்டப்படும் இடத்தில் போலிஸ்காரர்களுக்கு என்ன வேலை? என்று கேட்பதில் நியாயம் இருக்கத்தான் செய்கிறது.

ஏன் பொலிஸ் நிற்கிறது? தந்தை சலீம் நிற்கும் கோலம் என்ன? இளங்கன்று பருவத்து பையன் சல்மான், இந்த வயதில் இறக்க வேண்டி ஏற்பட்டது ஏன்? இப்படி வினாக்கள் எழுந்தாலும், அந்த மையித்து வீட்டைச் சுற்றி குழுமி நின்ற ஆண்களும்-பெண்களும்-சிறுவர்களுமான அந்தக் கூட்டத்திற்கு விடைகள் யாவும் தெரியும்.... தொடர்ந்து வந்த துன்பங்களின் உச்சக்கட்ட நிகழ்ச்சி அது!

பையன் சல்மான் வரக்கூடாத அந்தப்புற்று (கென்ஷர்) நோயினால் பாதிக்கப்பட்டு, பல மாதங்கள் மஹரகம புற்றுநோய் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று இறுதியில் மருத்துவர்களால் கைவிடப்பட்டு, இன்று தன் இறுதி அத்தியாயத்தை வரைந்து விட்டான். ஆம்... சல்மான் வபாஃத்தாகி விட்டான். இன்னாலில்லாஹி வயின்னா இலைஹி ராஜிஊன்....

தந்தை சலீம்.... இதே மகன் சல்மான் பிறந்து மூன்று வயதாகி மழலைப்பருவத்தில், தடைசெய்யப்பட்ட பொருளொன்றை வெளிநாட்டிலிருந்து கடத்தி வரும் போது, விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்ட நிலையில், சம்பந்தப்பட்டவர்கள் எல்லாம் கைவிட்ட தனிமையில் ஆயுட்காலத் தண்டனை பெற்ற கைதியாகி-பன்னிரெண்டு ஆண்டு காலத்தை சிறையில் கழித்து, இன்னும் ஐந்தாறு வருடத்தில் விடுதலையாகி வந்து விடுவேன் என்ற நம்பிக்கையில் கண்டி போகம்பறை சிறையில் அடைபட்டு இருந்த போதுதான்......

அந்தத் தேள் கொட்டிய சோக செய்தி தெரிவிக்கப்பட்டது. 'சலீம் என்ற கைதியின் மகன் சல்மான் நோய்வாய்ப்பட்டு 'ஷீரியஸாக' இருக்கிறானாம்!' சலீம் போய் பார்த்து வர விண்ணப்பித்திருக்கிறார்கள். போய் பார்த்து வர அனுமதியும் கிடைத்து விட்டது. நாளை காலை கொழும்புக்கு சலீம் கொண்டு செல்லப்படுவார்.....

இதன்படி தந்தை சலீம், ஒரு வாரத்திற்கு முன்பு, ஐந்தாறு பொலிஸ்காரர்களின் பாதுகாப்பில், கைவிலங்கோடு, ஊரே திரண்டு வந்து தரிசிக்க, தன் வீடு வந்தார். மகனைப் பார்த்து பேசிவிட்டு சென்றார். அப்போது மகனுக்கு பிடித்த வியாதி எதுவென்று சொல்லவில்லை. பொலிஸும் சொல்ல வேண்டாம் என ஆலோசனை கூறியிருந்தது. "மகனுக்கு புற்று நோய்"என, உண்மையைச் சொல்லி விட்டால், ஒரு வேளை விரக்தியின் விளிம்பில் ஏதேனும் செய்து கொண்டால்.... என்ற பய உணர்வு. ஏன் வந்த வரை நொந்த மனத்துடன் அனுப்புவான்? என்ற நல்ல மனம் வேறு.....

சலீம் மாதிரி ஏதேனும் ஒரு காரணத்திற்காக கொழும்புக்கு கைதிகள் கொண்டு வரப்பட்டால், மறுநாளே வந்த இடத்திற்கு அனுப்பி விட மாட்டார்களாம்? ஓரிரு வாரம் வைத்திருந்தே அனுப்புவார்களாம்! அப்படி கொழும்பு, வெலிக்கடை சிறையில் இருக்கும்போதே, மகன் சல்மான் இறந்து விட்ட சோக செய்தி தெரிவிக்கப்பட்டு, ஜனாஸாவை ஒருமுறை பார்த்து வர அனுமதித்ததின் பேரில், இதோ மகன் குளிப்பாட்டப்படும் கொடுமையான காட்சியை மௌனக் கண்ணீரில் பார்த்துக் கொண்டிருந்தார் சலீம்..... கற்சிலை மாதிரி!

மையத்து வீட்டுக்கு வந்த பெண்களின் கூட்டம் அக்கம்பக்கத்து வீடுகளில் எல்லாம் அலைமோதியது. மையத்தோடு நல்லடக்கத்திற்கு போகும் எண்ணத்தில் வந்திருந்த ஆண்களின் கூட்டம் வேறு. இவை அனைத்தையும் விட, சிறை கூடத்திலிருந்து மகனைப் பார்க்க வந்த சலீம் நானாவை பார்க்க வந்த கூட்டமோ அதிகம் என்று சொல்லலாம்!

வாழ்நாளில் சலீம் கண்டதென்ன?

குடும்பக் கஷ்டத்தை போக்கும் நோக்கத்தில் என்னென்ன தொழில்களை எல்லாமோ செய்து பார்த்தும் கரைசேர முடியாத கையறுநிலையில்தான், ஆசை வார்த்தைகளுக்கு அடிமையாகி 'இந்த முயற்சிக்கு' இசைந்தார். மாட்டிக் கொண்டார். நம்பிக்கை குரல் தந்தவர்கள் எட்டியும் பார்க்கவில்லை. கையுமெய்யுமாக அகப்பட்டுக் கொண்டதால், எதையும் கூறி தப்பிக்க முடியவில்லை. ஆயுட்கால தண்டனை-கிட்டத்தட்ட 20 வருடங்கள் எனும் தீர்ப்பில் சிறை சென்றார் சலீம்.



**-அபூ ருஸைத்-**

"கண்ணே-மணியே..." என்று கொஞ்ச வேண்டிய காலத்தில் மகனை விட்டுப் பிரிந்த தந்தை, நன்னடத்தையின் காரணமாக 17-18 வருடங்களில் விடுதலையாகி விடலாம். அந்த எதிர்பார்ப்பில் மகனின் வளர்ச்சியில் எந்தப்பங்கும் வகிக்காமல் சிறைவாசம் புரிந்த சலீம் நானா, இப்போது மௌனமாக அழுகிறார்.

காண்போர்-கேட்டோர் அனைவரும் 'இப்படியொரு கொடுமை எவருக்கும் வரக்கூடாது" எனப் புலம்பினர். ஜனாஸா கபன் செய்தாகி விட்டது. தந்தை சலீம் பொலிஸ் வேனில் ஏற்றப்பட்டு கிழக்கு நோக்கிப் போக, ஜனாஸா ஊர்வலம் பள்ளிவாசலுக்கு. ஜனாஸா தொழுகைக்காக மேற்கு நோக்கிப் போனது. இப்படியொரு அவலம்-கொடுமை வரத்தான் வேண்டுமா? யாருக்குமே வரக்கூடாது. சலீமின் மனைவியும்-குழந்தையின் தாயுமான சுலைஹா... மூலையில் குந்தி அழுகிறாள். இந்த அழுகை எப்போது நிற்கும்? ஆறாத துயர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ.ல.சு.கட்சி அரசுடன் அதிருப்தி கொண்டுள்ளது. எனினும் ஜே.வி.பி.யுடன் இணையப் போவதில்லை.

முன்னாள் அமைச்சர் டீ.எம். ஜெயரத்தன

நாட்டின் இப்போதைய அரசியல், பாதுகாப்பு நிலைமைகள் அச்ச மூட்டக்கூடியனவாக உள்ளன. எனவே ஒக்டோபர் 24ந் தேதி தொடக்கம் நாடு முழுவதிலும் ஆட்சேப ஊர்வலங்களை நடாத்த பீ.ஏ. ஏற்பாடு செய்துள்ளது. அரசாங்கம் மக்களின் பல பிரச்சினைகளை உதாசீனம் செய்துவிட்டு வடக்கு-கிழக்குப் பிரச்சினை மீது மட்டுமே கவனஞ் செலுத்துவதாக டி.எம். ஜெயரத்ன குற்றம் சாட்டினார்.

இனப்பிரச்சினைக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டுமென அவர் ஏற்றுக் கொண்ட அதே வேளை அரசாங்கம் சமகாலத்தில் ஏனைய துறைகளையும் கவனிக்கவேண்டும் என்றார்.

தொழில் அற்றவர்களுக்கு ரூ 2000/= வழங்க அரசாங்கம் உறுதி மொழி அளித்தபோதிலும் இதுவரை எதுவும் நடக்கவில்லை. சமாதானப் பேச்சுவார்த்தைகளும் இடைநிறுத்தம் கண்டுள்ளன. எதுவும் முன்னெடுத்துச் செய்யப்படுவதாக இல்லை.

உத்தேச ஸ்ரீ.ல.சு.க + ஜே.வீ.பி. கூட்டிணைப்புப் பற்றி மக்கள் தவறான முறையில் அறிவிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பாக தொடக்கத்திலேயே அதிக பிரசாரம் செய்யப்பட்டுள்ளது. ஜே.வீ.பி எமது கொள்கைகளை ஒருபோதும் அங்கீகரிக்கப்போவதில்லை என நீண்ட பேச்சு வார்த்தைக்குப் பின்னர் நாம் கண்டு கொண்டோம். அவர்கள் அதிக அதிகாரங்களைக் கோரினர்.

*தங்களைச் செயலாளராகக் கொண்ட மக்கள் கூட்டமைப்பு, அரசாங்கத்திற்கெதிரான பல கண்டனப் பேரணிகளைத் தொடர்ச்சியாக நடாத்துவதுடன், ஐ.தே.க. அரசைப் பதவியகற்றவும் திட்டமிட்டுள்ளது. வேறு என்னென்ன திட்டங்கள் உள்ளன.*

இப்போதைய அரசியல் நிலை வருந்தத்தக்கது. ஐ.தே.மு. அரசின் கீழ் மக்கள் பயன்பெறவில்லை. ஐ.தே.மு. அரசிடம் பீ.ஏ.யை விடச் சிறந்த திட்டங்கள் இருக்குமென நாம் உண்மையாய் நம்பினோம். ஆயினும் அரசாங்கம் அனைத்து விடயத்திலும் தனது பிடியைத்தளர்த்தியுள்ளது. எதுவும் முன்னெடுத்துச் செய்யப்படவில்லை. அரசாங்கம் ஏமாற்றுகிறது. என நாம் உணர்கிறோம். அரசாங்கம் ஒன்றைச் சொல்கிறது வேறொன்றைச் செய்கிறது. இனப்பிரச்சினைக்கு தென் பகுதி கட்சிகளின் கருத்துக்களை அறியும்படி தொடக்கத்தில் இருந்தே நாம் கூறிவருகிறோம். அரசு செவிமடுக்கவில்லை. இதனால் பெரும் நெருக்கடி உருவாகியுள்ளது. இடைக்கால நிர்வாக அமைப்பு தொடர்பாகப் புலிகளால் அரசாங்கத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆலோசனைகள் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை நாம் அறிவோம். இப்பிரச்சினை தீரப்போவதில்லை. இது பற்றி நாடு இருளில் வைக்கப்பட்டுள்ளது. வாழ்க்கை செலவு வேகமாக அதிகரிக்கிறது. குற்றவாளிகள் மீண்டும் செயலில் இறங்கியுள்ளனர். தமது உயிர், சொத்து. உடமை பற்றி யாரும் உறுதி கொள்ள முடியாது. பாதாள உலகச் சம்பவங்கள் அதிகரித்த வண்ணம் உள்ளன. நோர்வேக்குழுவினரை அரசாங்கம், சமாதான முன்னெடுப்புக் குழுவாகச் சேர்த்துக் கொண்டிருக்கிறது. எனினும் கண்காணிப்புக் குழுவினருக்கு அதிகாரம் இல்லை. அறிக்கை வெளியிடுதல் மாத்திரமே நடைபெறுகிறது. ஏதும் ஒரு வகையான ஒழுங்குமுறையினையும் கட்டுப்பாட்டையும் செயற் படுத்துவதற்கான ஒரு அமைப்புத்தேவை.

தொழிலின்மைப் பிரச்சினை முன்னெப்போதும் இல்லாத வகையில் வேகமாக அதிகரித்து வருகிறது. அரசாங்கமும் விசேடமாகத் தொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்கவும் தொழில் அற்றவர்களின் தேவைகளையிட்டு தேடிப்பார்ப்பதாக உறுதி மொழி அளித்தபோதும் அது அத்துடன் நின்றுவிட்டது. விவசாயிகளுக்கு தமது உற்பத்திப் பொருட்களை விற்க முடியவில்லை. எனவே மீண்டும் அவர்கள் கோஷம் எழுப்பத் தொடங்கியுள்ளனர். தொழில் அற்றவர்களுக்கு ரூ 2000/= வழங்கு வதென அரசாங்கம் உறுதி மொழியளித்த போதிலும் இதுவரை செயற்படுத்தப்படவில்லை. இதனால் தான் எதிர்க் கட்சிக்கு வேலை நிறுத்தங்களில் ஈடுபடவும், கூட்டங்கள் நடத்தவும் வேண்டியேற்பட்டது. அது இன்னமும் முடியவில்லை. நாம் எதிர் காலத்தில் எமது கிளர்ச்சிப் போராட்டத்தைத் தொடரப் போகின்றோம்.



*ஜனாதிபதி குமாரதுங்க, புதிதாகத் தேர்தல் நடாத்தத் திட்டமிட்டுள்ளதாகக் கடுமையான வதந்தி பரவியுள்ளதில் ஏதும் உண்மை உண்டா?*

அந்த வதந்தியில் சிறிதளவு உண்மை இருக்கலாம். எனினும் தனிப்பட்ட முறையில் அவர் எமக்கு அறிவிக்கவில்லை. பதிலாகக் கட்சியை மீளமைக்கும் படியும், விஷேடமாக மாவட்ட ரீதியில் ஏற்பாடுகளைக் கவனிக்கும் படியும் எம்மைப் பணித்துள்ளார். எனவே அதற்கான அடிப்படைத் தேவைகளைக் கவனித்த வண்ணம் உள்ளோம்.

*எனவே மக்கள் கூட்டமைப்பு (பீ.ஏ) தேர்தல்களுக்குத் தயாராக உள்ளதா?*

எந்நேரமும் தயார். அரசாங்கத்தின் செயற்பாடுகள் சோர்ந்த நிலையில் உள்ளதால் ஐ.தே.மு. அரசைத் தோற் கடிக்கச் செய்ய எமக்கு அதிக வாய்ப்பு உள்ளது.

*உத்தேசிக்கப்பட்ட ஸ்ரீ.ல.சு.க. கூட்டமைப்பு தோல்வியில் முடிவடைந்தது. உண்மையில் என்ன நடந்தது. எவ்விடத்தில் பிழையேற்பட்டது.*

தொடக்கத்தில் இருந்தே அனைத்தும் தவறாக இருந்தன. ஸ்ரீ.ல.சு.க. அதிகாரப் பகிர்வை ஆதரிக்கும் அதேவேளை ஜே.வீ.பி. அதனை எதிர்க்கிறது. ஜே.வீ.பி. கட்சிக்கு விடயங்களை உணர்த்த முடியும் என நாம் எண்ணியிருந்த போதும் நாம் எண்ணியபடி நடக்க வில்லை இது தான் நடந்தது. உத்தேசக் கூட்டு பற்றிய பேச்சு வார்த்தையின் போது மக்கள் ஆதரவைப் பெற்ற ஜே.வீ.பி. கட்சி மேலும் அதிகமானவற்றைக் கோரத் தொடங்கியது. இதனை எம்மால் ஏற்க முடியவில்லை. அவர்கள் அதிக அதிகாரத்தையும், அதிகரித்த பங்கினையும் கோரி நின்றனர். அதன்பின்னர் தான் ஜே.வீ.பி.யைத் தூரமாக்கிவைக்க தீர்மானித்தோம்.

*ஜே.வீ.பி. கட்சி அதிகாரப் பகிர்வுக்கு எதிர்ப்பானது என்பதை முழு நாடும் அறிந்திருந்தும் ஏன் மக்கள் கூட்டமைப்பு (பீ.ஏ) தொடக்கத்தில் இதனையிட்டு சிந்திக்கவில்லை?*

அது ஒரு தவறு! ஜே.வீ.பி. கட்சியை உணரச்செய்து ஐ.தே.மு. அரசைச் தோற்கடிப்பதற்காக அவர்களையும் சேர்த்துக் கொள்ள திட்டம் இட்டிருந்தோம். எனினும் அதிகாரப்பகிர்வு பற்றிய எமது கொள்கையினைத் தியாகஞ் செய்ய. விட்டுக்கொடுக்க நாம் இணங்கவில்லை. எமது கட்சி ஒரு தேசியக்கட்சி என்பதை மறக்க முடியாது.

*ஜே.வீ.பி.யுடன் கூட்டுச்சேர்வது பற்றிய அபிப்பிராயம் யாரால் முன்வைக்கப்பட்டது?*

ஸ்ரீ.ல.சு. கட்சியின் சில உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்டது.

*அவர்கள் யார்?*

கலாநிதி சரத் அமுனுகம, அனுரா பண்டாரநாயக்க, மங்கள சமரவீர என்போர்

*பேச்சு வார்த்தைகளில் நீங்களும் பங்குபற்றினீர்களா?*

மூன்று பேச்சு வார்த்தைகளில் மட்டும் கலந்து கொண்டேன்.

*எல்லாப் பேச்சுவார்த்தைகளிலும் ஜனாதிபதி கலந்து கொண்டாரா? ஜே.வீ.பியுடன் பேச்சு வார்த்தை நடத்தும் படி தொடக்கத்தில் அவர் ஸ்ரீ.ல.சு. கட்சிக்கு அனுமதித்தாரா?*

ஜனாதிபதியும் சில பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றினார். ஜே.வீ.பியுடன் பேச்சுவார்த்தை நடத்திய எமது உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் விளக்கங்களைக் கூறினர். பேச்சு வார்த்தைகளின் இறுதியில் ஜனாதிபதியிடமும், என்னிடமும் விமர்சனம் கூற வேண்டுமென்பதே எமது இணக்கமாக இருந்தது. இதனால் தான் நாம் இறுதிப் பேச்சுவார்த்தைகளில் பக்கேற்கவில்லை. ஸ்ரீ.ல.சு. கட்சியின் இவ்வுறுப்பினர்கள் எவ்வாறேனும் ஜே.வீ.பி.யினரை உணரவைப்பர் என நாம் இருவரும் நம்பியிருந்தபோதிலும், அது நடைபெறவில்லை.

இந்த மூன்று உறுப்பினர்களும் விட்ட பெரும் தவறு, உத்தேசக் கூட்டமைப்பு பற்றி அளவுக்கதிகம் பிரசித்தப்படுத்தியமையாகும். விடயங்கள் முடிவாக முன்பே கூட்டுச் சேரப்போவதாக நாடு முழுவதும் பிரசித்தப்படுத்தப்பட்டது. இந்த மூன்று உறுப்பினர்களும் எனது அபிப்பிராயப்படி ஜனாதிபதிக்கும், நாட்டுக்கும் தவறான விளக்கம் அளித்துள்ளனர்.

நாம் பல ஆண்டுகளுக்கு முன் உத்தேசித்திருந்த அதிகாரப் பகிர்வு முறைக்கு ஜே.வீ.பியினர் இணங்கமாட்டார்கள் என்பதை இறுதியில் நாம் உணர்ந்தோம். உண்மையில் 1994ம் ஆண்டு நாம் மக்கள் கூட்டமைப்பை உருவாக்கிய போது இறுதி நேரம் வரை யாரும் அறிந்திருக்கவில்லை. நாம் பிரசித்தப்படுத்துவதை விரும்பவில்லையாதலால் இரகசியமாக வைத்திருந்தோம். நான் மட்டும் பிற கட்சிகளுடன் நடந்த கூட்டங்களில் 27க்கும் மேற்பட்ட கூட்டங்களுக்கு தலைமை தாங்கியுள்ளேன்.

*ஸ்ரீ.ல.சு. கட்சியுடன் கூட்டமைப்பை ஏற்படுத்த இம்முறை ஜே.வீ.பி. முயன்று பார்க்குமா?*

இல்லை நான் அவ்வாறு எண்ணவில்லை. உண்மையில் தேர்தலில் வெல்லுவதற்காக பதவியில் உள்ள அரசைத் தோற்கடிப்பதற்காக, எமது கட்சியின் கொள்கைகளை மாற்ற முடியாது. ஆனால் உண்மையில் ஜே.வீ.பி. கட்சி தனது தொடக்கக் கொள்கைகளை மாற்றியுள்ளதுடன். அக்கட்சி புது அடையாளத்தில் முன்னே வருகிறது. என நான் நம்புகிறேன். அவர்கள் எமது கொள்கைகளை ஏற்றுக் கொண்டால் நாம் அவர்களைச் சேர்த்துக் கொள்வோம்.

*இப்போது மக்கள் கூட்டமைப்பு (பீ.ஏ) முற்போக்குக் கட்சிகளை அழைக்கிறது. அதன் பதில் என்ன?*

குறுகிய காலத்துக்குள் அதனை எதிர்பார்க்க முடியாது. நாம் சில கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப் போகிறோம். எனினும் விஷேடமாக அவை. இனப்பிரச்சினை தொடர்பில் எமது கொள்கைகளை ஏற்க வேண்டும்.

*சிகல உறுமயக்கட்சி கடந்த வாரம் கிழக்கில் நடத்திய கண்டனப் பேரணியைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்.*

உறக்க நிலையில் இருந்த அரசாங்கத்தைத் தட்டியெழுப்ப விசேடமாகப் பாதுகாப்பு நிலவரம் குறித்து அதிக அக்கறை ஏற்படுத்த இது உதவியது. விசேடமாக திருகோணமலை தொடர்பாக அசிரத்தையாக இருந்த அரசை விழிப்படையச் செய்தது. மறுபுறம் சிகல உறுமயவின் இச்செயல் இனக் குழப்பத்திற்குத் தூபம் இடப்பட்டிருக்கலாம். ஓர் அரசியல் கட்சி தனது செயல்களின் இறுதி முடிவைப்பற்றி எண்ணிப் பார்க்க வேண்டும்.

*தம்மை மணிராசக்குள முகாம் வரை செல்வதில் இருந்து தடை செய்ததன் மூலம், அரசாங்கம் தமது உரிமைகளை மறுத்துள்ளதாக சி.உ. கட்சி கூறியுள்ளதே. தங்களது கருத்துக்கள் என்ன?*

அவர்கள் அவ்வாறு அனுமதிக்கப்பட்டிருந்தால் மோதல்கள் ஏற்பட்டிருக்கும்.. இதனால் நாட்டில் மேலும் ஒரு பெரும் கலகம் விளைந்திருக்கும்.

நன்றி : சன்டே லீடர்

## ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள் அனைத்தும் இழுத்து மூடப்பட உள்ளது!

நாட்டில் உள்ள அனைத்து ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளையும் மூடிவிட அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

தற்போது பட்டதாரி அடிப்படையில் ஆசிரியர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவதால் மேற்கொண்டும் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளை நடத்திக் கொண்டு போவதில் அர்த்தமில்லை என்றும், அவற்றுக்காக செலவிடப்படும் நிதி தேவையற்ற செலவாகுமென்றும், ஆகவே ஆசிரியர் பயிற்சி கலாசாலைகளை மூடி விட அரசு உத்தேசித்துள்ளதாகவும் கல்வி அமைச் சின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

ஆரம்பத்தில் இலங்கை பூராவிலும் 25 ஆசிரியர் பயிற்சி கலாசாலைகள் அமைக்கப்பட்டிருந்தன. தற்போது அவற்றுள் 14 ஆசிரியர் பயிற்சி கலாசாலைகளே செயற்படுகின்றன. அரசாங்கம் எடுத்துள்ள முடிவின் படி இந்த 14 ஆசிரியர் பயிற்சி கலாசாலைகளும் வெகு விரைவில் மூடப்பட்டு விடும்.


முஸ்லிம் குரலின் வளர்ச்சிக்கு பக்க பலமாக இருங்கள்

நமக்கான பத்திரிகைகளின் அவசியம் குறித்து நீங்கள் அறிவீர்கள். மக்களாகிய உங்களின் ஆதரவுடனேயே நமது பத்திரிகையை தொடர்ச்சியாக வெளிக்கொணர முடியும்! சந்தாதாரர்களாக சேருங்கள்! சகோதர சகோதரிகளுக்கும் அறிமுகப்படுத்துங்கள்! பத்திரிகையை வாங்கி விநியோகியுங்கள்!

சந்தா விபரம்!

3 மாதங்கள் - (12 இதழ்கள்) 250/-

6 மாதங்கள் - (24 இதழ்கள்) - 500/-

1 வருடம் - (48 இதழ்கள்) - 1000/-

(தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்)

காசோலையாகவோ, காசுக் கட்டளையாகவோ எமக்கு அனுப்பி வைக்கலாம். பத்திரிகையை விநியோகிக்கும் எமது ஊர் பிரதிநிதிகளிடமும் நேரடியாக கையளிக்கலாம். காசுக்கட்டளையாக அனுப்புவதாக இருந்தால் Muslim Kural Publiction Slave Island Post office எனக் குறிப்பிடவும்.



جمعية شباب مسلمي سيلان

ASSOCIATION OF MUSLIM YOUTH OF SAILAN

ஸவ்துல் இஸ்லாம் - 2003

கடந்த மூன்று வருடங்களாக ஜம்இய்யதுஷ் ஷபாப் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் தேசிய சேவையுடன் இணைந்து, தினமும் இரவு 10.15 முதல் 10.45 வரை "ஸவ்துல் இஸ்லாம்" என்ற நிகழ்ச்சியை நடாத்தி வருவதை நீங்கள் அறிவீர்கள்.

இன்ஷா அல்லாஹ் இவ்வருடமும் ஸவ்துல் இஸ்லாம் என்ற நிகழ்ச்சியை இலங்கை வானொலி தேசிய சேவையில் உங்களுக்காக வழங்கவுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

இந்நிகழ்ச்சியில் சன்மார்க்க விளக்கம், அல்குர்ஆன், அல்ஹதீஸ் விளக்கங்கள் மற்றும் மாற்று மத அன்பர்களின் இஸ்லாம் பற்றிய ஐயங்களுக்கான தெளிவுகளும் இடம்பெறவுள்ளன.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான், எமது நிகழ்ச்சிகளை கவனமாக கேளுங்கள். ஒலிபரப்பாகும் ஒவ்வொரு நிகழ்ச்சியின் இறுதியிலும் இரண்டு வினாக்கள் உங்களுக்காக காத்திருக்கின்றன.

போட்டியில் பங்குபற்றி பயன்மிகு பரிசில்களையும் வெல்லுங்கள்.
ஸவ்துல் இஸ்லாம் அறிவுப் போட்டியில் இணைந்து கொள்ள உங்கள் சுயமுகவரி எழுதிய முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையை அனுப்பி விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

*முகவரி :*
ஸவ்துல் இஸ்லாம்
அறிவுப் போட்டி,
JAMEIYATHUSH SHABAB,
18, GRINIER ROAD,
BORELLA, COLOMBO - 08

ADVT



முஸ்லிம் குரல் கவடு 23

24 ஒக்டோபர் 2003 Muslim Kural صوت المسلم මුස්ලිම් කුරල් 27 ஷஃபான் - 1424

181/1, Maligakanda Road, (White Park) Colombo - 10. Tel: 0777-389127, Fax: 01-2665831, E-mail: mm-s@eol.lk


## வடக்கும் எங்களது தாயகமே!

வடமாகாணத்திலிருந்து சகோதர முஸ்லிம்கள் இனச்சுத்திகரிப்புச் செய்யப்பட்டு 13 வருடங்கள் கடந்துவிட்டன. தொடங்கப்பெறும் இந்த பதினான்காவது ஆண்டிலாவது நமது சகோதர முஸ்லிம்கள் சுதந்திரமாக தங்களது சொந்தத்தாயகத்திற்கு திரும்பிச் செல்ல முடியுமா என்பது பதிலிறுக்கப்படாத கேள்வியாகவே வடக்கு முஸ்லிம்கள் முன் உள்ளது.

ஒரு புதிய பரம்பரை அகதி முகாம்களிலும் புகலிடங்களிலும் உருவாகி வளர்ந்து விட்டது. தாயகம் மீதான ஈர்ப்பு அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தை தொடங்கப்பட்ட காலத்தில் நமது வடமாகாண முஸ்லிம் மக்களுக்குள் துளிர் விடத்தொடங்கின.

எப்போது தமது தாயகத்தில் கால்பதிக்கப்போகிறோம் என்ற ஏக்கம் சுமந்த மன உணர்வுகள் மேலோங்கி நின்ற காலத்தில்தான், வன்னியில் பிரபா-ஹக்கீம் உடன்பாடு காணப்பட்டது. இவ் உடன்படிக்கையின் பிரதான அம்சங்களில் வடமாகாண முஸ்லிம்கள் தாயகத்திற்கு திரும்பும் உடன்பாடு பிரதானமாக இருந்தது- இச் செய்தியை அறிந்த வடமாகாண முஸ்லிம்கள் அதிக மகிழ்ச்சியை அடைந்தனர்.

விடுதலைப்புலிகளால் வழங்கப்பட்ட வாக்குறுதி, செயலளவில் நடைமுறைப்படுத்தப் படவில்லை. மீளத்தாயகத்திற்கு திரும்பிய ஒரு சில மக்கள் நேரடியாகவும் உளவியல் ரீதியாகவும் புலிகளின் செயற்பாட்டினால் பாதிக்கப்பட்டனர். தாயகத்திற்கு திரும்பும் எண்ணம் ஒரு கனவாகிப் போய்விடுமா என்கிற கேள்வி புலிகளின் நடத்தையினால் ஒவ்வொரு வடமாகணத்து முஸ்லிம்கள் மத்தியிலும் இன்று நிலைபெறத் தொடங்கி விட்டது.

இதுவரை டோக்கியோ, ஒஸ்லோ, தாய்லாந்து, என நடைபெற்ற பேச்சுவார்த்தை உடன்பாடுகளிலும் புனர்வாழ்வு, மீளக்குடியமர்வு போன்ற அடிப்படை விடயங்களிலும் வட மாகாண முஸ்லிம்களுக்கு எவ்விதமான உருப்படியான ஆதரவுகளும், திட்டங்களும் முன் வைக்கப்படவில்லை. முஸ்லிம் அரசியல் தலைமைகளால் கைவிடப்பட்ட மக்களாகவே வடமாகாண முஸ்லிம்கள் தொடர்ந்தும் நடத்தப்பட்டு வருகின்றனர்.

இந் நிலையில் சொல்லி மாளாத துயரத்திலிருக்கும் வடக்கு முஸ்லிம்களின் உணர்வுகள் இப்போது வெகுஜனப் போராட்டமாக மக்கள் அரங்குக்கு வருகின்றன. இப்போராட்டத்தை ஆதரித்துப் பலப்படுத்த வேண்டிய கடமை-அடக்கப்பட்ட மக்களின் மீது பற்றுக் கொண்ட ஒவ்வொரு மனிதனுக்கும் இன்றியமையாததாக உள்ளது.

விரட்டியடிக்கப்பட்ட வட மாகாணத்து முஸ்லிம்கள் சார்பில் இவ்வாரம் 'இனச்சுத்திரகரிப்பு செய்யப்பட்ட வடக்கு முஸ்லிம்கள் தங்களது சொந்த தாயகத்திற்கு சுதந்திரமாகத் திரும்பிச் செல்வதற்கான அரசியல் ஏதுக்களை ஏற்படுத்திக் கொள்வதற்கான போராட்ட வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது'. இப்போராட்டம் வெற்றிபெற்று நமது வடக்கு முஸ்லிம் மக்கள் தமது தாயகத்திற்குத் திரும்பிச் செல்ல எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திப்போமாக. அடிமைத்தனத்திற்கும் அடக்குமுறைக்கும் எதிரான மானிட விடுதலைக்காகப் போராட நாமனைவரும் உறுதிபூணுவோமாக!

பிரதம ஆசிரியர்

இப்பத்திரிகை 181/1 மாலிகாகந்த மாவத்தை, கொழும்பு 10. 'முஸ்லிம் குரல் பப்ளிகேஷன்' இனால் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org